DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc. Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வேகம் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1492
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday November 8, 2024

# மனிதத்தை வாழ்விக்கும் பரோபகாரி கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர் கணேசன் சுகுமார்



--- (நா. தனுஜா)

இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக் கொண்டவரும், தன் கடின உழைப்பால் கொழும்பில் பெருவர்த்தகராகத் தன்னை நிலைநிறுத்தியவருமான கணேசன் சுகுமார், நாட்டின் போர் சூழ்நிலை மற்றும் அதனால் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட எதிர்மறைத்தாக்கங்களின் விளைவாக 1992 ஆம் ஆண்டு அவரது மனைவி சுசீலாவுடன் கனடாவின் ரொறன்ரோ நகருக்குக் குடிபெயர்ந்தார்.

தன்வசமிருந்த ஆற்றலினாலும், தீரா உழைப்பினாலும் கனடாவில் மீண்டும் பூச்சியத்திலிருந்து தனக்கென ஒரு சாம்ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பிய சுகுமார், இன்றளவிலே கனடாவிலும் இலங்கையிலும் பலராலும் நன்கறியப்படும் ஒரு பரோபகாரியாகத் திகழ்கிறார்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

## Ontario's Premier graced as the Guest Speaker at a Scarborough Event, hosted by Scarborough Agincourt's MPP Aris Babikian with the supporters of the Progressive Conservative Party

## ஒன்றாரியோ மாகாண முதலவர் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட வைபவத்தை நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்த Scarborough Agincourt தொகுதியின் MPP Aris Babikian

*மூன்று தமிழ்மொழி சார்ந்த ஊடக நிறுவனங்களுக்கு விசேட அழைப்பு*

ஒன்றாரியோ மாகாண முதலவர் டக் போர்ட் அவர்கள் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட வைபவத்தை நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்த **Scarborough Agincourt** தொகுதியின் **MPP Aris Babikian** அவர்கள். மேற்படி முக்கிய வைபவத்திற்கு மூன்று தமிழ்மொழி சார்ந்த ஊடக நிறுவனங்களுக்கு விசேட அழைப்பை விடுத்திருந்தார்.

கனடா உதயன் பத்திரிகை நிறுவனம், யுகம் வானொலி ஊடகம் மற்றும் **BEHIND ME MEDIA GROUP** என்னும் ஐந்து மொழிகளின் தொலைக்காட்சி செய்திச் சேவையை நடத்திவரும் ஊடக நிறுவனம் ஆகியனவே மேற்படி தமிழ் மொழி சார்ந்த ஊடக நிறுவனங்கள் ஆகும்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)






தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் தங்கலாம்.
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839
என்னும் இலக்கத்தை அழைக்கவும்


SARAVANAA BHAVAN®
CANADA
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
TASTE THE
VICTORY
CONGRATULATIONS TO DONALD TRUMP ON A HISTORIC VICTORY!
A NEW CHAPTER FOR AMERICA BEGINS.
SCARBOROUGH 416 293 7755
MISSISSAUGA 905 290 0769
BRAMPTON 905 457 7575
DELTA B.C 778 578 7575


Friday, November 15
Miracle on Main Street
6–10 pm
Gage Park, Main St. S. & Wellington St.
Official Tree Lighting Ceremony
6:45 pm
Ken Whillans Square
Presented by alectra
Free admission on Friday with the donation of a new unwrapped toy in support of local organizations.
Saturday, November 16
Brampton Winter Artist Market
11–4 pm
Springdale Library
Brampton Santa Claus Parade
5 pm
Bramalea Rd.
Rotary
Winter Lights Festival
Presented by FIELDGATE DEVELOPMENTS
brampton.ca/winterlights
Proudly sponsored by
CAA Insurance Travel Roadside Rewards
Tim Hortons
BRAMPTON

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# வடக்கிலும் கிழக்கிலும் எதற்காக ஆயிரத்தை எட்டும் எண்ணிக்கையில் தேர்தல் வேட்பாளர்கள் "நிற்கின்றார்கள்"?

இலங்கையில் 2024 பொதுத் தேர்தல் எதிர்வரும் 14ம் திகதி நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு பொதுத் தேர்தல்களை விட. இந்தப் பொதுத்தேர்தல் தென்னிலங்கையைப் பொறுத்தளவில் முக்கியமானதும் நேர்மையானதுமான முடிவுகளைக் கொண்டு வரவேண்டும் என்று உலகமே எதிர்பார்க்கின்றது.

இவ்வாறான எதிர்பார்ப்பிற்கு காரணம் எதுவென்றால், இலங்கையின் இத்தனை ஆண்டு காலத் தேர்தல் வரலாற்றில். பொதுத் தேர்தலுக்கு முன்னதான ஜனாதிபதித் தேர்தலில் அந்த பதவியை வெற்றி கொண்டவராக விளங்கும் அநுர குமார அவர்களின் தொடர்ச்சியான இருப்பை தக்கவைப்பதும் பலமிக்கதான அவரது சகாக்கள் பாராளுமன்றத்தை அலங்கரிப்பதையும் இலங்கை மக்களில் பெரும்பாலானவர்களும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். தற்போதைய ஜனாதிபதி அவர்களின் தலைமைத்துவத்திற்கு ஆதரவுக் கரங்களாக விளங்கும் வேட்பாளர்கள் வெற்றிபெற்று பாராளுமன்றத்தின் பலத்தை நிரூபிப்பதும் அதன் மூலம் நேர்மையான ஒரு ஆட்சியை நடத்தி எந்த நோக்கதிற்காக அநுர குமார என்னும் "அசல்" வேட்பாளரை அந்தப் பதவியில் அமர்த்தினார்களோ அதன் தொடர்ச்சியையும் பலாபலன்களையும் நேரடியாக அனுபவிக்கும் அற்புதக் காட்சிகள் அந்த மாங்களித் தீவில் எங்கும் தென்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இலங்கையில் மாற்றத்தை விரும்பும் தரப்பினருக்கு தோன்றியுள்ளதன் விளைவே புதிதான் தேர்தல் முடிவுகள் அமைய வேண்டும் என்பதை விரும்பும் தரப்பினரின் அவா என்பதும் நன்கு புரியவைக்கப்பெற்றுள்ளது.

ஆனால். வடக்கிலும் கிழக்கிலும் ஈசல்கள் போன்று பறந்து திரியும் பல வர்ணங்களைக் கொண்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, அது ஆயிரத்தைத் தாண்டுவதாகவே தோன்றுகின்றது.

வடக்கிலும் கிழக்கிலும் வாழும் பொது மக்கள் இவ்வாறு ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் தங்களிடம் வந்து "வாக்குப் பிச்சை" கேட்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பு என்பதும் தென்னிலங்கை மக்கள் எதிர்பார்ப்பதைப் போன்றே உணரப்படுகின்றது. இதில் தவறேதும் இருப்பதாக நாம் எண்ணிவிடக் கூடாது.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மக்கள் நம்பிக்கை வைத்து தேர்ந்தெடுத்த ஒரு தலைவர் வீற்றிருக்கின்றார். அவரது கரத்தைப் பலப்படுத்தும் வேட்பாளர்களோ அன்றி அவருக்கு ஆதரவை வழங்கவுள்ள வேட்பாளர்களோ எண்ணிக்கையில் அதிகளவு தேர்ந்தெடுக்கப்பட்டால் இதுவரை காலமும் ஏமாற்றப்பட்ட இலங்கை மக்கள் அனைவரும் மூச்சு விடக்கூடிய "முனைப்புகள்" அரசில் தளத்திலும் ஆட்சியாளர்கள் மட்டத்திலும் தோன்றலாம் என்ற காத்திருப்புக்கள் தோன்றியிருப்பதும் யதார்த்தமானவையே என்று நாம் கருதுகின்றோம்.

ஆனால் வடக்கில் தற்போது போட்டியிடும் சில வேட்பாளர்களோடு தேர்தல் பற்றி உரையாடியபோது அல்லது அவர்களது நோக்கம் எதுவென்று வி-னவிய போது. பல ஆண்டுகளாக அரசியல் தளத்தில் நிற்பவர்கள் கூட முன்னாள் ஜனாபதிகளான ரணில், மகிந்த ராஜபக்ச. அல்லது கோட்டாபாய போன்றவர்களின் சகாக்களே பாராளுமன்ற ஆசனங்களை அதிகளவு கைப்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். அதன் காரணமாக அவர்கள் வடக்கிலும் கிழக்கிலும் "அநுர குமார" எதிர்ப்பு பிரச்சாரத்தையே மறைமுகமாக மேற்கொண்டு வருகின்றார்கள். தென்னிலங்கையைப் போன்று வடக்கிலும் கிழக்கிலும் மாற்றம் ஒன்று தேவையில்லை என்ற சிந்தனையையும் அவர்கள் பரப்பி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. அப்படியானால் அவர்களின் கனவுகளில் சாராய பார் அனுமதிப் பத்திரங்களும் கோடிக்கணக்கான பணம் நிறைந்த "சாக்குப் பைகளும்" தான் வந்து போகின்றன என்ற கேள்வியை அவர்களிடம் முன்வைக்கலாம் என்று மக்களும் விரும்புகின்றார்கள்!






# உண்மைக்கு புறம்பான அவதூறு பரப்பிய எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## சுமந்திரனுக்கு அடிமையாகி அரசியல் செய்ய மாட்டேன் என்றும் தெரிவிப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-11-2024)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் உண்மைக்கு புறம்பாக தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் வெளியிட்டமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக ஞாயிற்றுக்கிழமை (3) மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் தமிழரசு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தான் மதுபானசாலைக்கு சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் அதை நான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டதாகவும் உண்மைக்கு புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுமந்திரன் அவர்கள் கூறியிருந்தார்.

இந்த கருத்தை அவர் கூறிய சமயம் நான் இந்தியாவில் இருந்தமையினால் மன்னார் வந்தவுடன் உண்மைக்கு புறம்பான கருத்து வெளியிட்டமை தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

புலம்பெயர் தமிழர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான உதவிகளை கோரிய போது அவர்களின் தேவைகள் நிமித்தம் நான் அந்த சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான உதவிகளை செய்து கொடுத்தேன். அவ்வாறு சந்தித்தவர்களில் தனிப்பட்ட பழக்கத்தின் காரணமாக யாரும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி மதுபான சாலைகள் அமைப்பதற்கான அனுமதியை பெற்றிருந்தால் நான் அதற்கு பொறுப்பாக முடியாது.

நான் அண்மையில் ஒரு ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலாக வழங்கி யிருந்தேன். ஆனால் சுமந்திரன் அவர்கள் உண்மைக்கு புறம்பாக நான் எழுத்து மூல சிபாரிசு வழங்கியதாகவும் அதை ஒத்துக் கொண்டதாகவும் சொன்ன கருத்தை வன்மையாக கண்டிப்பதோடு பொலிஸார் குறித்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

அதனால் தான் தனக்கு இம்முறை ஆசனம் வழங்கவில்லை என சுமந்திரன் குறிப்பிடுவதாகும் அது முற்றிலும் பொய் என்றும் 2020 ஆண்டில் இருந்தே கட்சியில் செயற்பாடுகளில் இருந்த அதிருப்தி காரணமாக, உளவியல் ரீதியாக கட்சியோடு பயணிப்பதா? இல்லையா? என்ற மனநிலை இருந்து வந்ததாகவும் அதே நேரம் எனது சுயவிருப்பத்தினாலும் உடல் நல பிரச்சினைகளாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும் நானாக மேற்கொண்ட முடிவே அது என அவர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக சுமந்திரன் 2020 ஆண்டுக்கு பிறகு விடுதலை புலிகளுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில் அவருக்கு எதிராக தான் சம்பந்தன் அவர்களுக்கு கடிதம் எழுதியதாகவும் சுமந்திரன் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவருக்கு எக்காரணம் கொண்டும் கட்சியின் பதவி நிலைகள் வழங்க கூடாது எனவும் எழுத்து மூலமாக சம்பந்தன் ஐயாவுக்கு எழுதியிருந்தேன்.

அத்துடன் கடந்த 2020 ஆண்டு தேர்தலின் போது சுமந்திரன் வன்னியில் ஏறும் எந்த அரசியல் மேடைக்கும் நான் ஏற மாட்டேன் என தெரிவித்திருந்தேன். அதே போன்று எந்த அரசியல் மேடையிலும் ஏறவில்லை. அதன் காரணம் என்ன என்றால் சுமந்திரன் பிரச்சாரம் செய்து அதில் ஒரு வாக்கு விழுந்து நான் வெற்றி பெற கூடாது என்பதற்காகவே.

அவ்வாறான நிலையில் அவர் எனக்கு எதிராக பல வேலைகள் செய்திருந்தார். இருந்தாலும் வன்னி தேர்தல் தொகுதியில் தமிழரசு கட்சி சார்பாக அதிக வாக்குகளை பெற்று நான் வெற்றி பெற்றேன்.

அதே நேரம் அண்மையில் கட்சியின் தலைமைத்துவம் சம்பந்தப்பட்ட விடயத்தில் சுமந்திரன் தலைவராக வந்துவிட கூடாது. என்பதற்காக நான் நேரடியாகவே சிறிதரனுக்கு ஆதரவாக செயற்பட்ட துடன் சுமந்திரன் தலைவராக வர முடியாமைக்கு நான் பெறும் பங்காற்றி இருந்தேன். அதுவும் அவருக்கு நன்றாக தெரியும்.

இப்படியாக கட்சியில் இருந்த அதிருப்தியான நிலமை காரணமாக இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கு தேர்தலில் போட்டியிட வேண்டாம் என தீர்மானித்திருந்தேன்.

சுமந்திரனுடன் 2020 ஆண்டில் இருந்தே முரண்பாடு களோடுதான் பயணித்தேன். இவ்வாறு இருக்க இந்த தேர்தலில் சுமந்திரனுக்கு அடிமையாக தேர்தல் கேட்க முடியாது.

என்னை பொறுத்த வரையில் வன்னி மாவட்டம் திருகோணமலை மாவட்டம் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கபட வேண்டும். ஏன் என்றால் இந்த பகுதிகளில் சிங்கள முஸ்லிம் அரசியல் வாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

ஆனால் சுமந்திரனின் இவ்வாறான தொடர்சியான செயற்பாடுகளால் கட்சி அங்கத்தவர்களும் மக்களும் புலம்பெயர் அமைப்புகளும் மன விரக்தியில் இருக்கிறார்கள் என்பதை பதிவு செய்கின்றேன்.

அதே நேரம் சுமந்திரனுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் ஒன்றை தெரிவித்து கொள்கிறேன். நான் எந்த ஒரு மதுபான சாலைக்கும் அனுமதி பெறவும் இல்லை யாருக்கும் சிபாரிசு செய்யவில்லை. எனக்கு அறிமுகமானவர்கள் அதை பெற்றிருந்தால் அது அவர்களின் தனிப்பட்ட விடயம். அதற்கு நான் எந்த சிபாரிசு கடிதம் கொடுக்கவில்லை என்பதை தெரிவிப்பதுடன் அவருடைய கருத்து தொடர்பில் நான் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

அதே நேரம் தேர்தல் நியமனத்திற்காக நான் தேர்தல் கேட்பதாக விண்ணப்பிக்கவில்லை. அதே நேரம் தற்போது இருக்கும் தமிழரசு கட்சி நிர்வாகத்தோடு பயணிக்க முடியாது என்பதுடன் சுமந்திரன் சொல்லும் எல்லாவற்றுக்கும் தலையாட்டி கொண்டு இருக்க முடியாது என்பதால் தேர்தலில் இருந்து நானாக தான் விலகினேன்.

சுமந்திரன் தலைவராவதில் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் பல்வேறு வன்மத்தை மனதில் வைத்து முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் அவர் சார்ந்தவர்களும் தொடர்ந்து சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

# பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் மன்னாரிற்கு இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய விஜயம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (04-11-2024)

பிரதமர் ஹரிணி அமரசூரிய 4ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணியளவில் மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்தார்.

பாராளுமன்ற தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இதன் போது தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி) கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரனும் கலந்து கொண்டார்.



மேலும் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் உள்ளடங்களாக சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதமரின் வருகையை ஒட்டி மன்னார் நகர பகுதியில் பலத்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டது. மேலும் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற மக்கள் கடுமையான உடல் சோதனைக்கு உற் படுத்தப்பட்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் மரித்த ஆன்மாக்களை நினைவு கூறும் நிகழ்வு — பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு. கல்லறைகளில் குடும்பத்துடன் உருக்கமுடன் மன்றாடி அஞ்சலி.



- எஸ்.ஆர்.லெம்பேட் (03-11-2024)

உலகளாவிய ரீதியில் கத்தோலிக்க திருச்சபையினால் முன்னெடுக்கப்படும் மரித்த விசுவாசிகளின் நினைவு கூர்ந்து நித்திய இழைப்பாற்றிக்காகவும் மோட்ச இராட்சியத்தில் சேர்ந்து கொள்ளவும் சிறப்பாக செபிக்கும் தினம் கடந்த 2ம் திகதி சனிக்கிழமை ஆகும்.

மன்னார் பேசாலை கல்லறை தோட்டத்தில் புனித வெற்றி நாயகி ஆலயத்தின் பங்குத்தந்தை மற்றும் உதவி பங்கு தந்தையர்களின் தலைமையில் இரங்கல் திருப்பலி. மற்றும் மரித்த விசுவாசிகளின் கல்லறைகள் ஆசிர்வதித்து அர்சிக்கப்பட்டது.

மரித்த விசுவாசிகளின் கல்லறைகளில் உறவினர்கள் நினைவு அஞ்சலி செலுத்தி உருக்கத்துடன் மன்றாடி நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் மன்னார் மாவட்ட பகுதிகளில் உள்ள கத்தோலிக்க கல்லறை தோட்டங்களிலும் இவ்வாறான நிகழ்வுகள் இடம் பெற்றது.

உலக கத்தோலிக்க திருச்சபை ஒரு சிறப்பான நாளாக நவம்பரம் 2ம் திகதியை முன்னெடுப்பது சுட்டிக் கட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை வலுப்படுத்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்கும் முடிவை வரவேற்கின்றோம்

## சங்கு சின்னத்தில் போட்டியிடும் இரா. துரைரெட்ணம் தெரிவிப்பு

கனகராசா சரவணன்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தமிழர்களுடைய பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்காக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அறைகூவல் விடுத்து தமிழரிடம் ஒற்றுமையை வலுப்பெற வைப்பதற்காக அவர் எடுத்த முடிவை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். எனவே எதிர்காலத்தில் வலுவான தமிழ் தேசியத்தின் ஒற்றுமையை வலுப்படுத்தவும் தமிழ் தேசிய பிரச்சினை அபிவிருத்தி போன்ற விடயங்களை பெற பேரம் பேசும் சக்தியாக வலுப்பெற உங்களுடைய வாக்குகளை சங்கு சின்னத்துக்கு அளிப்பதன் ஊடாக நாங்கள் வலுவான சக்தியாக செயல்பட முடியும் என சங்கு சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள அவரது ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சி காரியாலயத்தில் நவம்பர் 2ம் திகதி அன்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எய்பொருத்தவரையில் மக்களிடம் இருந்து ஆணையை பெறுவதற்காக எதிர்வருகின்ற பாராளுமன்ற தேர்தல் ஒரு வலுவான தமிழர்களின் ஒற்றுமைகளை நிரூபிப்பதற்காக தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேரம் பேசும் சக்திகளாக மாற்றுவதற்காக சர்வதேச ரீதியாக எமது பிரச்சினை தொடர்பாக சட்டரீதியாக எடுத்து இயம்புவதற்காக மாவட்டத்திலுள்ள அபிவிருத்தி மற்றும் பிற விடயங்களை அவதானித்து அமுல்படுத்துவதற்காக நாங்கள் சங்கு சின்னத்தில் வடக்கு கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளோம்.

தேர்தலில் தமிழ் மக்களாகிய எமக்கு தமிழர்களின் ஏகோபித்த ஒற்றுமையை வலியுறுத்த தமிழ் தேசியத்தை ஒற்றுமையை வலியுறுத்தி இலங்கை அரசாங்கத்தின் மோசமான செயற்பாடுகளை நாங்கள் எடுத்து வெளிப்படுத்துவதற்காகவும் எமது விடயங்களை அடித்து உரித்து பேசுவதற்காகவும் இந்த ஜனநாயக தேடல் களத்தில் நாங்கள் இறங்கியுள்ளோம்.

இந்த பாராளுமன்ற தேர்தல் ஊடாக 2025 ஆம் ஆண்டு பாராளுமன்றம் ஊடாக எமது விடயங்களை பேரம் பேசும் சக்தியாக கொண்டு வருவதற்கு உங்களிடம் நாங்கள் ஆணை கேட்டு நிற்கின்றோம் இந்த ஆணைகளை நீங்கள் எதிர்காலத்தில் எங்களுக்கு வழங்குவதன் ஊடாக வலுவான சக்தியாக் செயல்பட முடியும்.


மட்டக்களப்பு மாவட்டத்தில் 27 சுயேச்சைக்குழுக்கள் 22 கட்சிகள் களமிறக்கப்பட்டுள்ளது எனவே மாவட்டத்தில் தமிழர்களுடைய விகிதாசாரத்தை பொருத்தவரையில் மொத்தமாக பாராளுமன்றத்தில் ஐந்து பிரதிநிதிகளை தெரிவு செய்ய முடியும் அதில் விகிதாசார் அடிப்படையில் முஸ்லிம் ஒரு பிரதிநிதியும் தமிழர்கள் நான்கு பிரதிநிதிகளை பெற்றே ஆக வேண்டும் எமக்குள்ள விகிதாசார அடிப்படையில் மாவட்டத்தில் நாங்கள் நான்கு தமிழ் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு வலுவான என்பதை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நாங்கள் நிரூபிக்க வேண்டும்.



முன்னாள் இராஜாங்க அமைச்சர எஸ்.வியாழேந்திரன் தமிழர்களுடைய பிரதிநிதித்துவத்தை பாதுகாப்பதற்காக சங்கு சின்னத்துக்கு வாக்களிக்குமாறு அறைகூவல் விடுத்து தமிழரிடம் ஒற்றுமையை வலுப்பெற வைப்பதற்காக அவர் எடுத்த முடிவை நாங்கள் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம் அதேவேளை அந்த முடிவுகளையும் வாக்காக மாற்றுவதற்கு அவரும் அவருடைய கட்சி சார்ந்த தொண்டர்களும் எமக்கு ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் இந்த ஆதரவை வலுப்பெற வைப்பதற்காக உழைப்பதோடு மாவட்டத்தில் மூன்று வலுவான தமிழ் பிரதிநிதிகளை சங்கு சின்னத்திற்கு வழங்குவதற்காக ஆனைகளை மக்கள் தருவார்கள் என்று நாங்கள் நம்புவதோடு எனக்கு வாக்களித்து என்னை வெற்றி பெற செய்பவர்கள் என்பதை நான் நம்புகின்றேன்.

அதேவேளை மாவட்டத்தை பொறுத்தவரையில் களம் கண்ட தமிழர்கள் இந்த போராட்டங்களுக்காக பல்லாயிரக்கணக்கான சொத்துக்களை இழந்து பல்லாயிரக்கணக்கான உயிர்களை இழந்து 23 ஆயிரத்து 43 முப்பதுக்கு மேற்பட்ட தலைமை தாங்கும் பெண் குடும்பங்களைக் கொண்ட இந்த மாவட்டம் தமிழர்களது பிரச்சினை தீர்க்கப்பட முடியாது என வலுவாக தற்சமயம் தெரிவு செய்யப்பட்டு இருக்கின்ற ஜேவிபியின் ஜனாதிபதி வலுவாக கூறுகின்ற நிலையில் இந்த மாவட்ட மக்கள் எதிர்வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் ஜேவிபி காட்சிகளுக்கு சரியான பாடத்தை புகட்டுவார்கள் காட்டுவார்கள் என நான் நம்புகின்றேன்.

இந்த மக்கள் சோரம் போகின்ற மக்கள் அல்ல வலுவாக போராட்டங்களுக்கு உயிர் ஊற்றியவர்கள் அந்த தியாகத்தை அவர்கள் எதிர் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் நிரூபித்து சங்கு கட்சிக்கும் எனக்கு வாக்களிப்பார்கள் என்பதை சர்வதேசத்திற்கு நாங்கள் பறைசாற்ற விரும்புகின்றோம் ஆகவே வாக்குரிமை என்பது ஒரு சிறப்புரிமை அதனை எதிர் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் நீங்கள் சங்கு சின்னத்திற்கும் எனது இலக்கமாகிய ஐந்துக்கும் வாக்களிக்குமாறு தங்களிடம் அறைகூவல் விடுக்கின்றேன் ஏன்றார்.




தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
ரொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் கனிய மண் ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக் கொள்ள மக்கள் எதிர்ப்பு

## பொலிஸார் மன்றில் தொடுத்த வழக்கை கை மீள பெற்றனர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (06-11-2024)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணி உட்பட அரச காணிகள் அனுமதியின்றி அபகரித்து நடை முறைப்படுத்தும் கனிய மணல் அகழ்வுக்கு கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மக்கள் மற்றும் பொது அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் மன்னார் பொலிஸாரினால் மன்னார் நீதிமன்றத்தில் 6ம் திகதி அன்றைய தினம் புதன்கிழமை மதியம் தொடுக்கப்பட்ட வழக்கு பொ-லிஸாரினால் கை வாங்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி எஸ்.டினேசன் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சுற்றுச்சூழல் அதிகார சபையின் அனுமதியுடன்,மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், உள்ளடங்களாக சுமார் 20 அரச திணைக்கள அதிகாரிகள், மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக் கொள்ளும் வகையில், புதன்கிழமை (6) காலை குறித்த பிரதேசத்திற்கு வருகை தந்தனர்.

இதன் போது அப் பகுதிக்கு வருகை தந்த மக்கள், சமூக செயற்பாட்டாளர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், சிவில் அமைப்புகள் அவ்விடத்திற்கு வந்து கனிய மண்ணை ஆய்வு செய்வதற்கான மாதிரிகளை பெற்றுக்கொள்ள தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன் போது பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இதன் போது எதிர்ப்பு தெரிவித்த நிலையில், மன்னார் பொலிஸார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சட்டத்தரணி எஸ்.டினேசன், பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் உள்ளடங்களாக சிலருக்கு எதிராக "B". அறிக்கையினை குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை 106ன் கீழ் தாக்கல் செய்து குறித்த நபர்களுக்கு எதிராக தடை உத்தரவு கோரி இருந்தனர்.



குறித்த 106 வது பிரிவின் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடு படாமல் இருக்கவும்,குறித்த செயல்பாட்டிற்கு தடை விதிக்க கூடாது என்பதன் அடிப்படையில் குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விண்ணப்பம் செய்யப்பட்டது.

குறித்த விண்ணபத்தின் போது திடீர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் விண்ணப்பம் நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் வெளியில் சென்று மீண்டும் மன்றினுள் வந்து குறித்த விண்ணப்பத்தை தாங்கள் மீண்டும் கை வாங்குவதாகவும் மன்றில் விண்ணப்பம் செய்தனர்.

அதன் அடிப்படையில் குறித்த வழக்கு கை வாங்கப் பட்டுள்ளது என சட்டத்தரணி எஸ்.டினேசன் மேலும் தெரிவித்தார்.


மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஓலைத்தொடுவாய் வள நகர் பிரதேசத்தில் மக்களின் தனியார் காணிகளை அனுமதியின்றி அபகரித்து நடை முறைப்படுத்தும் கனிய வள மணல் அகழ்வுக்கான கூர்ப்பு ஆவணம் தயாரிக்கும் நடவடிக்கைக்காக புதன்கிழமை (06) மன்னார் மற்றும் தென் பகுதிகளில் உள்ள சுமார் 20 வரையிலான திணைக்கள அதிகாரிகள் வாகனங்களில் குறித்த பகுதிக்கு வருகை தந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் வருகை தருவதை அறிந்த அக்கிராம மக்கள், பொது அமைப்புக்கள் உள்ளடங்களாக நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு குறித்த பகுதிக்கு செல்ல முடியாது பாதையை தடுத்ததுடன் அதிகாரிக-ளுடன் முரண்பட்டனர்.

அத்துடன் சம்பவத்தை அறிந்து மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவன பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள், மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலரும் சம்பவ இடத்துக்குச் சென்று இப்பகுதிக்கு அதிகாரிகள் வந்தமை தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன்போது பொலிஸார் மற்றும் பொது மக்களுக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பொலிஸாரின் ஒத்துழைப்புடன் அப்பகுதியில் கனியவள மணல் அகழ்வதற்கான இடங்களை பார்வையிடுவதற்கு உட்செல்ல முயன்ற நிலையில் மக்கள் திரண்டு இதற்கு எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மாவீரர் துயிலும் இல்லங்களின் துப்பரவு பணிகள் ஆரம்பம்! கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்பரவுப்பணி இடம்பெற்றது

பு. கஜிந்தன்



எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இம்மாதத்தின் ஆரம்பத்தில் இருந்து துயிலும் இல்லங்கள் துப்புரவு பணிகள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக 01-11-2024 அன்றையதினம் கோப்பாய் துயிலும் இல்லம் முன்பாக துப்பரவுப்பணி இடம்பெற்றது.

இந்த துப்பரவு பணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோர் இணைந்துள்ளனர்.



# தமிழ் தேசியம் பேசியவர்கள் கூட்டமைப்பை அழித்ததை விட எதையும் செய்யவில்லை என வேட்பாளர் மணிவண்ணன் குற்றச்சாட்டு!

தமிழ் தேசியம் என்று பேசுவார்கள் விடுதலைப் புலிகளின் முழுமையான ஆதரவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை அழித்ததை தவிர வேறு எந்த உரிமைகளையும் வென்றெடுக்கவில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

01-11-204 அன்று சுழிபுரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு சென்றவர்களை இரண்டு வகையாக பிரித்துக் கொள்ள முடியும். தமிழ்த் தேசிய அரசியலை நாங்கள் முன்னெடுக்கப் போகின்றோம், எங்களுடைய மாவீரர்களின் கனவுகளை நாங்கள் சுமந்து செல்ல போகின்றோம், அந்த விடுதலையை வென்றெடுக்க போகின்றோம் என ஒரு தரப்பு பாராளுமன்றம் சென்றது.

15 ஆண்டுகளாக நாங்கள் தமிழ்த் தேசியம் வேண்டும் என்று நாங்கள் வாக்களித்துக் கொண்டிருந்தோம். ஆனால் எதனை இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு சென்று சாதித்தார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம் கேட்க வேண்டும்.

2001 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவரால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு அது இன்று அது இந்த தேர்தல் பரப்பிலேயே இல்லாமல் அழிக்கப்பட்டிருக்கிறது. இதுவா தமிழ் தேசியத்தை வென்றெடுக்கின்ற தரப்புகளின் சாதனை.

எங்களுடைய தேசிய காட்சிகள் எனக் கூறியவர்கள் இன்று எங்களைப் பிரித்து, அழித்து நீதிமன்றங்களில் வழக்குகள் உள்ள அவல நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் பேசி சம்'டியை பெற முடியவில்லை. ஆகக் குறைந்தது மாகாண சபையின் காலம் முடிந்த பின்னர் அதனை நடததுவதற்கு கூட இந்த அரசியல் தலைவர்களிடம் வக்கில்லாமல் காணப்பட்டது.

தமிழ்த் தேசியம் தமிழ்த் தேசியம் எனக்கூறி எதையுமே சாதிக்காமல் மீண்டும் ஒரு தடவை எங்களுக்கு ஆணை தாருங்கள் என உங்கள் முன் வந்திருக்கின்றார்கள். நாங்கள் இன்னும் ஒரு ஐந்து வருடங்கள் அவர்களுக்கு ஆணை கொடுத்தால் தமது கட்சி பிரச்சினையை நீதிமன்றத்தில் வழக்காடி தீர்த்துக் கொள்ள முயல்வார்களே தவிர, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்யப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரசு கட்சியின் வேட்பாளர்களின் ஒழுக்கம் தொடர்பில் மக்களுக்கு சந்தேகம்

## மிதிலை தெரிவிப்பு!

தமிழரசு கட்சியில் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிடும் சிலரின் தனிப்பட்ட ஒழுக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் சிறந்த அபிப்பிராயம் இல்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 02-11-2024 அன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் ஊடகப் பேச்சாளர் அண்மையில் ஒரு ஊடக சந்திப்பில் தமிழரசு கட்சியில் பல வருடங்களாக அங்கத்தவர்களாகவும் பொறுப்பு மிக்க பதவியில் இருந்து வெளியேறியவர்களை கிண்டல் அடிக்கும் வகையில் இரு மாங்கனிகள் என தெரிவித்திருந்தார்.

நான் அவரிடம் கேட்க விரும்புகிறேன் தமிழரசு கட்சியிலிருந்து ஆளுமையான பெண்களை நீக்கி விட்டு காடு மேடு அலைந்து திரிந்து இரண்டு வெம்பல் மாம்பழங்களை அழைத்து வந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைத்துள்ளார்.

அதுமட்டுமல்லாது தமிழரசு கட்சியில் இப்போது வேட்பாளராக களம் இறங்கியவர்கள் சிலரின் ஒழுக்கங்கள் தொடர்பில் ஏற்கனவே சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டமை பலருக்கு தெரியும்.

நான் பிரசார நடவடிக்கைகளுக்கு செல்லும்போது தமிழரசு கட்சியின் வேட்பாளர்கள் சிலரின் பெயர்களை கூறி அவர்களின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

குறிப்பாக நான் ஒரு பெண் வேட்பாளராக இருக்கின்ற நிலையில் பல பெண்கள் என்னிடம் நேரடியாகவே தெரிவித்தார்கள் தமிழரசு கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் சிலரின் பெயர்களைக் கூறி அவர்கள் சுய ஒழுக்கம் அற்றவர்கள் எவ்வாறு அவர்களுக்கு ஆசனம் வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பினார்கள்.

நான் அவர்களிடம் கூறினேன் தமிழரசு கட்சியின் நிலைமை அவ்வாறு தான் இருக்கிறது திறமையானவர்கள் நேர்மையானவர்கள் கட்சியில் இருந்து விலகி விட்டார்கள் என்றேன்.

அது மட்டுமல்லாது முன்னர் புலம்பி திரிந்த மதுபான அனுமதிப்பாத்திரம் தொடரில் தற்போது மீண்டும் புலம்ப ஆரம்பித்துள்ளார்.

மதுபானம் அருந்தி ஏற்படும் உடல் நல கேட்டுக்கு மேலாக தமிழ் மக்களை தமிழரசு கட்சியும் ஊடகப் பேச்சாளரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழினத்துக்கு கேடுகளை விளைவித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில் அரசாங்கத்தை காப்பாற்றுவதற்காக ஜெனிபாவில் கால அவகாசத்தை பெற்றுக் கொடுத்தனர்.

சஜித் பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரை திட்டத்துக்கு ஆதரவு வழங்கி அவருக்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களை கோரினர்.

மேலும் அதன் மூன்றாம் திருத்தத்தை அமல்படுத்த விடாமல் குதர்க்கங்களை மேற்கொண்டதோடு புதிய எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்து மாகாண சபை தேர்தலையே நடத்த விடாமல் தடுத்ததில் இவர்களுக்கு பாரிய பங்கு உண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்ப்பாண அபிவிருத்தி நிதியம் ஒன்றினை உருவாக்கி அதனூடாக சேவையாற்றவுள்ளதாக வி.மணிவண்ணன் தெரிவிப்பு



யாழ்ப்பாண அபிவிருத்தி நிதியம் ஒன்றினை உருவாக்கி அதனூடாக சேவையாற்றவுள்ளதாக வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திறக்கு என ஒரு அபிவிருத்தி நிதியத்தை உருவாக்கி அதனூடாக மக்களினுடைய பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை



தீர்ப்பதற்க்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளரும் சட்டத்தரணியும், முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை மேஜருமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம், புனிதநகர் பகுதியில் மக்களுடன் இடம் பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இம்முறை மக்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் குறிப்பாக கடந்த காலங்களில் பாராளுமன்றம் சென்றவர்கள், மக்களுக்கு எதுவும் செய்யதாவர்களை நிராகரிக்க வேண்டும் என்றும், இளைஞர்களை தெரிவு செய்து அவர்களை பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இதே வேளை அங்கு கருத்து தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சிறப்பரன் பெண்கள் தமது விருப்பு வாக்குகளை பெண்களுக்கே வழங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் புனிதநகர், கற்கோவளம் பகுதி இளைஞர்கள், பெண்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# முன்னாள் போராளிகளுக்கு அங்கீகாரம் தேவை என்பதற்க்காகவே நாம் போட்டியிடுகிறோம்

## ஜனாநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன்



முன்னாள் போராளுகளுக்கான அங்கீகாரம் தேவை என்பதற்காகவே தாம் 2024ம் ஆண்டிற்க்கான தேர்தலில் போட்டியிடுவதாக ஜனாநாயக தமிழ் தேசிய கூட்டணியில் போட்டியிடும் ஜனாநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் வடமராட்சியில் 06-11-2024 அன்றையதினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னிலங்கையிலே ஒரு மாற்றத்தை கொண்டுவந்தது சிங்கள மக்கள் ஆனால் அவர்கள் எமது பகுதிக்கு வந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போவது என்பது ஒரு வேடிக்கையான விடயம், இணைந்திருந்த வடக்கு கிழக்கையும் பிரித்தவர்கள் இந்த ஜேவிபியினர்தான்.

அதேபோன்று சுனாமி கட்டமைப்பையும், இல்லாமல் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை கூட இல்லாமல் செய்தவர்களும் இவ் ஜேவிபியினர்தான்.

அதேபோன்று ஐ.நாசபையில் கொண்டுவரப்பட்ட யுத்த குற்ற பிரேரணை தொடர்பில் இலங்கையில் யுத்த குற்றம் நடைபெறவில்லை, தாம் எந்த சர்வதேச நீதிமன்றத்திலும் விசாரணைக்கு போகத் தேவை இல்லை என்று சொன்னவர்களும் இந்த ஜேவீபியினர்தான்.

ஆகவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிபப்பது எங்கள் தலையில் மண் அள்ளி போடும் செயல் என்றும் தெரிவித்ததுடன் நாங்கள் ஜனநாயக ரீதியாக பல கட்சிகளின் கூட்டாக இணைந்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். ஆகவே எங்களுக்கு எமது சங்கு சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சியில் பிரதமர் ஹர்ணி அமர சூரியவின் பிரதான உரையுடன் தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் பிரச்சாரக் கூட்டம்




கிளிநொச்சியில் தேசிய மக்கள் சக்தியின் மாபெரும் பிரச்சாரக் கூட்டம் பிரதமர் ஹர்ணி அமர சூரியவின் பங்கு பற்றலுடன் நடைபெற்றது. இதன் போது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள், மத குருமார்கள் கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதமர் தெரிவிக்கையில், கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக அவர்கள் பதவி ஏற்றதன் பின்னர் பல வருட காலமாக மூடப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகையின் சுற்றுவட்ட வீதியை மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுள்ளது.

மற்றும் யாழ்ப்பாணம் பலாலி வசாவிளான் வீதியையும் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்னும் பல வீதிகள் மக்கள் பயன்பாட்டுக்காக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அது மட்டுமின்றி மக்களின் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டி உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தற்பொழுது தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் முன்னைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தாம் திசைகாட்டி சின்னத்துடன் இணைந்து பயணிக்க இருப்பதாகவும், எம்மை பாராளுமன்றம் அனுப்புவதற்கு மக்களை வாக்குகளிக்க வேண்டும் என கூறி வருகின்றனர்.

சில முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து வரும் நிலையில் அவர்களும் கூறி வருகின்றனர். தாம் அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்க உள்ளதாகவும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டி உள்ளதாகவும் கூறி வருகின்றனர்.

மன்னிக்கவும், தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் 25 அமைச்சுகளை பதவியை வகிப்பார்கள் எனவும் அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களாகவே இருப்பார்கள் எனவும் இதைவிட வேறு எவரும் எமது கட்சியில் இணைத்துக் கொள்ளவோ அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு தயாராக இல்லை என அவர்களுக்கு ஜனாதிபதி கூறியுள்ளார் என பிரதமர் 04-11-2024 அன்றைய தினம் கிளிநொச்சியில் தெரிவித்தார்.

அது மட்டுமின்றி வட மாகாணத்திலும் சரி இலங்கையில் எப்பாகத்திலும் போதைப் பொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை. வெளிநாடுகளில் இருந்தே இதனைக் கொண்டு வந்து எமது பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் எதிர்காலத்தையே அழித்து வருகின்றார்.

எமது அரசாங்கத்தில் இவற்றுக்கெல்லாம் ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உணர்சிப் பேச்சுக்களையும், வெற்று கோசங்களையும் இம்முறை மக்கள் நிச்சயம் புறக்கணிப்பர்

## ஈ.பி.டி.பியின் வேட்பாளர் சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவிப்பு!




நாடாளுமன்ற தேர்தலுக்கான நாள் நெருங்கி வருகின்றது. இந்நிலையில் வேட்பாளர்கள் தமக்கு ஏற்றவாறு பலவாறான கருத்துக்களையும் உசுப்பேற்றல்களையும் கூற முற்படலாம். ஆனாலும் அவர்களது வெற்று பேச்சுக்களை இம்முறை மக்கள் நிச்சயம் புறக்கணிப்பார்கள் என ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாக செயலாளரும் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 06.11.2024 அன்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

வாக்குரிமை மக்களது ஜனநாயக அஸ்திரமாகும். இந்த அஸ்திரத்தை பயன்படுத்தி மக்கள் தமக்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதும் அவர்களது உரிமை.

ஆனால் கடந்தகாலங்களில் சுயநலவாதிகளின் உணர்சிப் பேச்சுக்களுக்கு மக்கள் செவி சாய்த்ததன் விழைவாக தமிழ் மக்களின் அரசியல் அதிகார பலம் தவறானவர்களின் கைகளுக்கு சென்றறிருந்தது. இதனால் மக்கள் பல்வேறு துன்ப துயரங்களை எதிர்கொள்ளம் நிலையும் நேரிட்டுள்ளது.

அந்தவகையில் கடந்த காலங்களை போன்று ஏமாற்றுத் தரப்பினரது சுயநலங்களுக்கு எடுபடாது நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும் என்பதே எமது விருப்பாகும்.

இதேநேரம் எம்மிடம் சிறந்த கொள்கையும் அனுபவம் மிக்க வழிநடத்தலும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சரியான பொறிமுறையும் இருக்கின்றது. இதை தற்போது அனைவரும் ஏற்றுக்கொண்டும் உள்ளனர்.

அதுமட்டுமல்லாது சக தமிழ் அரசியல் தலைமைகள் இன்று எமது கொள்கையான மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ளது மட்டுமல்லாது நாம் முன்னெடுக்கும் அன்றாடப் பிரச்சினை அபிவிருத்தி அரசியலுரிமை என்ற பொறிமுறைக்கும் வந்துவிட்டனர்.

இது அவர்களது கொள்கையற்றதும், பொறிமுறையற்றுமான நிலையுடன் சரியான வழிநடத்தலின் மையையும் காட்டிநிற்கின்றது. அதுமட்டுமல்லாது பொய்களை கூறி மக்களை ஏமாற்றுவதற்கென கூட்டமைப்பு என்ற போர்வையில் பல்வேறு குழுக்கள் எல்லாம் ஒன்றிணைத்து கட்டப்பட்ட கட்சியும் சிதறுண்டு காணாமல் போய்விட்டது.

ஆனால் ஈ.பி.டி.பியாகிய நாம் வெளிப்படையாகவே எமது நிலைப்பாடுகளை மக்களிடம் கூறிவருகின்றோம். அதனடிப்படையில் எமது கடந்தகால மக்கள் நலத்திட்டங்களை மனதில் நிறுத்தி உங்கள் வாக்குகளை எமது வீணைச் சின்னத்துக்கு அளியுங்கள் என நாம் உங்களிடம் கோருகின்றோம்.

அத்துடன் உங்கள் வாக்குகளால் எமது கட்சி அரசியல் ரீதியில் வலுப்பெறும்போது மக்கள் நலத்திட்டங்களை மேலும் துரிதகதியில் முன்னெடுத்துச் செல்லவும் மக்களின் அரசியல் அபிலாசைகளை வெற்றிகொள்ளவும் கட்சி என்ற ரீதியில் அதற்கு நாம் பொறுப்பாக இருப்போம்.

அந்தவகையில் அரசியல் மாற்றத்தை கொண்டுவர விரும்பும் தமிழ் மக்கள் தமது எதிர்பார்ப்புக்களை வெற்றிகொள்ளும் வகையில் கிடைத்துள்ள இந்த நாடாளுமன்ற தேர்தல் என்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது வீணைச் சின்னத்தை பலப்படுத்துங்கள் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பத்து எம்பிக்களை எமது அணி, எதிர்வரும் பாராளுமன்றத்தில் ஒரு அழுத்தம் மிகு அணியாக அலங்கரிக்க வேண்டும்

## கூட்டணி தலைவர் மனோ கணேசன் அறிக்கை

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka



தமிழ் முற்போக்கு கூட்டணி, பதுளை, நுவரேலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா ஆகிய ஏழு மாவட்டங்களில் பத்து வேட்பாளர்களை களமிறக்கி உள்ளது. இந்த பத்து வேட்பாளர்களும் வெல்ல வேண்டும். எம்மை நாமே பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். இந்நாடு இன்று ஒரு வரலாற்று திருப்பு முனையில் நிற்கிறது. இந்த வரலாற்று சூழலில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாம் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். வரலாறு தந்திருக்கும் வாய்ப்பை நாம் தவற விடகூடாது.

ஏதோ வானத்தில் இருந்து இறங்கி வந்த கௌதம புத்தனை போல் பேசுகின்ற நபர்களை நான் என் அரசியல் வாழ்வில் பலமுறை பார்த்து இருக்கிறேன். இப்போதும் பார்க்கிறேன். இந்த பசப்பு வார்த்தைகளில் நமது மக்கள் ஏமாந்து விட கூடாது. உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள்தான் முதல் காரணம். ஆகவே, இவர்கள் எப்படி எம்மை பிரதிநிதித்துவம் செய்ய முடியும்? எம்மை நாம்தான் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும்.

ஆகவே ஏழு மாவட்டங்களில் போட்டி இடும் எமது பத்து வேட்பாளர்களும் வெற்றி பெற்று, எதிர்வரும் பத்தாம் பாராளுமன்றத்தில் நாம் ஒரு அழுத்த அணியாக இடம் பெற வேண்டும். இதை மனதில் கொண்டு நமது மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

தமுகூ தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள விசேட வாக்காளர் தெளிவூட்டல் அறிக்கையில் மேலும் கூறி உள்ளதாவது;

இந்நாடு இன்று ஒரு வரலாற்று திருப்பு முனையில் நிற்கிறது. இடை அடுத்து நாடு எழுச்சியும் பெறலாம். வீழ்ச்சியும் அடையலாம். இவற்றை பெரும்பாலும் பெரும்பான்மை மக்கள் தெரிவு செய்யும் பெரும்பான்மை கட்சிகளே தீர்மானிக்க போகின்றன.

இந்த சூழலில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நாம் நமது மக்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். எம் தேவைகள் பற்றி, எம் இருப்பு பற்றி, எம் அபிலாசைகள் பற்றி, நாம்தான் பேச வேண்டும். குரல் கொடுக்க வேண்டும். இன்று தேனொழுக பேசும் வேறு எவரும் எம்மை பற்றி பேச மாட்டார்கள். உண்மையில் நாம் இன்று சந்திக்கும் பல்வேறு துன்பங்களுக்கு இன்று தேனொழுக பேசும் இவர்கள்தான் முதல் காரணம்.

ஆகவே, பதுளை, நுவரேலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு, கம்பஹா ஆகிய ஏழு மாவட்டங்களில் தொலைபேசி சின்னத்தில் போட்டி இடும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பத்து வேட்பாளர்களை வெற்றி பெற செய்யும் முகமாக வாக்களிக்கும் படி மக்களை வேண்டுகிறேன்.


அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு
கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்
UTHAYAN உதயன்
உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு
பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும் . . .
CANADA UTHAYAN's
28th Cultural Festival & Dinner Gala
Toronto Voice Of Humanity
DEC. 14th 2024
தமிழா தமிழா
Guest Speaker from South India,
Film Director and Television Moderator
Mr. Karu Palaniyappan
சிறப்பு சொற்பொழிவாளராக, திரைப்பட இயக்குனரும்,
தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய
கரு பழனியப்பன்
கலந்து கொள்கின்றார்.
அத்துடன், இசை, மற்றும் நடனங்கள்
இடம்:
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave.)
காலம்:
14-12-2024 சனிக்கிழமை
நேரம்: 6:00 PM
For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512
Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
COMPUTEK COLLEGE
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY
Muraly Srinarayanathas
Chief Straegy Officer
2425 Eglinton Ave East Suite 400
Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus
7 Eastvale Dr, Suite 202
Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
muraly@computek.edu / www.computek.edu
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189
Ontario approved Pawn Brokers
Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
25 years of friendly, guaranteed and trusted service
Tel:- 416 269 7198
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2
Chapel Ridge
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
WOODBINE ENTERTAINMENT GROUP
Thani Shanmuganathan
SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
CROSSROAD
SHUTTLE BUS SERVICES
www.crossroadshuttles.com
647-801-7725
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
BUY | SELL | INVEST
RE/MAX
RAJEEV SEBARASHA
REALTOR
Dir: 905.226.8515
Residential & Commercial Real Estate Services
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
MAHAANS
PICK & PRESS OIL MILL
Make Someone Smile
www.babuflorist.ca
BABUFLORIST LTD
LEGAL Think Tank
Tom Thiru
Think Tank Legal Services Corp.
211-1585 Markham Road,
Toronto, ON M1B 2W1
Cell: 416-726-7748
Tel: 647-666-7748
Email: tom.tbond@gmail.com
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3
Toronto, ON, M1P 2L5
BAVAN LOGA
BAVAN TRAVEL AND TOURS
FRUITS BABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Rajeev Koneswaran
Owner & Broker
416 568 1078
JRB universal inc.
R.R.Rajkumar
647-289-6164
Anjappar
Healthy and Traditional
N.K.S DRAPERY & BLINDS FABRIC
KETHA
416 321 6420
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filing
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
First Mortgage
Second Mortgage
Private Mortgage
Commercial Mortgage
Mortgage Renewals
Home Equity Line of Credit
T. NESAN
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600
SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
CASH RUSSH
4049 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1S8
DP CREDIT SOLUTIONS
I AM HERE TO HELP YOU
416.834.7227
Jeya Jeyakanthan
Sales Representative
Media Partners
East FM 102.7 தமிழ்
time FM
Radio Partner
தேசம்
உலகத்தமிழர்
ஈழநாடு

உலக செய்திகள் World News

# அமெரிக்க தேர்தல் முடிவுகள் எம் தேசத்தைப் பொறுத்தளவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்கிறது ரஷியா



அமெரிக்க தேர்தல் முடிவுகள் தங்களிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என ரஷியா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த நாட்டு வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் மரியா ஜகரோவா கூறுகையில், “அடுத்த அமெரிக்க அதிபர், அவர் யாராக இருந்தாலும், சொந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்துவதும், அமெரிக்க கடற்கரையிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் சாகசங்களைத் தேடாமல் இருப்பதும் தர்க்கரீதியானதாக இருக்கும். அமெரிக்கக் கொள்கையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டாலும், எங்களுக்கு ஏதேனும் முன்மொழிவுகள் தோன்றினாலும், ரஷியாவின் நலன்களுடன் பொருந்தக்கூடிய வகையில் அவற்றை ஆய்வு செய்ய நாங்கள் தயாராக இருப்போம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பாக தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட






விஷயங்களில் ரஷியா தனது நலன்களை உறுதியாக பாதுகாக்கும். ஜனநாயக நெருக்கடி மற்றும் சமூகத்தின் பிளவு ஆகியவற்றை அமெரிக்கா கடந்து வர வாழ்த்துகிறேன்” என்று அவர் கூறினார். இதுதொடர்பாக ரஷியாவின் அரசு செய்தித் தொடர்பாளர் திமித்ரி பெஸ்கோவ் கூறுகையில், “அமெரிக்காவுடனான உறவு மிகுந்த தொய்வு நிலையில் இருந்தாலும் அதனுடன் சுமுக உறவை மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தையை நடத்த ரஷியா தயாராகவே உள்ளது. ஆனால், அதற்கு முன்பாக அனைத்தையும் கவனமாக கண்காணித்து ஆராய்வோம். ஜனவரியில் டிரம்ப் அதிபராக வெள்ளை மாளிகைக்கு திரும்பும்போது என்ன நிகழ்கிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

## டிரம்ப் வெற்றி குறித்து அதிருப்தி தெரிவித்த ஹாலிவுட் பிரபலங்கள்

அ மெ ரி க் க தேர்தலில் கமலா ஹாரிஸ் தோல்வி அடைந்துள்ள நிலையில், அவரை ஆதரித்த பிரபலங்கள் பலர், டிரம்ப் வெற்றி பெற்றது குறித்து தங்கள் அதிருப்தியை சமூக வலைதளங்களில் பதிவிட்டு வருகின்றனர். அந்த வகையில் ஆஸ்கார் விருது வென்ற அமெரிக்க பாடகி பில்லி ஐலிஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “இது பெண்கள் மீதான போர்” என்று பதிவிட்டுள்ளார். இவர் கமலா ஹாரிசுக்கு தனது வெளிப்படையான ஆதரவை தெரிவித்து வந்தார். கடந்த வாரம் நடைபெற்ற ஒரு இசை நிகழ்ச்சியின்போது, தனது ரசிகர்களிடம் “கமலா ஹாரிசுக்கு வாக்கு செலுத்துங்கள்” என்று பில்லி ஐலிஷ் கேட்டுக் கொண்டார். இதே போல் கமலாவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த மற்றொரு ஹாலிவுட் பிரபலமான மூத்த நடிகை ஜேம் லீ கர்டிஸ், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நீண்ட பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், “தேர்தல் முடிவுகள் வந்துவிட்டன. பலர் தங்கள் வெற்றியை கொண்டாடிக்கொண்டு இருப்பார்கள். பலர் திகைத்துப் போய் சோ-கமாக இருப்பார்கள். அமெரிக்காவும், ஜனநாயகமும் எப்போதும் இப்படித்தான் இருக்கும். ஆனால் இந்த தேர்தல் முடிவின் அர்த்தம் என்ன? கொடூரமான, கட்டுப்பாடு மிகுந்த காலம் திரும்பி வருகிறது. தங்கள் உரிமைகள் மறுக்கப்படும் என்று சிறுபான்மையினரும், பெண்களும், ஓரினச் சேர்க்கையாளர்களும் அஞ்சுகின்றனர். நாம் தொடர்ந்து போராடுவோம். அதுதான் அமெரிக்கர்களின் அடையாளம். உண்மையான அமெரிக்கராக இருங்கள்” என்று பதிவிட்டுள்ள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல ராப் பாடகியும், கமலா ஹாரிசின் தீவிர ஆதரவாளருமான கார்டி பி, தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “நான் உங்கள் அனைவரையும் வெறுக்கிறேன்” என்று பதிவிட்டுள்ளார். கமலா ஹாரிசை எதிர்த்து போட்டியிட்ட டொனால்டு டிரம்பை பாடகி கார்டி பி தொடர்ந்து கடுமையாக விமர்சித்து வந்தார்.

# வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடனான ஆட்சி முறைக்காக, தேர்தல்களில் இளையோரின் பங்களிப்பை அதிகரித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை

## தமிழ் மொழி மூலமான செயலமர்வுகளில் ஊடகவியலாளரும், பயிற்றுவிப்பாளருமான கலாவர்ஷ்னி கனகரட்ணம் வளவாளராக கலந்துகொண்டுள்ளார்.

வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுடனான ஆட்சி முறைக்காக, தேர்தல்களில் இளையோரின் பங்களிப்பை அதிகரித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறையை, தேசிய சமாதானப் பேரவை நாடெங்கும் முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பயிற்சிப்பட்டறையானது, மாவட்ட மட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பயிற்சிப்பட்டறைகளில், பிரசார செலவுச் சட்டம், தேர்தல் நடைமுறைகள், தேர்தல் சட்டங்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டம், வாக்காளர் கல்வி மற்றும் இளைஞர்களுக்கான ஒதுக்கீடு குறித்து பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றன.

இதில் கலந்துகொள்ளும் பங்கேற்பாளர்கள், தத்தம் பிரதேசங்களில் வாக்காளர் கல்வி தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவூட்டி வருவது விசேட அம்சமாகும்.

தமிழ் மொழி மூலமான செயலமர்வுகளில் ஊடகவியலாளரும், பயிற்றுவிப்பாளருமான கலாவர்‘னி கனகரட்ணம் வளவாளராக கலந்துகொண்டுள்ளார்.

தேர்தல் குறித்த விடயங்களில் வெளிப்படைத்தன்மை என்பது, ஆரோக்கியமான ஆட்சிமுறைக்கு மிக முக்கியமானது. குறிப்பாக, இளையோர் பங்களிப்பை அதிகரிப்பது காலத்தின் கட்டாயம் என்பதோடு, அவர்களை இவ்விடயங்களில் பயிற்றுவிப்பது அவசியமானது என, திட்டத்தின் முகாமையாளரான பேரின்பநாயகம் பெனிக்னஸ் கூறினார்.

இவ்விடயப்பரப்புகள் தொடர்பாக, மாவட்ட மட்டத்தில் சிவில் சமூக தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் போன்றோர் கலந்துகொள்ளும் செயலமர்வுகளையும் தேசிய சமாதானப் பேரவை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடு வழங்கப்பட மாட்டாது என்கிறார் ஜனாதிபதி அநுர குமார

## கிராமிய வறுமையை ஒழிப்பதில் அரசாங்கத்தின் முதன்மை கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி, அமைச்சர்கள் கொழும்பில் இருந்து செயற்படுவதை விட உள்ளூர் சமூகங்களுக்குள்ளேயே உள்வாங்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

எதிர்வரும் பாராளுமன்றத்தில் அமைச்சர்களுக்கு கொழும்பில் வீடுகள் வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

“எங்களுக்கு மக்களுடன் நேரடியாக இணைக்கும் அரசாங்கம் தேவை,” என்று கூறிய ஜனாதிபதி, தலைவர்கள் தொலைதூரத்தில் இருப்பதை விட உள்ளூர் பிரச்சினைகளை தீர்க்க தங்கள் மாவட்டங்களில் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

“இந்த அரசாங்கம் தனது பணிகளைச் செய்வதற்கு கிராமங்களைச் சென்றடைய வேண்டும், மேலும் கிராமப்புறங்களில் வறுமையை அகற்றுவதே எமக்கு முன்னால் உள்ள மிக முக்கியமான பணியாகும்” என்று ஜனாதிபதி திஸாநாயக்க மேலும் கூறினார்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் — All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை — Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி — Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி — Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் — Menstruation
உடற்பருமன் குறைத்தல் — Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

# தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்றமையினால் பாராளுமன்ற தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேரடியாக போட்டியிடுகின்றது

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

## ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் முனியசாமி நாகரூபன்




- எஸ்.ஆர்.லெம்பேட் (05-11-2024)

ஈரோஸ் ஜனநாயக முன்னணி கடந்த காலங்களின் தமிழ் தேசிய கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி வந்த நிலையில்,தற்போது தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்ற நிலையில் மக்களின் ஆதரவை இழந்து வருகிறது. இந்த நிலையில் இம்முறை பாராளுமன்ற தேர்தலில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி நேரடியாக போட்டியிடுவதாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க தலைவரும், ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான முனியசாமி நாகரூபன் தெரிவித்தார்.

மன்னாரில் 5ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் தேசிய கட்சிகள் பிரிந்து காணப்படுகின்ற நிலையில் மக்களின் ஆதரவை இழந்து வருகிறது.இதனால் வாக்குகள் பிரிந்து வேறு கட்சிகளுக்கு செல்லும் நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த வாக்குகள் வேறு கட்சிகளுக்கு பிரிந்து செல்லாமல் இருக்க குறித்த வாக்குகளை நாங்கள் பெற்றுக் கொள்ளும் முகமாக ஈரோஸ் ஜனநாயக முன்னணி வன்னியில் போட்டியிடுகின்றது.

தமிழ் தேசிய கட்சிகள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எதிர் கட்சி அரசியலை மேற்கொண்டு வந்தமையினால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தனர். எமது கட்சி பாராளுமன்ற தேர்தலில் ஆசனங்களை பெற்றுக் கொள்வதன் மூலம் ஆழ்கின்ற கட்சியுடன் இணைந்து மக்களுக்கு பொருளாதார ரீதியாக வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் மாவீரர் எனது தந்தை. அவர் போராட்டம் மூலமாக செய்ய முடியாத சில காரியங்களை நான் அரசியல் ரீதியாக முன் னெடுக்கவுள்ளேன். அதற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

தமிழ் தேசிய கட்சிகளுக்குள் காணப்படும் உள் பூசல்கள், கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள பிரிவு மற்றும் வேட்பாளர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் வடக்கு கிழக்கில் காணப்படுகின்றது. வன்னி மாவட்ட மக்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு, மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை உட்பட மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளுக்கு எமது கட்சி முழுமையாக செயல்பட்டு தீர்வை பெற்றுக் கொடுக்கும்.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஒரு தமிழ் தேசிய கட்சி என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன். எனவே ஈரோஸ் ஜனநாயக முன்னணிக்கு வாக்களித்து எங்களை பாராளுமன்றம் அனுப்புவதன் ஊடாக மக்களுக்கு எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை பெற்றுத் தர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மொழி கல்வி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



- எஸ்.ஆர்.லெம்பேட் (06-11-2024)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் வடமாகாணத்தில் அரச உத்தியோகஸ்தர்களுக்காக மேற்கொண்ட 150 மணித்தியால பயிற்சி நெறியை பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வு மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் சிரேஸ்ர மொழிப்பாட தேசிய வளவாளர் E. சாகரிகா பிகிறாடோ தலைமையில் 5ம் செவ்வாய்க்கிழமைமாலை இடம் பெற்றது.

2020 ஆண்டு அரச கரும மொழி அமைச்சினால் வெளியிடப்பட்ட 18ம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக அரச உத்தியோகத்தர்களின் மொழி புலமையை விருத்தி செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கு மேற்படி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தேசிய இணைப்பாளர் டிலான் ரணசிங்க அவர்களும், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் திரு. அஸ்வின் பாலகிருஷ்ணன், மற்றும் இரண்டாம் மொழி பாட வளவாளர் சுபாஜினி விநாயகமூர்த்தி அவர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த நிகழ்வில் சிங்கள கற்கை நெறிகளை பூர்த்தி செய்த பயிலுனர்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது.

அதே நேரம் புதிய சிங்கள பாட நெறியானது (Zoom தொழில் நுட்பம், மற்றும் நேரடி வகுப்பு) ஆரம்பிக்க உள்ள நிலையில் பயிற்சி நெறியை தொடர விரும்புவோர் 0776355521 தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# கிழக்கை காப்பாற்ற வேட்டுமாயின் வடக்கு மக்கள் சைக்கிளுக்கு வாக்களிக்க வேண்டும்

## சைக்கிள் சின்ன கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் அறைகூவல்




கிழக்கை மண்ணை காப்பாற்றுவதற்காக மக்களுன் இனைந்து கடந்த 15 வருடமாக போராடிவருகின்றோம் எனவே கிழக்கு மாகாணத்தை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் வடக்கில் இருக்கின்ற தமிழ் மக்கள் சைக்கிளுக்கு வாக்களிக்க வேண்டும் அப்போது தான் கிழக்கை காப்பாற்ற முடியும் என இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் கட்சியின் தேசிய அமைப்பாள் தர்மலிங்கம் சுரேஸ் கிழக்கு மண்ணில் இருந்து அறைகூவல் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை சந்தியில் 6ம் திகதி புதன்கிழமை மாலை சைக்கிள் சின்னதின் தேர்தல் பிரச்சாரத்துக்கான கட்சி காரியாலயம் திறந்துவைத்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

இந்த தேர்தலை இதுவரைக்கும் நடந்த தேர்தல்போல எங்கள் மக்கள் கையாளக் கூடாது என ஆரம்பத்தில் இருந்தே தெரிவித்துவருகின்றோம் இந்த தேர்தல் தமிழ் மக்களுக்கு பேரம் பேசக்கூடிய இறுதி சந்தர்ப்பமாக அமையப் போகின்ற இந்த தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களுடைய வாழ்வு இந்த தீவிலே ஒரு அடிமைத்தனமாக இருக்கப் போகின்றதா? அல்லது சிங்கள தமிழ் முஸ்லீம் மக்கள் சம உரிமையோட வாழப்போகின்றோமா? என்ற ஒரு கேள்வி எழுப்புகின்ற ஒரு தேர்தல் அமையப் பெற்றிருக்கின்றது.

தமிழர்களை பெறுத்தமட்டில் தமிழர்கள் ஒரு நீண்ட நெடிய வரலாற்று ரீதியாக போராடி ஒரு மரபுவழியாக தமக்கான ஒரு தனித்துவத்தை பெற்றிரும்கும் ஒரு இனம் அதனடிப்படையிலே தமிழர்கள் இந்த தீவிலே சுதந்திரமமாக வாழ்வதற்காக அதிக விலை கொடுத்துள்ளனர் உயிர்களை தியாகம் செய்துள்ளனர் கோடான கோடி சொத்துக்களை இழந்துள்ளந்து நிலங்களைள பறிகொடுத்து கட்டமைக்கப்பட்ட இனழிப்புக்கு உட்பட்டு வருகின்றனர். எனவே மக்கள் இந்த தேர்தல் தொடர்பாக மிகுந்த ஆர்வத்துடனும் கரிசனையுடனும் கையாளவேண்டும்.

வடக்கு கிழக்கிலே சைக்கிள் அணி மிகப் பெரும் பலமாக வந்து கொண்டிருக்கின்றது தென்பகுதியை பொறுத்தமட்டிலே ஒரு ஊழல் அற்ற நேர்மையான ஒரு அரச தலைவராக அனுரகுமார திசாநாயக்காவை ஜனாதிபதியாக அந்த மக்கள் தெரிவு செய்துள்ளனர் ஆனால் வடகிழக்கிலே அவ்வாறான ஒரு தலைவரை இதுவரைக்கும் தமிழ் மக்களால் தேர்தெடுக்கப்படவில்லை ஆனால் இந்த தேர்தல் அந்த சந்தர்பத்தை மக்களுக்கு கொடுத்திருக்கின்றது.



தமிழ் மக்களின் உரிமைகளை சர்வதேச மட்டத்தில் பெற்றுக் கொடுப்போம் அதற்கு தலைமைதாங்க வேண்டும் என்ற அடிப்படையிலே தமிழர்கள் நம்பி யுத்தத்தின் பின்னர் மூன்று தடவைகள் வாக்களித்து அறுதி பெரும்பான்மையான ஆணைகளை பெற்று தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனழிப்புக்கு சந்தர்பம் கிடைக்கின்ற போதெல்லாம் அதனை தட்டிக்களித்து எந்தவொரு தீர்வையும் பெற்றுக் கொடுக்காது தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்ததை தவிர வேறு எந்தவொரு வேலையையும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினர் செய்யவில்லை.

அதனால் நாங்கள் கடந்த 15 வருடங்களாக தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் வடகிழக்கிலே நடைபெறுகின்ற கட்டமைப்புசார் இடம்பெறும் இனழிப்பை மக்களுடன் இணைந்து தடுத்து நிறுத்தி வருகின்றோம் அப்படிப்பட்ட எங்கள் தலைமைக்கும் அணிக்கும் ஒரு தடவை இந்த தேர்தலில் சந்தர்ப்பம் தாருங்கள்.

எந்த நோக்கத்தோடு எங்களை சிங்கள தேசம் அழித்ததோ அதற்கான பரிகாரத்தை நாங்கள் நாடாளுமன்றத்தில் பேரம் பேசி நா. மனித உரிமை இனழிப்பு தொடர்பான பொறுப்புக்கூறலை சரியான இடத்துக்கு கொண்டு செல்ல ஆணையை தாருங்கள்.

மக்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக செயற்படுகின்ற சைக்கிள் சின்னததில் போட்டியிடும் இந்த அணியை பலப்படுத்தப் போகின்றீர்களா? இல்லை வழமைபோன்று சாராயம் அசிரி மாவுக்கும் வெறும் சலுகைகளுக்கும் நீங்கள் வாக்களித்து இனிமேல் உரிமை என்றால் என்ன என்று கேட்கமுடியாத ஒரு நிலைக்கு இட்டுச் சென்று நிரந்தரமாக தமிழர்கள் அடிமையாகப் போகின்றோமா? என்ற கேள்வியை பெருவாரியான மக்கள் விளங்கி வடக்கிலும் கிழக்கிலும் சைக்கிள் அணிக்கு பின்னால் நகர்ந்து கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாக கடந்த 15 வருடங்களாக இந்த மண்ணில் இருந்து போராடி செயற்பட்டு வருகின்றோம் கிழக்கில் மக்கள் நிச்சயமாக ஆணையை தரும் அதேவேளை வடக்கில் எங்கள் கட்சி மீது மக்கள் திசை திரும்பியுள்ளனர் அதனால் ஏனைய சிங்கள கட்சிகளும் அவர்களுடன் சோந்திருக்கின்ற கட்சிகளும் குழப்புவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்திலே கூடியளவு சாராயம் மற்றும் பணங்களையும் கொடுத்து இந்த மக்களை திசைதிருப்புவதற்கான வேலைத் திட்டங்களை செய்கின்றனர்.

வீடு, சங்கு, சின்னத்திலே போட்டியிடுகின்ற அந்த அரசியல்கட்சிகளின் கடந்தகால செயற்பாடு பற்றி எங்கள் மக்களுக்கு சொல்லவேண்டிய அவசியம் கிடையாது பிந்து செயற்படும் அத்தனை பேரும் இந்த இனத்தை அழிப்பதற்காக 2015ம் ஆண்டு ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்கான இடைக்கால யாப்பை உருவாக்கி வைத்துள்ளனர் எனவே இந்த மண்ணிலே தமிழ் மக்கள் நிம்மதியாக சிங்கள மக்கள் போன்று ஒரு சுபீட்சத்துடன் வாழவேண்டும் என்றால் இந்த தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்றார்.

*கனடா வாழ் வர்த்தகப் பிரமுகரும் சமூகச் செயற்பாட்டாளருமான கணேசன் சுகுமார் அவர்கள் வழமைபோல தனது வருடாந்த இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றிருந்தார். பொதுவாகவே அவரது இலங்கை இந்திய பயணங்கள் "விடுமுறைப்" பயணங்களாக அமைவதில்லை. அதற்கு மாறாக தமிழ்ச் சமூகம் சார்ந்ததாகவோ அன்றி வர்த்தக மேம்பாட்டு முன்னெடுப்புகள் சார்ந்ததாகவோ அமைகின்றன.*

*அவரது அண்மையப் பயணம் கூட இலங்கையில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட பெண்களின் நலன் சார்ந்ததாகவும் வைத்தியசாலைகளுக்கு உதவிகள் வழங்குவதற்காகவே அமைந்திருக்கின்றன.*


*இந்த விபரங்களை முழுமையாகக் கொண்டு கனடா ஞாயிறு அன்று வெளிவந்த கொழும்பு வீரகேசரி இதழில் ஒரு நேர்காணல் பிரசுரமாகியுள்ளது. வீரகேசரி பிரதம ஆசிரியர் நண்பர் கஜன் அவர்களது ஏற்பாட்டில் இந்த நேர்காணலை பத்திரிகையாளர் நா. தநுஜா அவர்கள் சிறப்பாக வடித்துள்ளார். இந்த நேர்காணலை கனடா உதயன் வார இதழிலும் அதன் இணையத்தளத்திலும் முகநூலிலும் பிரசுரம் செய்ய அனுமதியளித்த வீரகேசரி பத்திரிகைக்கும் அதன் பிரதம ஆசிரியர் நண்பர் கஜன் அவர்களுக்கும் எமது நன்றி!*

*- கனடா உதயன் ஆசிரிய பீடம் -*

---

# மனிதத்தை வாழ்விக்கும் பரோபகாரி

**- நா. தனுஜா**




இலங்கையில் யாழ்ப்பாணத்தைப் பூர்விகமாகக்கொண்டவரும், தன் கடின உழைப்பால் கொழும்பில் பெருவர்த்தகராகத் தன்னை நிலைநிறுத்தியவருமான கணேசன் சுகுமார், நாட்டின் போர் சூழ்நிலை மற்றும் அதனால் வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட எதிர்மறைத்தாக்கங்களின் விளைவாக 1992 ஆம் ஆண்டு அவரது மனைவி ஷீலாவுடன் கனடாவின் டொரன்டோ நகருக்குக் குடிபெயர்ந்தார்.



தன்வசமிருந்த ஆற்றலினாலும், தீரா உழைப்பினாலும் கனடாவில் மீண்டும் பூச்சியத்திலிருந்து தனக்கென ஒரு சாம்ராஜ்ஜியத்தைக் கட்டியெழுப்பிய சுகுமார், இன்றளவிலே கனடாவிலும் இலங்கையிலும் பலராலும் நன்கறியப்படும் ஒரு பரோபகாரியாகத் திகழ்கிறார்.

சுகுமார் மற்றும் ஷீலா ஆகிய பெயர்களின் முதல் எழுத்துக்களை இணைத்துப் பெயரிட்டு பெருநிறுவனமாகக் கட்டியெழுப்பப்பட்ட "சுக்ஷி" நிறுவனக்குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சுகுமார், இச்சமூகத்திடமிருந்து தான் பெற்றவற்றை சமூகத்துக்குத் திருப்பிச்செலுத்தவேண்டும் எனும் கொள்கையில் அதீத ஈடுபாடுடையவராக இருக்கிறார். அதுவே பல பில்லியன் மதிப்புமிக்க சொத்துக்களுக்குச் சொந்தக்காரரான ஒரு பெருவணிகரை, சமூகத்தின் சுகாதாரம், கல்வி, சமூக அபிவிருத்தி உள்ளிட்ட அவசிய தேவைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு கோடிகளை அள்ளி வழங்கும் ஒரு பரோபகாரியாக மாற்றியிருக்கிறது.

இளைஞர், யுவதிகளை குறிப்பாக பெண்களை வலுவூட்டுவதிலும், எச்சந்தர்ப்பத்திலும் அவர்கள் சுயமாகவும், சுதந்திரமாகவும் இயங்குவதற்கு ஏதுவானவகையில் அவர்களை ஊக்குவிப்பதிலும் மிகையான ஆர்வத்தைக் கொண்டிருக்கும் சுகுமார், அதனை முன்னிறுத்தியும், அதற்கு அப்பால் சமூகக்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கிலும் இலங்கைக்கு, குறிப்பாக வட மாகாணத்துக்குப் பல்வேறு நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கியிருக்கிறார். அதனை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கும் முனைப்பைக் கொண்டிருக்கும் அவர், அக்டோபர் மாதம் அவரது நிதியுதவியுடன் வடக்கைத் தளமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கைக்கு வருகைதந்திருந்தார்.

ஊடகங்களுக்கு நேர்காணல்களை வழங்குவதில் அதிகம் ஆர்வம் காண்பிக்காத அவரைச் சந்தித்து, அவரது நிதியுதவியுடன் வடக்கில் புதிதாக முன்னெடுக்கப்படவிருக்கும் செயற்திட்டங்கள் பற்றி மாத்திரம் கலந்துரையாடினோம்.

**கேள்வி: வட மாகாணத்தில் பல்வேறு விதத்திலும் பாதிக்கப்பட்ட பெண்களை வலுவூட்டும் நோக்கில் உங்களது நிதியுதவியுடன் புதியதொரு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அறிகிறோம்.**



**அத்திட்டம் பற்றி எம்மோடு பகிரமுடியுமா?**

**பதில்:** கனடாவைப் பொறுத்தமட்டில் பெண் பிள்ளைகள் தன்னம்பிக்கையுடன் சுதந்திரமாக வளர்க்கப்படுகின்றனர். துரதிஷ்டவசமாக அவர்களது வாழ்க்கை தடம் மாறும் சந்தர்ப்பங்களில் கூட, "இத்தோடு எனது வாழ்க்கை முடிந்துவிட்டது" என்று அவர்கள் ஒடிந்துபோவதில்லை. மாறாக தற்றுணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் அதனைக் கடக்கிறார்கள். அவர்களது பெற்றோர்களும் அதனை ஏற்றுக்கொள்கிறார்கள்.

ஆனால் இலங்கையில் இந்நிலைமை முற்றிலும் மாறானதாக இருக்கிறது. பல குடும்பங்களில் வீட்டு வன்முறைகளும், பொருளாதாரப்பிரச்சினைகளும் நிலவுகின்றன. அதேபோன்று குடும்பமொன்றில் ஒரு குழந்தை மாற்றுத்திறனாளியாகப் பிறந்தால், அந்தக் குழந்தையின் தந்தை அக்குடும்பத்தையே கைவிட்டுச்செல்லும் சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தக் குடும்பத்தின் ஒட்டுமொத்த சுமையையும் சுமக்கவேண்டிய நிலைக்கு தாய் தள்ளப்படுகிறார். சிலவேளைகளில் அச்சுமையினால் உருவாகும் அழுத்தத்தினாலும், இயலாமையினாலும் அவ்வாறான பெண்கள் தவறான முடிவுகளை எடுப்பதற்கும் துணிகிறார்கள்.

எனவே நான் கடந்த காலங்களில் இலங்கைக்கு வந்திருந்தபோது இவற்றைப் பார்த்து, ஆராய்ந்து தெரிந்துகொண்டேன். இவ்வாறு நிர்க்கதி நிலையில், இயலாமையின் விளிம்பில் இருக்கும் பெண்கள் மத்தியில், அவர்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடியவகையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என சிந்தித்தேன். வாழ்வில் எதிர்பாராமல் ஏற்படும் திருப்பத்துடன் அவ்வாழ்க்கை முடிந்துவிடுவதில்லை எனும் எண்ணத்தை பாதிக்கப்பட்ட பெண்கள் மத்தியில் விதைக்க விரும்பினேன். அதுவே இச்செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

**கேள்வி: இச்செயற்திட்டத்தை எவ்வாறு நடைமுறைப் படுத்துவதற்கு உத்தேசித்திருக்கிறீர்கள்?**

**பதில்:** இதனூடாக வடமாகாணத்தில் வாழ்வாதார உதவிகள் தேவைப்படும் நிலையில் இருக்கும் பெண்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு வட்டி இல்லாத கடனையும், தொழிற்பயிற்சியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறேன். இதற்கென முதற்கட்டமாக 50 இலட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறேன். இதனை வடமாகாண முன்னாள் ஆளுநர் ஜீவன் தியாகராஜா ஊடாகவே ஒருங்கிணைப்புச் செய்கிறேன். அதன்படி வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் சுயதொழில் செய்ய விரும்புகின்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்கான கடன் நிதியானது கிராமிய வங்கியொன்றின் ஊடாகவே வழங்கப்படும். சிறுவர், மகளிர் விவகார அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின்கீழ் இயங்கிவரும் பெண் பொலிஸ் பிரிவு ஆகிய கட்டமைப்புக்களால் விசேட தேவையுடைய, மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்ற, கடந்த காலங்களில் துஷ்பிரயோகங்களுக்கோ அல்லது குடும்ப வன்முறைகளுக்கோ உள்ளான பெண்கள் உள்ளடங்கலாக சுயதொழிலை முன்னெடுப்பதற்கான இக்கடன்நிதி உதவி தேவைப்படும் நிலையிலுள்ள பெண்கள் தெரிவுசெய்யப்படுவர். அவர்களது பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் குறித்த கிராமிய வங்கிக்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வங்கியின் ஊடாக மேற்கூறப்பட்ட முறையில் தெரிவுசெய்யப்பட்ட பெண்களுக்கான வட்டி இல்லாத கடன் நிதி வழங்கப்படும். அதேபோன்று இவ்வனைத்து விபரங்களும் அடங்கிய பட்டியலொன்று வங்கியினால் எனக்கும் அனுப்பிவைக்கப்படும்.

மேலும் இவ்வாறு வழங்கப்படும் நிதி முறையான விதத்தில் பயன்படுத்தப்படுகிறதா என அவ்வப்போது கண்காணிக்கப்படுவதுடன், கனடாவில் இருந்து வருகைதரும் பயிற்சியாளர்களால் சீரான கால இடைவெளியில் அப்பெண்களுக்கு அவசியமான தொழிற்பயிற்சி மற்றும் வழிகாட்டலும் அளிக்கப்படும். இச்செயற்திட்டத்தின் வாயிலாக முதற்கட்டமாக 100 பெண்கள் தெரிவுசெய்யப்படவிருப்பதுடன், எதிர்வருங்காலங்களில் இதனை நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்.

**கேள்வி: நீங்கள் கடந்த காலங்களில் இலங்கைக்கு வருகைதந்திருந்தபோதும் சமூகத்தைக் கட்டியெழுப்பும் விதமாக பல்வேறு நன்கொடை உதவிகளை வழங்கியிருந்தீர்கள் அல்லவா?**

**பதில்:** ஆம், கடந்த 2022 ஆம் ஆண்டு நான் இலங்கைக்கு வருகைதந்திருந்தபோது யாழ் வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப்பிரிவுக்கு அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 இலட்சம் ரூபா நிதியுதவி வழங்கியிருந்தேன். அதேபோன்று இவ்வருடம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அவசியமான டயலிஸிஸ் இயந்திரங்களைப் பெற்றுக்கொடுத்தேன்.

**கேள்வி: யாழ் வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சைப்பிரிவுக்கு நீங்கள் வழங்கிய நன்கொடையின் ஊடாக பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் பயனடைந்திருப்பதாக அறியமுடிகிறதே?**

**பதில்:** கடந்த முறை யாழ் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தபோது கண் மருத்துவ நிபுணர் மலரவன், அவர்களது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சை அறையை வந்து பார்வையிடுமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். மனித உடலில் மிகமுக்கிய அங்கமாக இருக்கக்கூடிய கண்ணுக்கு சத்திரசிகிச்சை செய்யும் அறையில், சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் கட்டில் முறையற்ற விதத்தில் இருப்பதை அவதானித்தேன். அதனையடுத்து அவர்களது தேவைப்பாடுகள் என்னவென்பதைக் கேட்டறிந்து, 40 இலட்சம் ரூபா பெறுமதியான அந்த உபகரணங்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து, பொதிசெய்து, கடந்த ஜனவரி மாதமே வைத்தியசாலையிடம் கையளிக்கக்கூடியவகையில் தயாராக வைத்திருந்தோம். இருப்பினும் அரச நடைமுறையில் நிலவிய தாமதங்கள் ஒருபுறமிருக்க, பெருந்தொகை பணத்தை வரியாகச் செலுத்தி, தற்போது அவ்வுபகரணங்களை யாழ் வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சைப் பிரிவிடம் கையளித்திருக்கிறோம். இதனூடாக மிகக்குறுகிய காலத்தில் பெரும் எண்ணிக்கையானோருக்கு "கட்ரக்" சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பதையிட்டு பெருமையடைகின்றோம்.




இவ்வாறு அவரால் வழங்கப்பட்ட உதவிகள் பற்றி சுருக்கமாகவும், இந்நாட்டின் இளைஞர், யுவதிகளை வலுவூட்டவேண்டியதன் அவசியம் பற்றி விரிவாகவும் எம்மோடு பேசினார் சுகுமார்.

தான் பிறந்த நாடான இலங்கைக்கு மாத்திரமன்றி, தன்னை வாழவைத்துக்கொண்டிருக்கும் கனடாவிலும் சுகாதாரம், கல்வி, சமூக அபிவிருத்தி ஆகிய துறைகள் சார்ந்து பல மில்லியன் டொலர் பெறுமதியான உதவிகளை வழங்கிவரும் சுகுமார், அதற்கான கௌரவமாகவும், அங்கீகாரமாகவும் எலிசபெத் மகாராணியின் பெயரால் வழங்கப்படும் பதக்கங்களை மூன்று தடவைகள் பெற்றிருக்கிறார்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் வரிகளின் பொருளுணர்ந்து, சகலரையும் தன் சொந்தம் போல் அரவணைத்து உதவி வாழும் சுகுமாரை போன்ற மனிதர்களே மனிதம் மீதான நம்பிக்கையை நாளெல்லாம் தழைக்கச்செய்கிறார்கள்.



# நாடாளுமன்றத் தேர்தல் 2024 யாருக்கு வாக்களிக்கக் கூடாது?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**சு**மந்திரனின் பிரச்சார விளம்பரக் குறிப்பு ஒன்றில், அவர் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சியை பெருமளவுக்குத் தத்தெடுத்துவிட்டார் என்று தெரிந்தது. அந்தப் பேரணிக்கு அவரும் சாணக்கியனும் உரிமை கோருவதுபோல அந்த விளம்பரம் அமைந்திருந்தது. ஏனையவர்கள் பின்னர் வந்து ஒட்டிக் கொண்டார்கள் என்றும் அதில் காணப்படுகிறது. சுமந்திரனின் பிரச்சார காணொளிகள் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. அவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தமிழரசியலில் அவரைப்போல உத்தமரைக் காண முடியாது என்று நம்பும் அளவுக்கு அவருடைய பிரச்சாரங்கள் அமைந்திருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட ஒரு உத்தமரை ஏன் தமிழ் மக்களில் பெரும்பகுதியினர் ஏற்றுக்கொள்ளவில்லை?

அப்படித்தான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சாரக் காணொளிகளைப் பார்த்தால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தத்தெடுப்பதற்கு அவர்களைத் தவிர வேறு யாரும் தகுதியானவர்கள் இல்லை என்பது போல ஒரு தோற்றம் எழும். தங்களை விட வேறு தியாகிகள் இல்லை என்று நிரூபிப்பவையாக அவை காணப்படும். ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் அவர்கள் செய்த தியாகங்கள் எத்தனை?

இந்த இரண்டு கட்சிகளையும் தவிர்த்து ஏனைய கட்சிகள் மற்றும் சுயேச்சைகளின் பிரச்சாரக் காணொளிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு சித்திரம் கிடைக்கும்?

இது தேர்தல் காலம் மட்டுமல்ல, மாவீரர் மாதமும்கூட. கட்சிகளும் அரசியல்வாதிகளும் மண்வெட்டியோடு துயிலும் இல்லங்களின் முன் நின்று காட்சி கொடுக்கிறார்கள். தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூறும் தங்களுக்கு தான் அந்த உரிமை அதிகம் என்று. தவராசா கூறக்கூடும், பெருமளவு அரசியல் கைதிகளை தான் விடுவித்தபடியால் தனக்கு அவ்வாறு துயிலும் இல்லத்தின் முன்னின்று படம் எடுப்பதற்கு தகுதி உண்டு என்று. மாவீரர்களின் நினைவுகளை தேர்தல் நோக்கத்துக்கு பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது என்று ஒரு கருத்து முன்வைக்கப்பட்டாலும், யதார்த்தத்தில் மாவீரர் நினைவுகள் தேர்தல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் என்பது மட்டும் தெரிகிறது.

கிழக்குடன் ஒப்பிடுகையில் வடக்கு மைய தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அதிகம் டிஜிட்டல் புரோமோஷன்களில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் வெளியிடும் சிறிய துண்டுக் காணொளிகளில் பெரும்பாலானவர்கள் தங்களை சினிமாத்தனமாக கதாநாயகர்களாக கட்டமைக்கிறார்கள். பின்னணியில் ஒரு சினிமா பாடல் வரும். ஆனால் பலருடைய உடல் மொழிக்கும் பாடலுக்கும் பொருந்தவே இல்லை. அதை யார் அவர்களுக்குச் சொல்வது?

தமிழரசுக் கட்சியின் யாழ் தேர்தல் தொகுதி வேட்பாளர்கள் மத்தியில் முன்பு பொங்கு தமிழில் ஈடுபட ஒரு பெண் செயற்பாட்டாளர் உண்டு. வன்னியில் சங்குச் சின்னத்தின் கீழ் ஒரு முன்னாள் இயக்க உறுப்பினராகிய பெண் போட்டியிடுகிறார். இந்த இரண்டு பெண்களுடைய பிம்பங்களையும் அவர்களுடைய ஆதரவாளர்கள் திட்டமிட்டுக் கட்டி எழுப்புகிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக நிற்கும் பொங்குதமிழ்ச் செயற்பாடடாளர் தனக்கென்று பாடல்களை உருவாக்கி தனக்குரிய டிஜிற்றல் புறொமோஷனை முன்னெடுக்கிறார். தன்னைப் பொங்கு தமிழின் வாரிசாகக் காட்டுகிறார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் முன்னாள் இயக்கத்தவர் போரில் காலை இழந்தவர். அவர் தன்னை எப்படித் தனித்துவமாகக் இனங்காட்ட வேண்டும் என்பதில் ஏனைய எல்லா வேட்பாளர்களை விடவும் பிரக்ஞைபூர்வமாக காணப்படுகிறார். அவர் அணியும் சேலை, பிளவுஸ் அவற்றின் நிறம், என்பவற்றில் அவர் தனக்கென்று ஒரு தனி அடையாளத்தைப் பேண முற்படுகிறார். அவருக்காக முன்னாள் இயக்கத்தவர்கள் பலர் களத்தில் இறங்கி வேலை செய்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் பொது வேட்பாளருக்காக இறங்கி செயல்பட்ட பலரும் அவருக்கு ஆதரவாக செயல்படுகிறார்கள். அவர் தன்னை ஈழப்போரின் வாரிசாக காட்டிக் கொள்வதில் தவறு இல்லை. ஏனென்றால் ஆயுதப் போராட்டத்தில் ஒரு காலை இழந்தவர். ஆயுதப் போராட்டம் அரங்கில் இருந்து அகற்றப்பட்ட 15 ஆண்டுகளின் பின் மிதவாத அரசியலில் குதித்திருக்கிறார்.

இங்கு ஒரு முரண்பாட்டைச் சுட்டிக்காட்டலாம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் பொங்கு தமிழ் பாரம்பரியத்தின் ஊடாக வந்தவர். அவர் தன்னை எப்பொழுதும் விடுதலைப் போராட்டத்தின் நேர் வாரிசு போல காட்டிக் கொள்வார். அவருடைய பிரச்சாரங்களிலும் அதைக் காண முடியும். போலீசுக்கு எதிராக புலனாய்வுத் துறைக்கு எதிராக அவர் வீரங்காட்டும் காட்சிகள் காணொளிகளாக வெளியிடப்படுகின்றன. ஆனால் அதே பொங்கு தமிழ் பாரம்பரியத்தில் வந்த ஒரு பெண் சுமந்திரன் அணிக்குள் நிற்கிறார். அவரும் தன்னைப் பொங்கு தமிழின் வாரிசாகக் காட்டுகிறார்.

அப்படித்தான், வன்னி தேர்தல் தொகுதியில், சங்கின் கீழ் போட்டியிடும் அந்த முன்னாள் இயக்கப் பெண்ணின் பிரச்சார வாசகங்கள் அவரை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வாரிசாகக் காட்ட முற்படுகின்றன. ஆனால் அவர் சைக்கிள் சின்னத்தின் கீழ் போட்டியிடவில்லை. சசிகலா ரவிராஜும் அப்படித்தான். அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகி சங்குச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகிறார். சசிகலா தன்னை ரவிராஜின் வாரிசாக முன் நிறுத்துகிறார்.

எல்லாருமே தங்களை விடுதலைப் போராட்டத்தின் வாரிசுகளாக, அல்லது விடுதலைப் போராட்டத்தில் இழக்க கொடுத்தவர்களாக காட்டிக் கொள்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில், ஜேவிபியின் திசைகாட்டி சின்னத்தின் கீழ் போட்டியிடும் ஒரு அதிபர் தன்னை கடைசிக் கட்டப் போரில் வன்னியிலிருந்து காயத்தோடு தப்பி வந்தவராகப் பிரச்சாரம் செய்கிறார். ஆனால், 2009ஆம் ஆண்டு அவர் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டதாக அவருக்கு தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். கடைசிக்கட்டப் போரில் வன்னியில் வாழ்ந்தமை, காயப்பட்டமை, இடம்பெயர்ந்தமை, போன்றவை தேர்தலில் நிற்பதற்கான தகுதிகளாக மாறிவிட்டன. பொங்கு தமிழில் பங்கெடுத்தமை, பொலிஸோடு மோதியமை, புலனாய்வுத்துறையோடு வாக்குவாதப்பட்டமை எல்லாமே தகுதிகள்.

அர்ஜுனா மருத்துவத்துறையில் தான் புரிந்த கலகம் தனக்குரிய அடிப்படைத் தகுதி என்று கருதுகிறார். ஆனால் கடந்த வாரம் ஒரு மெய்நிகர் சந்திப்பில் அவரும் ஏனையவர்களும் மோதிக்கொண்ட விதம் அவரை மட்டுமல்ல தமிழ்த் தேசிய அரசியல் கலாச்சாரத்தையே பரிசு கெடுக்கக்கூடியது.

அர்ஜுனாவைப் போலவே மற்றொரு சுயேச்சை. டியூப் தமிழ் என்று அழைக்கப்படும் ஒரு யுடியுப் காணொளியைச் சேர்ந்த பெண். இவரும் ஆயுதப் போராட்டப் பின்னணி காரணமாக சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டவர். தேர்தல் வேட்பு மனு தாக்கல் செய்யப்படும் நாளில் அவர் தன்னுடைய அணியோடு வரும்பொழுது எல்லாரும் சிவப்பு நிற ஆடை அணிந்திருந்தார்கள்.

வன்னியில் மற்றொரு சுயேச்சை எமில் காந்தன். இவரும் போராட்டப் பின்னணிக்குள் காணப்பட்டவர். நாட்டுக்கு வெளியே வாழ்ந்தவர். நிறையக் காசு வைத்திருக்கிறார். வன்னியில் அதிகம் செலவழிக்கப்படும் பிரச்சாரக் கூட்டங்கள், பிரச்சார நடவடிக்கைகள் அவருடையவைதான் என்ற ஒரு அவதானிப்பு உண்டு.

யாழ்ப்பாணத்தில் அவரைப் போல அதிகமாகச் செலவழிப்பது அங்கஜன். கடந்த பொதுத் தேர்தலின் போதும் அவர் அளவுக்கு அதிகமாகச் செலவு செய்தவர். கடந்த பொதுத் தேர்தலின் போதும் அவர் தன்னுடைய பிரச்சார வாகனங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பாடல்களை ஒளி பரப்பியவர். இம்முறையும் அவர் போராட்டத்தைப் போற்றுகிறார். ஆனால் அவர் தேர்தல் கேட்பது தென்னிலங்கை மையக் கட்சி ஒன்றின் வேட்பாளராக.

அவரும் அதிகரித்த அளவில் டிஜிட்டல் புரோமோஷனில் ஈடுபடுகிறார். அவருடைய பிரச்சாரக் காணொளிகள் அதிகமாக வெளிவருகின்றன. அங்கெல்லாம் அவர் ஒரு கதாநாயகனாக கட்டமைக்கப்படுகிறார்.

கட்சிகளும் தங்களை போராட்டத்தின் வாரிசுகளாகக் காட்டப் பார்க்கின்றன. சுயேச்சைகளும் அப்படித்தான். இதில் யார் உண்மையான போராட்டத்தின் வாரிசு என்பதை வாக்காளர்கள் எப்படிக் கண்டுபிடிப்பது?

இம்முறை தேர்தல் களத்தில் ஒரு துலக்கமான வேறுபாட்டைக் காண முடியும். என்னவென்றால், பெருமெடுப்பிலான பொதுக்கூட்டங்கள் இதுவரையிலும் யாராலும் ஒழுங்கு செய்யப்படவில்லை. தேர்தல் பிரச்சாரங்களில் பெரும் கூட்டங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. வாக்களிப்பு அலையை உருவாக்குவதில் பெரும் கூட்டங்களுக்கு பெரிய பங்கு உண்டு. ஆனால் இந்த முறை எந்த ஒரு கட்சியும் தாயகத்தில் இதுவரை பெருங் கூட்டங்களை ஒழுங்குபடுத்தவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுக் கட்டமைப்பு எல்லா மாவட்டங்களிலும் பெரும் கூட்டங்களை ஒழுங்குபடுத்தியது. ஆனால் நாடாளுமன்றத் தேர்தலில் இப்பொழுது கட்சிகள் பெருங்கூட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை. ஏன் கட்சிகளிடம் காசு இல்லையா? அல்லது டிஜிட்டல் புரோமோஷன் மட்டும் காணும் என்று அவை கருதுகின்றனவா? அல்லது ஒரு சுயேட்சை வேட்பாளர் கூறியது போல சுயேட்சைகள் மற்றும் கட்சிகளுக்குள்ளேயே உருகிப் பிணைந்த ஐக்கியம் இல்லை என்பதனாலா? ஒவ்வொருவரும் மற்றவரைப் போட்டியாளராகப் பார்க்கின்றார்கள். அதனால் ஒரு ஒரு பொதுக்கூட்டத்துக்காக செலவழித்து மற்றவர்களுக்கும் சேர்த்து வாக்குத் திரட்ட அவர்கள் தயாரில்லை என்று மேற்படி சுயேச்சை வேட்பாளர் சொன்னார்.

அதாவது ஒரு பொதுக்கூட்டம் என்று சொன்னால் எல்லாரும் சேர்ந்து காசைப் போட்டு அதை ஒழுங்குபடுத்த வேண்டும். அதனால் திரளக் கூடிய வாக்குகள் பொதுவானவை. அவை அந்த கட்சிக்கு அல்லது சுயேச்சைக்கு பொதுவாக விழும். ஆனால் தான் போட்ட காசுக்கு தனக்கு மட்டுமே வாக்கு விழ வேண்டும் என்று ஒரு வேட்பாளர் கருதினால், அவர் தனக்கு மட்டும்தான் பொதுக்கூட்டம் நடத்துவார். தனது கட்சிக்கோ அல்லது தனது சுயேச்சைக்கோ பொதுக்கூட்டம் நடத்த விரும்ப மாட்டார். எப்படியிருக்கிறது தேர்தல் களம்?

இது வாக்காளர்கள் மத்தியில் உற்சாகத்தை உத்வேகத்தைக் குறைக்குமா?

சில வாரங்களுக்கு முன்பு பொதுத்தமிழ் வேட்பாளருக்காக ஒன்றாக நின்றவர்கள் இப்பொழுது வேறு வேறு சின்னங்களின் கீழ் நிற்கின்றார்கள். பொதுச் சின்னமாகிய சங்கும் பொது வேட்பாளர் ஆகிய அரியநேத்திரனும் ஒன்றுக்கொன்று எதிராகி விட்டார்கள். பொதுச் சின்னமாகிய சங்கு இப்பொழுது ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக மாறிவிட்டது. பொது வேட்பாளர் ஆகிய அரியநேத்திரன் தன்னுடைய தமிழரசுக் கட்சி நண்பர்களுக்கு ஆதரவாக மட்டக்களப்பில் பிரச்சாரம் செய்கின்றார். ஜனாதிபதித் தேர்தலில் அவருக்காகப் பிரச்சாரம் செய்த தமிழரசுக் கட்சிக்காரர்கள் இப்பொழுது சங்குச் சின்னத்துக்கு எதிராக நிற்கிறார்கள். அதாவது பொது வேட்பாளருக்கு எதிராக பொதுச்சின்னம்?

இதுதான் ஒட்டுமொத்த தேர்தல் கள நிலவரம். இது வாக்காளர்களை அதிகம் குழப்பும். ஒரு தொகுதி வாக்காளர்கள் பழகிய சின்னம் பெரிய கட்சி என்று பார்த்து வீட்டுக்கு வாக்களிக்கக் கூடும்.இன்னொரு தொகுதி அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட சின்னம் என்று கருதி சங்குக்கு வாக்களிக்கக் கூடும். இன்னொரு தொகுதி எல்லாருமே கள்ளர்கள் இரண்டு கஜன்களும்தான் சுத்தமான தங்கங்கள் என்று நம்பி சைக்கிளுக்கு வாக்களிக்கக் கூடும்.

பெரும்பாலான சுயேச்சைகள் வாக்குகளைச் சிதறடிப்பதோடு வாக்காளர்களையும் குழப்பக்கூடும். ஆனால் யார் குழப்பினாலும் எந்தச் சின்னம் குழப்பினாலும், தமிழ் மக்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். யாருக்கு வாக்களிக்க கூடாது என்பதுதான் அது. தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை இல்லை. சுயேச்சைகளுக்கு இடையே ஒற்றுமையில்லை. உண்மைதான். ஆனால் அதற்காகச் சலிப்படைந்து விரக்தியடைந்து தென்னிலங்கை மையக் கட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாது. விழுகிற ஒவ்வொரு தமிழ் வாக்கும் ஏதாவது ஒரு தமிழ்த் தேசிய வேட்பாளருக்கு விழுவதுதான் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பானது. ஏனென்றால் மீன் கரைந்தாலும் சட்டிக்குள் இருக்கட்டும்.

Plan Design Build







Paramount
Custom Homes Ltd.
Quality comes first

Build your Dream Home With Us

RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION

ARCHITECTURAL DRAWINGS

OBTAINING BUILDING PERMITS

REZONING

LAND SEVERANCE

FINANCING FOR CONSTRUCTION

EXPERIENCE - 10 + YEARS



Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1

416-335-5885

TARION CERTIFIED BUILDER

REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION

# AQUA WELLNESS CENTRE LIMITED
REHABILITATION CLINIC


# INJURED?

CALL US TODAY
OVER 15 YEARS OF EXPERIENCE
IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT

KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.






AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090


நாட்டின் முதல் மின் வாகன
மின் கல தொழிற்சாலைகள்
மூலம் ஒன்டாரியோவின்
பொருளாதாரத்தை
மீண்டும் வளர்த்தல்
விண்ட்சர் மற்றும் செயிண்ட். தாமஸில் உள்ள புதிய மின் வாகன மின் கல தொழிற்சாலைகள் அதிக ஊதியம் அளிக்கும் புதிய வேலைவாய்ப்புகளையும் ஒன்டாரியோ முழுவதும் ஆற்றல் மிக்க பொருளாதார வளர்ச்சியையும் உருவாக்குகின்றன.
இவை எல்லாமே
இங்கே
நடக்கின்றன.
ontario.ca/RebuildingOurEconomy
ஒண்டாரியோ அரசாங்கத்தின் நிதியுதவியுடன்
Ontario


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160

# மரண அறிவித்தல்



**தோற்றம்:** 08 – 11 – 1940

**மறைவு:** 11 – 07 – 2024

## திருமதி. சந்தானலட்சுமி நடராஜா

### (திருநெல்வேலி)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மற்றும் கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சந்தானலட்சுமி நடராஜா அவர்கள் கார்த்திகை 7ம் திகதி 2024 அன்று மேல்மருவத்தூர் அன்னை ஆதிபராசக்தி திருவடி நிழலில் சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உமாதேவி (உமா), கதிர்காமநாதன் (நாதன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், நவதாசன், சத்தியாம்பிகை (பாமா) ஆகியோரின் அன்பு மாமியும், அரவிந்தன், பவித்திரன், கோகுலன், வாசுகி-ஜெனிஷன் ஆகியோரின் ஆசைப் பேத்தியும், ஜெகதாம்பிகை (Malaysia), சாவித்திரி (Germany), செந்தில்மணி (வவுனியா) ஆகியோரின் அருமை சகோதரியும், காலஞ்சென்ற சற்குணம், பத்மநாதன் (நீர்வேலி), காலஞ்சென்ற காங்கேசன், காலஞ்சென்ற தணிகாசலம், சுசிலாதேவி (Germany), காலஞ்சென்ற மகாதேவன், காலஞ்சென்ற தர்மராணி ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை November 10, 2024 மதியம் 12:00 மணி தொடக்கம் 2:00 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று, பின்னர் 3:45pm மணியளவில் Forest Lawn Crematorium, 4570 Yonge St, North York, ON M2N 5L6 ல் தகனம் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: நாதன் (மகன்) 416-724-5044
பவித்திரன் (பேரன்) 647-980-5044

# தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு சுமந்திரன் தகுதியானவரா?

**- பொ. சிந்துயன், இறுதியாண்டு சட்டத்துறை மாணவர் இங்கிலாந்து -**

***(கனடா உதயனுக்கான சிறப்பு அரசியல் கண்ணோட்டம்)***




இலங்கையில் மற்றுமொரு நாடாளுமன்ற தேர்தல். ஆனால் ஈழத் தமிழர்களைப் பொருத்தமட்டில் ஏமாற்றம், நிராசை, காட்டிக்கொடுப்பு போன்ற பல அம்சங்களுடன் மேலுமொரு வாக்கெடுப்பு. எந்த நாடாளுமன்ற தேர்தலின் மூலமும் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதும், சிங்கள தேசத்திடமிருந்து நியாத்தை எதிர்ப்பார்க்க முடியாது என்பதும் உண்மை.

எனினும், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை தமிழர்கள் இழக்கவில்லை அல்லது இழக்க விரும்பவில்லை. ஈழத்திலும் சரி, புலம் பெயர்ந்த தேசங்களிலும் சரி, தமிழர்கள் தமது ஜனநாயக கடமைகளை மதித்து நடப்பவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கான நீதி ஓரளவேனும் கிடைக்க வேண்டுமென்றால், ஜனநாயக பாதையை தவிர்க்க இயலாது என்பது யதார்த்தம். எனவே நம்பிக்கையற்ற நம்பிக்கை என்ற அடிப்படையில் தான், ஈழத்தமிழர்கள், போர் மௌனிக்கப்பட்ட பிறகு தேர்தலில் வாக்களித்து வந்துள்ளனர்.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம், பின்னர் சம்பந்தர் ஆகியோரின் தலைமைகளில் தேர்தல்களை சந்தித்தாலும் இறுதியில் கிடைத்தது என்னவோ பூஜ்ஜியமே.

ஆனால், இப்போது நடைபெறவுள்ள தேர்தல் முன்னைய தேர்தல்களைவிட சற்று வித்தியாசமானதாகவே தோன்றுகிறது. மூத்த அரசியல் தலவர்கள் யாரும் களத்தில் இல்லை. சம்பந்தர் காலமாகிவிட்டார், அடுத்த இடத்திலிருக்கும் மாவை சேனாதிராசா தேர்தல் அரசியலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.

இப்போது தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாக கூறும் "தலைவர்கள்" தாங்களே என்று தம்மைத்தாமே அடையாளப்படுத்தி கொள்பவர்கள் பல திசைகளில் பிரிந்து நிற்கின்றனர். இதில் சுமந்திரன் அணி, சிறீதரன் அணி, கஜேந்திரகுமார் அணி, சுரேஷ் அணி, சித்தர் அணி, விக்னேஸ்வரன் அணி என்று பட்டியல் நீளும். தமிழர்களிடையே உரிமைகளை வென்றெடுப்பதில் ஒரு ஒற்றுமை இல்லை என்பதை இது காட்டுகிறது என்றாலும், அந்த முரண்பாடுகள் ஏற்பட என்ன காரணம் என்பதையும் ஆராய வேண்டிய அவசியம் உள்ளது.

இவற்றுள் "பிழையானை ஆள்" என பல்தரப்பினர் சுட்டிக்காட்டும் ஒரு நபர்தான் சுமந்திரன். அவரே தமிழ் கட்சிகள் மற்றும் தமிழ் மக்களின் வாக்குகள் பிரிவதற்கு பிரதான காரணம் என்பதை தாயகத்தில் பலருடன் பேசிய போது அறிய முடிந்தது. தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு பதிலாக அவர் ஒரு "பிரிவினை சக்தியாக" உள்ளார் என்று ஏராளமானவர்கள் கூறுகின்றனர்.

"அவர் ஆயுதம் ஏந்தாத ஒரு துணை இராணுவக் குழுவினர் போன்று செயல்படுகிறார், சிங்கள அரசியல் கட்சிகளின் கைக்கூலியாக உள்ளார், தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக உள்ளார், தாமே அடுத்த தமிழினத் தலைவர் என்று காட்ட முற்படுகிறார்" என்றெல்லாம் அவர் மீதான விமர்சனங்கள் தாயகத்தில் உள்ளன. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் தமிழர்களின் எதிர்க்காலத்தை நிர்ணயிக்கும் ஒரு தேர்தலாக இருக்கலாம் என்பதால் பலருடன் உரையாடுவதை தவிர்க்க இயலவில்லை. மன்னார் கடற்கரை தொடங்கி போர்க்களமான முல்லைத்தீவு கடற்கரை வரை பலருடன் இந்த தேர்தல் குறித்து அவர்களின் எண்ணம், சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கான தீர்வை எப்படி எட்டுவதை என்பதை ஆராயும் ஒரு சட்ட மாணவனாக பலருடன் கதைத்தேன்.

எடுத்த எடுப்பிலேயே அவரை ஒரு அரசியல் வியாபாரி என்று விபரித்தார் போர் அழிவுகளின் நேரடி சாட்சியாக விளங்கும் செல்லையா சிவநேசன்.

"கடந்த தேர்தலிலேயே அவர் கள்ளத்தனமாகத்தான் வென்றார். அவர் தமிழர்களுக்காக வேலை செய்வதில்லை. தமிழர்களின் நலன்கள் மற்றும் அபிலாசைகளை மழுங்கடிக்க சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து வேலை செய்கிறார் என்பது இங்கு ஊரறிந்த இரகசியம், சுமந்திரன் தமிழர் தியாக உணர்வுகளின் வியாபாரி".

நாட்டின் முன்னணி சட்டத்தரணிகளில் ஒருவரான அவர் மீது இப்படியன விமர்சனம் இருப்பதில் நியாயமுள்ளதா என்பதை ஆராய முற்பட்டால், அவர் மீதான விமர்சனம், கோபம், வெறுப்பு, நம்பிக்கையின்மை போன்றவையே கூடுதலாக வெளிப்பட ஆரம்பித்தன.

தமிழர்கள் எப்போது தமக்கென்று அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார மூலோபாயக் கொள்கைகளை வகுக்கக்கூடிய நிறுவன மயப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை உருவாக்கி அவற்றுக்கூடாக தமது தேச விடுதலைப் போராட்டத்தை நகர்த்த முற்படுகிறார்களோ அன்று தான் அழிவு நிலையில் இருக்கும் தமிழ் தேசியம் பாதுகாக்கப்படும்.

எனினும் இதற்கு மாறாகச் செயல்படும் நபர்களில் சிறந்த உதாரணம் ஒன்று என்றால் அது மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் தான் எனும் குரல்கள் பரந்துபட்ட அளவில் ஒலிக்கின்றன.

சம்பந்தரை தமது கைப்பாவையாகப் பயன்படுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டிற்குள் சுமந்திரன் கொண்டுவந்தார், அதை பயன்படுத்தியே தமிழ் தேசியத்திற்கு எதிரான செயல்பாடுகளைச் செய்தார், இறுதியில் கூட்டமைப்பு என்ற ஒன்றையே இல்லாமல் செய்துவிட்டார் என்ற கடும் குற்றச்சாட்டை அவர் மீது பலர் வைக்கின்றனர்.



இதில் குறிப்பாக கனடாவில் வசிக்கும் அவரது நெருங்கிய உறவினரும், ஊடகவியலாளர் என்ற போர்வையில் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையை முன்னெடுத்து வரும் ஒரு நபரும் இணைந்து தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்து, அதை சர்வதேச அளவில் பரப்பி வருகின்றனர் என்பதை கனடாவிலுள்ள தமிழர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் சுமந்திரன் மற்றும் அவரது வலதுகை என்று கூறப்படும் சாணக்கியன் இருவரும் கனடா சென்று அங்கு தமிழ் மக்களை சந்திக்க முற்பட்ட சமயம் என்ன நடைபெற்றது என்பதை கனடாவிலுள்ள அனைவரும் அறிவார்கள். ஒரு கூட்டத்தில் சுமந்திரனை பேசவிடாமல் கனடா வாழ் தமிழர்கள் தடுத்து அவரை அரங்கைவிட்டு வெளியேற்றியதை இன்றும் சமூக ஊடகங்களில் காண முடியும்.

சுமந்திரன் மிகவும் சாதாரணமாக படிவங்களை நிரப்பும் ஒரு சட்டத்தரணியாகவே தமது தொழிலை தொடங்கி, தொடர்புகள் மற்றும் காட்டிக்கொடுப்பின் மூலம் சிங்கள கட்சிகள், தலைவர்களின் அன்பை பெற்று தம்மை வளர்த்திக்கொண்டார் என்று அவரை நன்கு அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

"2009ற்கு முன்னர் காலி வீதியில் கடவுச்சீட்டு, மற்றும் காப்புறுதி விண்ணப்பபடிவங்களைப் பூர்த்தி செய்து வழங்கி வந்த ஒரு வணிக எண்ணம் கொண்ட சட்டத்தரணி தான் இந்த சுமந்திரன்! தான் ஒரு உண்மையான மனித உரிமை சட்டத்தரணியோ அல்லது உண்மையான மக்கள் பிரதிநிதியோ அல்ல என்பதை சுமந்திரன் பல சந்தர்ப்பங்களில் நிரூபித்துள்ளார். அவர் எந்த பல்கலைக்கழகத்திலும் மனித உரிமை சட்டத்தையோ அல்லது சர்வதேச சட்டத்தையோ படித்ததாக எந்த ஆதாரமும் இல்லை. 2006 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு பிரவினைக்கு எதிராக ரெலோ தாக்கல் செய்த வழக்கில் சுமந்திரன் ஆஜரான போது அவர் எந்த வித தொழில்சார் ஒழுக்கமும் இன்றி செயற்பட்டு மனுதாரர்களுக்கு தெரியாமல் வழக்கை வாபஸ் பெற்றார். அதன் காரணமாக 2010 ஆம் ஆண்டு தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சுமந்திரன் நியமிக்கப்பட்டார். அவர் முதன்முறையாக ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிந்தெடுக்கப்படவில்லை" என்று அவரை பாரதூரமாக விமர்சித்தார் கனகராசா முருகுராசா. சுமந்திரனை தான் 30 வருடங்களுக்கும் மேலாக நெருக்கமாக அருகாமை ஊர்காரர் என்ற வகையில் அவதானித்து வருவதாகவும் அவரது பல விடயங்கள் தனக்கு தெரியும் என்கிறார்.

இதேவேளை சுமந்திரன் குறித்து வெளிப்படையாகவே பலர் ஊடகங்களில் கருத்துக்களை பதிவிட்டுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

2015ல் சுமந்திரன் ஜெனிவா சென்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் போரின் இறுதிக்கட்டத்தில் நடந்தது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களின் படி இனப்படுகொலை அல்ல என்று கூறியதாக 2015 டிசம்பரில் கலாநிதி. எஸ்.ஐ. கீதபொன்சலன் கொழும்பு டெலிகிராப்பில் எழுதினார்.

1997 டிசம்பரில் தமிழ் தகவல் மையம் "சர்வதேச இனப்படுகொலை குற்றம், இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் வழக்கு" என்ற அறிக்கையை வெளியிட்டு ஜேர்மன் சட்ட நிபுணரும் எஸ்.ஓ.ஏ.எஸ் (SOAS) அமைப்பின் சிரேஸ்ட விரிவுரையாளருமான கலாநிதி எஸ். லூட்ஸ் ஒட்டோ என்பவரால் மேற்கொள்ளப்பட்ட நுணுக்கமான ஆய்வின் அடிப்படையில் இலங்கையில் நடப்பது இனப்படுகொலை தான் என முதலில் அறிவித்தது லண்டன் பல்கலைக்கழகம்.

"2014 ஆம் ஆண்டில், மன்னார் மறை மாவட்டத்தின் காலஞ்சென்ற ஆயர்.ராய்ப்பு ஜோசப் ஆண்டகை அமெரிக்க இராஜ தந்திரி ஸ்டீபன் ராப்புக்கு போதுமான ஆதாரங்களுடன் போர் முடிவடைந்த பின்னர் நடந்து வரும் கட்டமைப்பு இனப்படுகொலை குறித்து விளக்கினார். இலங்கையில் தமிழர்களுக்கு என்ன நடக்கிறது? என சுமந்திரனுக்கு தெரியாதா?" என்று வினவுகிறார் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சூசை மைக்கேல் மரியதாஸ்.

தமிழ் மக்களுக்கு உள்நாட்டு ஆணைக்குழுவின் மீது நம்பிக்கை இல்லை எனவும் இலங்கை அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு உரிய நடவடிக்கைகளை பரித்துரை செய்யுமாறு ஐ.நா விசாரணைக்கு அழைப்பு விடுத்து வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனால் 09.பெப்ரவரி.2015 அன்று பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஆதரித்த போதிலும் சுமந்திரன் எதிர்த்தார். இதையெல்லாம் சுமந்திரனால் மறுக்க முடியுமா என் மறுகேள்வி வைத்தார் மற்றொரு அரசியல் பிரமுகர்.

"2015 செப்டெம்பரில் ஜெனிவாவில் திரு.லதன் சுந்தரலிங்கம் நேர்காணல் செய்த போது வடமாகாண சபை தீர்மானம் "முட்டாள்தனமான" நடவடிக்கை, நீதியரசர். ஊ.ஏ.விக்னேஸ்வரன் தனது ஆலோசனைக்கு எதிராக இந்த தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் இனப்படுகொலை விசாரணைக்கான கதவை மூடிவிட்டார்" என்று சுமந்திரன் குற்றம் சாட்டியிருந்தாரே என்கிறார் அந்த அரசியல் பிரமுகர்.



(தொடர்ச்சி 21 பக்கம்)



# சுமந்திரனின் “அமைச்சர்” கனவு பலிக்குமா அல்லது பகல் கனவாகுமா?

***“நாம் அமைச்சுப் பதவிகளை எடுக்கக்கூடாது, ஒரு நிலையான தீர்வு கிடைக்கும் வரை மத்திய அரசில் நாம் பங்குபெறக் கூடாது என்ற கருத்துக்கள் நிலவின. ஆனால், அது கட்சியின் கொள்கை அல்ல. ஏனென்றால் தமிழரசுக் கட்சியும் அமைச்சுப் பதவிகளை எடுத்த ஒரு காலகட்டம் உள்ளது. என் சொந்த நிலைப்பாடு செல்லையா குமார சூரியரைப் போலவோ, லக்ஸ்மன் கதிர்காமரைப் போலவோ, டக்ளஸ் தேவானந்தாவைப் போலவோ தனி ஒரு அமைச்சராக அமைச்சரவையில் போய் சேருவதென்பது மக்களுக்கு நன்மை பயக்காது. ஆனால், முருகேசு திருச்செல்வம் கட்சி சார்பாக - கட்சியின் தீர்மானமாக அமைச்சரானார். அது வித்தியாசமான ஒரு விடயம்” எனக் கூறி தமிழரசுக்கட்சியும் அமைச்சுப்பதவி ஏற்கலாம் என சுமந்திரன் நியாயம் கற்பிக்கின்றார்.***

**- கே. பாலா ----**

2010ஆம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தல் நடந்தபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி.யாக தமிழ் தேசிய அரசியலுக்குள் நுழைந்து படிப்படியாக தமிழர் உரிமைகளை, உரிமைக் கோஷங்களை வலுவிழக்கச்செய்து, தமிழ் தேசியக்கூட்டமைப்பையும் பிளவுபட வைத்து தற்போது தமிழ் மக்களின் தாய்கட்சியான இலங்கை தமிழரசுக்கட்சியையும் அழித்து “ஒட்டகம் புகுந்த வீடாக” உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான எம்.ஏ. சுமந்திரன் இன்று தனது கனவான அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்ள, பொறுப்பேற்கத் தன்னை தயார்படுத்தத் தொடங்கி விட்டதாகவே தெரிகின்றது.

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில, “இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசாங்கத்துடன் இணைந்துகொண்டு, அந்தக் கட்சியின் உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனை வெளிவிவகார அமைச்சராக ஏற்க இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. இவ்வாறாக சுமந்திரன் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வது எமக்கு பிரச்சினை அல்ல. ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்வதற்காக முன்வைத்துள்ள இரண்டு நிபந்தனைகளே பிரச்சினையாக இருக்கின்றன. அதாவது இலங்கையை சம்‘டி அரசாக அறிவிக்கும் அரசியலமைப்பை கொண்டு வர வேண்டும் என்பது நிபந்தனையாக இருக்கின்றது. அதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

இதேவேளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான 30/1 தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் நிராகரித்திருந்தாலும், அந்த தீர்மானத்தை மீண்டும் ஏற்றுக்கொண்டு செயற்படுத்த இவர்கள் இணங்கியுள்ளனர். இந்த தீர்மானத்தை செயற்படுத்தி பிரிவினைவாதிகளை மகிழ்விக்க இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் 2015இல் புலனாய்வுத் துறை வீழ்ச்சிடைய இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளே காரணமாகும். இதனால் அந்த நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க தமிழரசுக் கட்சியிடம் நிபந்தனையின்றி இணங்கியுள்ளனர்” என்ற தகவலை பகிரங்கமாகவே வெளியிட்டார்.

உதய கம்மன்பிலவின் இந்த தகவலை உறுதிப்படுத்தும் வகையில் அநுர தலைமையிலான புதிய அரசில் அமைச்சுப் பதவ-ிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வந்தால் அதனைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என சுமந்திரனும் ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார். முன்னைய காலத்தில் நாங்கள் அமைச்சுப் பதவிகளை எடுக்கக்கூடாது, ஒரு நிலையான தீர்வு வருகின்ற வரைக்கும் மத்திய அரசில் நாங்கள் பங்குபெறக் கூடாது என்கின்ற கருத்துக்கள் நிலவின. ஆனால், அது கட்சியினுடைய கொள்கை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அமைச்சுப் பதவிகளை எடுத்த ஒரு காலகட்டமும் இருந்திருக்கிறது.

ஆகவே, அப்படியான ஒரு சூழ்நிலை வருகின்ற போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அந்த நேரத்தில் தான் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். எனினும் என்னுடைய சொந்த நிலைப்பாடு செல்லையா குமார சூரியரைப் போலவோ அல்லது லக்ஸ்மன் கதிர்காமரைப் போலவோ அல்லது டக்ளஸ் தேவானந்தாவைப் போலவோ தனி ஒரு அமைச்சராக அமைச்சரவையில் போய் சேருவதென்பது மக்களுக்கு நன்மை பயக்காது. ஆனால், முருகேசு திருச்செல்வம் போல் கட்சி சார்பாக - கட்சியினுடைய தீர்மானமாக மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு அமைச்சரவையில் சேர்ந்தார். ஆனால், அமைச்சராக இருந்தும் நடைமுறைப்படுத்த முடியவில்லை எனத் தெரிந்த உடனேயே கட்சியின் கட்டளைப்படி அரைவாசிக் காலத்திலேயே அமைச்சுப் பதவியை அவர் பதவிவிலகல் செய்து வெளியே வந்தார். அது வித்தியாசமான ஒரு விடயம் என்று கூறி அமைச்சர் பதவி ஏற்பதற்கான தனது விருப்பை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அமைச்சுப் பதவியை பொறுப்பேற்பதற்கான தயார்படுத்தலை சுமந்திரன் நேற்றோ இன்றோ முன்னெடுக்கவில்லை. கடந்த 14 வருடங்களுக்கும் மேலாகவே நீறு பூத்த நெருப்பாக அவர் மேற்கொண்டு வந்த தயார்படுத்தல்கள், காய் நகர்த்தல்கள், ஆடுபுலி ஆட்டங்களுக்கு ஆட்சியில் இருந்த அரசுகள் பொருந்தி வராத நிலையிலும் அந்த அரசுகளில் அமைச்சுபதவியை பொறுப்பேற்றால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்பதாலும் தமிழ் தேசியக்கூட்டமைப்பை பிளவுபடுத்தி தமிழரசுக்கட்சியை அழிக்கும் ஒப்பந்தம் நிறைவேறாததாலுமே இதுவரை ஆசையை அடக்கி வைத்திருந்த சுமந்திரன் தற்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பினதும் இலங்கை தமிழரசு க்கட்சியினதும் அழிவின் இறுதிக் கட்டத்திலும் மக்கள் வேண்டிய ஆட்சிமாற்றம் ஒன்று நிகழ்ந்துள்ள நிலையிலுமே தனது அமைச்சுப் பதவி ஆசையை வெளிப்படுத்தியுள்ளார்.

இரா. சம்பந்தனின் தூரநோக்கற்ற சிந்தனையின் விளைவாக 2010 ஆம் ஆண்டு தேசியப்பட்டியல் மூலம் தமிழ் தேசிய அரசியலுக்குள் நுழைந்த சுமந்திரன், தமிழ் தேசியக்கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக்கட்சி என்பவை இருந்தால் தனது அமைச்சுப் பதவிக் கனவு நனவாகாது என்பதனாலேயே முதலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்ற மரத்தை அடியோடு வெட்டாமல் அதன் கிளைகளை ஒவ்வொன்றாக வெட்டி வீழ்த்த ஆரம்பித்தார்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் அப்போதைய தலைவரான இரா. சம்பந்தனின் நம்பிக்கைக்குரியவராகவும் சம்பந்தனின் அடுத்த நிலைக்குரியவராகவும் சம்பந்தனின் தீர்மானங்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடியவராகவும் இருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது கட்சியினருக்கு பாராளுமன்றத் தேர்தலில் வேட்புமனுக்கள் கொடுக்க மறுத்து இரா. சம்பந்தன் தரப்பால் செய்யப்பட்ட அநீதியினால் சம்பந்தனுடன் முரண்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது அணியுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நேரத்தில் சுமந்திரன் தமிழ்தேசியக்கூட்டமைப்புக்குள் நுழைந்தமை சுமந்திரனின் ஆதிக்கத்துக்கு வாய்ப்பாக அமைந்தது.

அதேபோன்றே சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு அவர் பாராளுமன்றத்தேர்தலில் திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டு தேசியப்பட்டியல் ஆசனமும் மறுக்கப்பட்டு பாராளுமன்ற அரசியலில் இருந்து வெளியேற வைக்கப் பட்டார். இவ்வாறு சுமந்திரனுக்கு சவாலாக தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்தவர்கள் திட்டமிட்டு அகற்றப்பட்ட பின்னர் சம்பந்தனின் வலதுகரமாக மாறிய சுமந்திரன் சம்பந்தனின், உடல் நிலையைப் பயன்படுத்தி தனது முடிவுகளையும் அறிவிப்புக்களையும் சம்பந்தனின் முடிவுகளாக, அறிவிப்புக்களாக வெளியிட்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பை தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

இதன் பின்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்புக்குள் சுமந்திரனால் ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகள், குழப்பங்கள், குத்து வெட்டுக்கள், குழிபறிப்புக்களினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய பங்காளிக் கட்சிகளும் வெளியேறின. வெளியேற்றப்பட்டன. அதனுடன் மட்டும் நின்றுவிடாது தன்னை அரசியலுக்கு அறிமுப்படுத்தி அரசியல் முகவரி கொடுத்த தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் மீதே வளர்த்த கடா மார்ப்பில் பாய்ந்த கதையாக பாய்ந்த சுமந்திரன் செயலற்ற தலைவராக இருக்கும் சம்பந்தன், எம்.பி. பதவியிலிருந்து விலக வேண்டுமென போர்க்கொடி தூக்கினார். சம்பந்தன் சுமந்திரனின் சுயரூபத்தைக்கண்டு கொண்டு பதவி விலக மறுத்தாலும் தமிழரசுக்கட்சி அழிவதை சம்பந்தன் பார்த்து கண்ணீர் வடிக்கக்கூடாது என்று நினைத்தோ என்னவோ இயற்கை சம்பந்தனை அழைத்துக் கொண்டது.

இதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்தும் சுமந்திரனின் திட்டம் வெற்றிபெற்றது. இதனைத்தொடர்ந்து அடுத்த ஆட்டமாக தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவத்தை கைப்பற்றி பேரினவாத ஆட்சியாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டுடன் ஆட்சியில் பங்கேற்று பயணிப்பது அல்லது தமிழரசுக்கட்சியையும் அழித்து விட்டு தமிழர் தேசிய அரசியலை முன்னெடுக்க எந்தவொரு பலமான கட்சியும் இல்லாத நிலையை ஏற்படுத்தி விட்டு பதவியேற்கும் அரசுடன் பயணிப்பது என்ற திட்டத்தை செயற்படுத்தத் தொடங்கினார்.

சுமந்திரனின் முதல் திட்டத்துக்கு சிறீ-தரன் தமிழ் தேசியம் என்ற கொள்கையுடன் பெரும் தடைக்கல்லாக அமைந்து தமிழரசுக்கட்சியின் தலைமையை ஜனநாயக முறைப்படி கைப்பற்றி சுமந்திரனை ஆட்டம் காண வைத்ததால் தனது அடுத்த ஆட்டத்தை தொடங்கிய சுமந்திரன் கட்சிக்குள் தன்னால் உள்வாங்கப்பட்டு ஜால்ரா அடிக்கப் பழக்கப்படுத்தப்பட்ட விசுவாசிகளை பயன்படுத்தி நீதிமன்றத்தில் வழக்குகளை தாக்கல் செய்து சிறீதரனை தமிழரசுக்கட்சியின் தலைவர் பதவியை ஏற்க விடாது இடைக்காலத் தடை உத்தரவுகளைப் பெற்று கட்சியின் அரசியல் செயற்பாடுகளை முடக்கினார்.

இதற்கிடையில் ஜனாதிபதித்தேர்தல் வந்த நிலையில் அப்போது ஜனாதிபதியாகவிருந்த ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற மாட்டார் என்பதனை கணித்த சுமந்திரன், தமிழரசுக்கட்சியின் ஆதரவை வழங்க அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடனும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடனும் “டீல்” பேசினார். இதில் சுமந்திரனின் பிரதான டீலாக தனக்கு வெளிவிவகார அமைச்சு, நிதி அமைச்சு அல்லது நீதி அமைச்சு வழங்கப்பட வேண்டும் என்பதே இருந்ததாக அக்கட்சிகளின் உள்வீட்டு தகவல்கள் வெளிவந்தன.

இதில் தமிழரசுக்கட்சியின் ஆதரவை பெற்றால் தமது சிங்கள வாக்கு வங்கி பாதிக்கப்படும் என்பதனை உணர்ந்த தேசிய மக்கள் சக்தி சுமந்திரனின் டீலை நிராகரித்த நிலையில் சஜித் பிரேம தாச வாய் மூல உறுதி மொழி மூலம் சுமந்திரனின் டீலை ஏற்றுக் கொண்டதாலேயே சுமந்திரன் தமிழரசுக்கட்சிக்குள் பலரது எதிர்ப்பையும் மீறி சஜித் பிரேமதாசவை தமிழரசுக்கட்சி ஆதரிக்கும் என்ற சர்வாதிகாரத்தன தீர்மானத்தை அறிவித்தார். ஆனால் சுமந்திரனுடனான டீலுக்கு கட்சிக்குள்ளேயே சஜித் பிரேமதாச கடும் எதிர்ப்புகளை சந்திக்க வேண்டி வந்தது.சுமந்திரன் கோரியதாக தெரிவிக்கப்படும் அந்த அமைச்சுக்களுக் காக காத்திருந்த மூத்த உறுப்பினர்கள் தமது எதிர்ப்புக்களை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியிருந்தனர். இவ்வாறான நிலையில் சஜித் பிரேமதாச படு தோல்வியடைந்ததால் சுமந்திரனின் ஆசை நிறைவேறவில்லை.

(தொடர்ச்சி 27 பக்கம்)

# கனடாவில் கார்த்திகைக் காந்தளும் பாப்பி மலரும்




- குரு அரவிந்தன்

கனடாவில் நினைவுதினம் என்பது போர்க்காலத்தில் நாட்டுக்காக உயிர் தந்தவர்களையும், அக்காலத்தில் போர்முனையில் தம் உயிரைப் பணயம் வைத்துப் பணியாற்றியவர்களையும் கௌரவிக்கும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி அனுசரிக்கப்படுகின்றது. இதில் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த மரணித்த போர் வீரர்களும் அடங்குவர். இந்த வாரம் முழுவதும் கனடியர்கள் சிகப்பு நிறத்திலான பாப்பி மலர்களை அணிவதன் மூலம் மரணித்தவர்களை நினைவேந்தல் மூலம் கௌரவிக்கின்றனர். அமெரிக்காவைச் சேர்ந்த மொய்னா மைக்கேல் என்பவர்தான் சிவப்பு பாப்பி மலரை 1918 ஆம் ஆண்டு இதற்காக அறிமுகம் செய்தார். 1921 ஆம் ஆண்டு கனடாவில் இந்த சிவப்பு பாப்பி மலர் இதற்காக அறிமுகமானது. கனடாவில் சில அமைப்புக்கள் வெள்ளை பாப்பி மலரை அறிமுகம் செய்தாலும் அது பெரிதாக மக்களிடையே பிரபலமடையவில்லை.

இதற்கு முன்பு தென்னாபிரிக்கப் போரின் நினைவு நாளாகக் கனடாவில் இந்தத் தினம் இருந்தது. முதலாம் உலப் போரின் போது சுமார் 61,000 கனடியர்கள் கொல்லப்பட்டனர். 1918 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் தான் போர்நிறுத்தத்திற்கான கையெழுத்திடப்பட்டது. இதன் காரணமாக 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 திகதி கனடியர்கள் போர் நிறுத்தத் தினத்தை நினைவேந்தல் தினமாக நினைவு கூர்ந்தாலும், உத்தியோக பூர்வமான நினைவேந்தல் 1931 ஆம் ஆண்டுதான் இத்தினத்தில் இடம் பெற்றது. அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளும் வெவ்வேறு பெயர்களில் இந்தத் தினத்தையே கடைப்பிடிக்கின்றன.

இந்த நினைவேந்தல், இரண்டாம் உலகப் போர், கொரியப் போர் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடந்த போர், அமைதி காக்கும் பணிகள் மற்றும் பிற சர்வதேச இராணுவ ஈடுபாடுகளின் போது போரில் இறந்தவர்களின் நினைவாகவும் இடம் பெறுகின்றது. இதுவரை சுமார் 118,000க்கும் அதிகமானோர் வெளிநாட்டு மோதல்களில் இறந்துள்ளதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. 2020-2021 ஆண்டு கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக பொது இடங்களில் நடைபெறும் இந்த நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவில்லை.

தாயகத்தில் எம்முயிர் காக்கத் தம்முயிர் தந்தவர்களைத் தமிழர்கள் நினைவுகூரும் நாளாகக் கனடாவில் நவெம்பர் 27 ஆம் திகதி இடம் பெறுகின்றது. அவர்கள் செய்த தியாகம்தான் இன்று நாங்கள் அனுபவிக்கும் சுதந்திரம் என்பதை அடுத்த தலைமுறையினரும் இந்த நிகழ்வின் மூலம் அறிந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. முதல் இரு வாரங்களில் சிவப்பு பாப்பி மலர்ச்சின்னம் அணிந்தவர்களையும் கடைசி வாரத்தில் காந்தள் மலர்ச் சின்னம் அணிந்தவர்களையும் பொது இடங்களில் காணமுடிகின்றது. ரொறன்ரோவில் 27-11-2024 மிசசாகா எயர்போட் வீதியில் உள்ள இன்ரநாசனல் சென்ரரிலும், மொன்றியலில் Le Chateau Royal மண்டபத்திலும், ஒட்டாவாவில் Nepean Sportsplex என்ற இடத்திலும் மேலும் பல இடங்களிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

Laurence Binyon என்பவரால் 1914 ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'For the Fallen' என்ற கவிதையில் இருந்து Act of Remembrance என்ற வரிகள் எடுக்கப்பட்டு உலகெங்கும் உள்ள அனேகமான போர்க்காலக் கல்லறைகளில் பொறிக்கப்பட்டன. அந்தப் பாடலின் சில வரிகள் இதோ:

"உயிரோடு எஞ்சியிருக்கும் நாம் முதுமை அடைவது போல இவர்கள் முதுமை அடைய மாட்டார்கள். வயது இவர்களைச் சோர்வடையச் செய்யாது, முதுமை இவர்களைத் தண்டிக்காது. சூரியன் மறையும் நேரத்திலும், காலையிலும், நாம் அவர்களை நினைவில் கொள்வோம்."

நிச்சயமாக எம் உயிர் காக்கத் தம் உயிர் தந்தவர்கள் நினைவில் கொள்ளப்பட வேண்டியவர்கள், காலம் மறந்தாலும் நாம் மறக்கக்கூடாது!




(19 பக்கத் தொடர்ச்சி)

## தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு சுமந்திரன் தகுதியானவரா?

"அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதில் சுமந்திரன் வல்லவர், சூழ்ச்சிகளை திட்டமிட்டு செய்வதிலும் அவர் கெட்டிக்காரர்" என்று அவரை நன்கு அறிந்த பலர் கூறுகின்றனர். அதற்கான காரணங்களையும் அவர்கள் சுயமாக மட்டுகின்றி, ஊடகங்களில் வந்த செய்திகளுடன் மேற்கோள் காட்டுகின்றனர்.

கடந்த 2017 ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனவரி 13 ஒரு நிகழ்வில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் செல்லவிருந்த சுமந்திரன் கடைசி நேரத்தில் தனது பயணத்ததை இரத்து செய்தார். காரணம் சுமந்திரனைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் கூறியதாக ஊடகங்களுக்கு செய்தி வழங்கினார். ஐக்கிய நாடுகள் சபைக்கும் உலக நாடுகளுக்கும், "இலங்கையில் விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் காணப்படுகின்றது" என்பதை போலியான முறையில் சித்தரித்து வெளிக்காட்டினார். இக்கொலை முயற்சியுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களாக 11 சிங்களவர்களும் 4 தமிழர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 11 சிங்களவர்களும் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். ஆனால் அந்த 4 அப்பாவித் தமிழர்களும் இன்னும் சிறையில் உள்ளனர். அவர்களில் அங்கவீனர்களும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும் உள்ளனர் என்று விடயமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

சிங்கள மக்களின் சார்பாக தொடர்ந்து செயல்பட்டு, அதன் மூலம் தான் மட்டுமல்லாமல், தனது மகளுக்கும் சலுகைகளை பெற்றுக்கொடுத்தவர் சுமந்திரன் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது. தமிழ் மக்களை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்த சிங்கள அரசியல் தலைவர்களுடன் அவர் இணைந்து செயல்பட்டார், அதன் பெறுபேறாக சிலபல சலுகைகளைப் பெற்றுக்கொண்டார் என்றும் அவரை அறிந்த கொழும்பு பெண்ணொருவர் கூறுகிறார். சுபாசினி தர்மராசா என்று தன்னை அடையாளப்படுத்தி கொண்ட அவர்:

"சுமந்திரனை தமிழ் மக்களின் பிரதிநிதி எனக் கூறக்கூடாது. தனக்கு தேவையானவற்றை மட்டுமில்லாமால் தனது மகளுக்கும் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க அலுவலகத்தில் வேலை ஒன்றை பெற்றுக்கொடுத்தார். மேலும் தனக்கு அச்சுறுத்தல் உள்ளது என்றும் மெய்பாதுகாவலர்களைப் பெற்றுக்கொண்டார். இனப்படுகொலையை மறைப்பதற்காக மஹிந்தவுடன் கைகோர்த்து பல வேலைத்திட்டங்களைச் செய்தார். அவர் தமிழினத்துக்கு எதிராக துரோகங்களை மட்டுமே செய்துள்ளார். இதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. 2017ம் ஆண்டு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்காக சில நிபந்தனைகளை முன்வைத்தது. அதில் ஒன்று இலங்கை அரசு போர்க்குற்றங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பொறுப்பு கூறலை முன்வைக்க வேண்டும் என்பதாகும். இதனையடுத்து அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் சுமந்திரன் இடையே இரகசிய பேச்சுவார்த்தை இடம்பெற்றது. இதன் விளைவாக பொறுப்புக்கூறலை நிரூபிக்க உள்நாட்டு விசாரணையே தேவையென சர்வதேச பிரதிநிதிகளுக்கு மின்னஞ்சல் அனுப்பட்டது. இதனை சரியாக செய்து முடிப்பதற்காக பிரித்தானியாவின் ஒக்ஸ்பொர்ட் பல்கலைக்கழகம் இலங்கைக்கு வழங்கிய இலவச புலமைப்பரிசிலினை ரணில் சுமந்திரனுடைய மகளுக்கு வழங்கினார்."

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல கொடுமைகள் வெளிவராமல் தடுப்பதற்கு சிங்கள அரசுகளுடன் இணைந்து சுமந்திரன் வேலைகளைச் செய்தார் என்றும் குற்றச்சாட்டு உள்ளது. இதை தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்களே கூறுகிறார்கள், ஆனால் வெளிப்படையாக பதிவு செய்ய தயங்குகிறார்கள். நாட்டில் சூழல் அப்படி என்று அவர்கள் கூறுகின்றனர்.

"போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை குற்றச்சாட்டுகளில் இருந்து சிங்கள அரசையும் அதன் தலைவர்களையும் காப்பாற்றுவதில் சுமந்திரன் முன்னின்று செயல்படுகிறார்" என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 15 ஆண்டுகளாக தமது குடும்ப உறவுகளை தேடும் குழுவிலுள்ள பெண் சந்திரகாந்தி அரசநாயகம் கூறுகிறார். தம்மைப் போன்ற பெண்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தை மழுங்கடிக்க முழுமூச்சாக முன்னின்று செயல்படுபவர் சுமந்திரன் என்றும், அவருக்கு எதிராகவும் தாங்கள் போராட்டங்களை நடாத்தியுள்ளதாவும் அவர் தெரிவித்தார். தமிழர்களின் சார்பாக என்று கூறும் அவரது வெளிநாட்டுப் பயணங்கள் குறித்தும் தங்களுக்கு சந்தேகம் உள்ளது எனவும் அழுத்தமாக கூறினார் சந்திரகாந்தி.

"எமது இனத்தை கொன்றொழித்தவர்களை காப்பாற்ற செயல்படும் ஒருவர் எப்படி எமது ஈழத்தமிழ் மக்களின் பிரதிநிதியாக இருக்க முடியும்? ஜனநாயக நெறிமுறைகளை மீறி கடந்த தேர்தலில் தோல்வியை எதிர்கொண்ட நிலையில், எப்படி அவர் சசிகலா ரவிராஜை மீறி வென்றார், அவரால் வாக்கு எண்ணும் நிலையத்திற்குள் எப்படி வர முடிந்தது, இதற்கெல்லாம் உண்மையான பதில் எங்கே?"

"என் வெற்றியை சுமந்திரனுக்கு விட்டுத்தருமாறு எனது பிரதான இணைப்பாளர் மிரட்டப்படுகிறார்" என சசிகலா ரவிராஜ் தன்னுடைய முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தார் என்பதையும் அவர் இப்போது சுட்டிக்காட்டுகிறார்.

இவ்வாறான மிகவும் கடுமையான விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு இடையில் தான் சுமந்திரன் மீண்டும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அவர் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு தகுதியானவரா என்பதை தமிழ் மக்கள் உடனடியாக முடிவு எடுக்க வேண்டும்.

(பாதுகாப்பு காரணங்களுக்காக பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இல்லாத ஒன்றுக்கு கனவு காண்பதை விட யதார்த்தமானதை அடைய முயற்சிப்பதே சிறந்தது

## வடமராட்சியில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து!





மக்களுடன் தொடர்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற மக்களிக்காக உழைக்கின்ற தரப்பினரையே மக்கள் இம்முறை தமது அரசியல் பிரதிநிதிகளாக தீர்மானிப்பர் என சுட்டிக்காட்டியுள்ள ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இல்லாத ஒன்றுக்காக கனவு காண்பதை விட யதார்த்தமானதை அடைய முயற்சிப்பதே சிறந்தது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வடமராட்சி பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக சென்றிருந்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா 2ம் திகதி சனிக்கிழமை மக்களுடனான கலந்துரையாடலின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்: நான் மக்கள் நலனில் இருந்தே செயற்பட்டு வருகின்றேன். ஆனால் அன்று எமது தமிழ் அரசியல் முன்னோர்கள் சம்'டி என்ற கோரிக்கையை முன்வைத்து மேடைகளில் முழங்கி தேர்தல் வெற்றிகளை பெற்று நாடாளுமன்றை அலங்கரித்தினர்.

ஆனால் அவர்கள் தாம் முன்வைத்த விடயத்தின் இலக்கை அடையச் செய்வதற்கான பொறிமுறையை துளியளவும் கொண்டிருக்கவில்லை. அதேபோன்றுதான் அவர்கள் வழி வந்து போலித் தேசியம் பேசும் இன்றைய அரசியல் பரப்பில் உள்ளவர்கள் கூறிக்கொண்டிருக்கும் கொள்கைகளுக்கும் பொறிமுறையற்றதாக இருக்கின்றது.

நான் ஏனைய தமிழ் அரசியல் தரப்பினரை போன்று நாடாளுமன்றை அலங்கரிக்க 23 ஆசனங்களை கேட்கவில்லை. குறைந்தது 4 முதல் 5 ஆசனங்களையே எனக்க தாருங்கள் என கோருகின்றேன்.

அதுமட்டுமல்லாது நான் உசுப்பேற்றல்களால் ஆயுதப் போராளியாகவோ அல்லது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கோ வந்தவன் அல்ல, தமிழ் மக்கள் மீதிருந்த உணர்வுகளால் வந்தவன்.

எனது மக்கள் மீதான எனக்குள்ள உணர்வுகளே இன்றுவரை நாடாளுமன்றில் என்னை பிரதிநிதியாக்கவும் வைத்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. இதுவே இன்று வெற்றிபெற்றுள்ளது.

அத்துடன் எமது கொள்கை வலுவானது. நடைமுறை சாத்தியமான வழிநடத்தல் எமது கொள்கை இன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வலுவாக்கப்பட்டுவிட்டது.

இதேநேரம் நான் அரசியல் பயத்தால் அல்லது தோற்கடிக்கப்பட்டு விடுவேன் என்ற பயத்தால் ஒருபோதும் ஒதுங்கவும் போவதில்லை.

எமது கொள்கையின் மீது எமக்கிருக்கின்ற பற்றே, எமது கொள்கை மீது எமது அதீத நம்பிக்கைக்கு காரணம். எமது இந்த வலுவான கொள்கையை இன்று எல்லோரும் உணர்ந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் எமது கருத்துக்கள் ஒருசிலரது சுயநலன்களுக்காக திட்டமிட்டு சேறுபூசல்களுக்கு உள்ளாக்கப்பட்டது.

இதேநேரம் நாம் கூறிய பாதையும் வழிமுறையும் தான் சரியானது என்று இன்று அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் அரசியலுக்காகவோ அல்லது வாக்குக்காகவோ எதையும் நான் பேசுவதில்லை. மக்கள் நலன் சார்ந்தே எனது அனைத்து செற்பாடுகள் அமையும்.

அதனடிப்படையில் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

அந்த வகையில் கார்த்திகை 14 ஆம் திகதியன்று உங்கள் ஒவ்வொரு வாக்கினூடாக எமது வீணைச் சின்னத்தை வலுப்படுத்தி கொடுப்பீர்கள் என நம்புவதுடன் அதனூடாக எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளில் இருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆசிய சதுரங்க இறுதிப் போட்டியில் "கலக்கவுள்ள" யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தரம் 2 மாணவி கஜிஷனா தர்ஷன்!

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 2 இல் கல்வி பயின்று வரும் கஜிஷனா தர்ஷன் என்ற சிறுமி, சதுரங்க துறையில் தேசமே கொண்டாடும் வகையில் சாதனைகளை படைத்து வருகின்றார்.

வட மாகாணத்தை சேர்ந்த இந்த சிறுமி தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் சதுரங்க சம்மேளத்தினால் நடாத்தப்பட்ட சதுரங்க போட்டியில் ஏழு வயதிற்குட்பட்ட பிரிவில் தங்க பதக்கத்தை பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

வட மாகாணத்தால் ஒரே ஒரு தங்க பதக்கம் மாத்திரமே வெல்லபட்டது. அதனை குறித்த சிறுமியே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இதன் மூலம் தாய்லாந்தில் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஆசிய இறுதி போட்டியில் எமது நாட்டின் official player ஆக பங்குபற்றவுள்ளார். அத்துடன் சேர்ஜியாவில் நடைபெறவுள்ள உலக பாடசாலைகள் சதுரங்க போட்டிகளிலும் மற்றும் Fide cadet போட்டிகளிலும் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ வீரராக இவர் விளையாடவுள்ளமை குறிப்பிடதக்கது.

வடமாகாணம் மட்டும் அன்றி இலங்கையில் மூன்று வகையான சதுரங்கத்தில் ரேட்டிங் கொண்டிருக்கும் ஒரே ஒரு சிறுமியாக இவர் திகழ்கிறார். அத்துடன் Rapit (15+10 sec) சதுரங்க தரப்படுத்தலில் 1615 புள்ளிகளுடன் உலக அளவில் 4ம் இடத்தில் உள்ளார்.

இலங்கை ரீதியில் Battle of Mind இல் சாம்பியன் பட்டம், 9 வயதுக்குட்பட்ட பெண்கள் குழு போட்டியில் Board champion 2024 இல், வலய, மாவட்ட, மாகாண போட்டிகளில் முதலிடம் போன்றவை குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள குறித்த போட்டியில் பங்குபற்றுவதற்றி மேலும் சாதனைகள் படைப்பதற்கு நிதி அனுசரணை வசதிகள் எதிர்பார்க்கப்படுகிறது.






# ANFREL தேர்தல் கண்காணிப்பு குழுவினர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருடன் சந்திப்பு



யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் ANFREL (Asian Network Free Elections) தேர்தல் கண்காணிப்பு குழுவினர் திங்கட்கிழமை அன்றைய தினம் (04.11.2024) யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் அவர்களை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாராளுமன்றத் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் ANFREL தேர்தல் கண்காணிப்பு குழுவின் சர்வதேச கண்காணிப்பாளர் திரு. ஹெரி விபோவோ ரிக்சாக்சொனா (Mr.Hery Wibowo Trisaksono) மற்றும் திரு. எஸ். கலாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ் மக்களுக்கு அமைச்சுப் பதவி அசவசியமில்லை: ஆனால் சுமந்திரனுக்கு அமைச்சர் பதவி தேவை

## வேட்பாளர் மிதிலைச் செல்வி தெரிவிப்பு!




தமிழ் மக்கள் தமக்கான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கிறார்கலே அல்லாமல் அமைச்சர் பதவிகளை எதிர்பார்க்கவில்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளர் மிதிலைச் செல்வி ஸ்ரீ பத்மநாதன் தெரிவித்தார்.

07ம் திகதி அன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம் க்ஷபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர் ஒருவரால் சுமந்திரன் தமிழ் மக்கள் அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கிறார்கள் என தெரிவித்திருந்தமை தொடர்பில் பதில் வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் அமைச்சுப் பதவிகளை பெறுமாறு கேட்டதாக நாங்கள் அறியவில்லை. நாங்களும் பல்வேறு இடங்களுக்கு தேர்தல் பரப்புரைகளுக்காக சென்ற நிலையில் மக்கள் தமது அரசியல் தீர்வை பெறுவதற்கு தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்ற கருத்தையே அதிகம் முன் வைக்கிறார்கள்.

சுமந்திரனுக்கு தெற்கு கட்சிகளுடன் இணைந்து அமைச்சுப் பதவியை பெறுவதற்கு விருப்பமாக உள்ள நிலையில் அது தமிழ் மக்களுக்கு விருப்பம் எனக் கூறி மக்களின் தலையில் பாவத்தை போடப் பார்க்கிறார்.

சுமந்திரன் தமிழரசு கட்சிக்குள் என்ன செய்தார் என்பது பலருக்கு தெரியும் தானே முடிவை எடுத்துவிட்டு கட்சியின் மத்திய குழு முடிவு என பலதை தெரிவித்து இருக்கிறார்.

நான் தற்போது மான் சின்னத்தில் தமிழ் மக்கள் கூட்டணியில் பெண் வேட்பாளராக களமிறங்கியுள்ள நிலையில் எமது கட்சி மட்டுமே மாற்றத்தை உருவாக்கக்கூடிய வேட்பாளர்களை கொண்டுள்ளது.

மக்கள் மத்தியில் புதியவர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்ற நிலைப்பாடு அனேகமானவர்களிடம் காணப்படும் நிலையில் எமது கட்சி மட்டுமே புதியவர்களை கொண்ட கட்சியாக காணப்படுகிறது.

ஆகவே தமிழ் மக்கள் அமைச்சுப் பதவிகளுக்கு விலை போனவர்கள் அல்ல அமைச்சுப் பதவி சுமந்திரனுக்கு தேவையாக இருந்தால் மக்களை அடகு வைக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலுக்கு பொருத்தமானவர் அல்ல

## மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவிப்பு!

சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலுக்கு பொருத்தமானவர் அல்ல அவர் ஒரு மதமாற்றி என இலங்கை சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்தார்.

07-11-2024 அன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இடம் பற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரால் தமிழரசு கட்சியின் வேட்பாளர் தெரிவு தொடர்பில் சுமந்திரன் மீது பல்வேறு தரப்பினர்களும் குற்றச்சாட்டு முன்வைப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுமந்திரன் தமிழ் தேசிய அரசியலுக்கு பொருத்தமற்றவர் என நான் ஆறு வருடங்களுக்கு முன்பே கூறியிருக்கிறேன் கட்சிக்கும் அதனை தெரிவித்திருக்கிறேன்.

இந்தியாவிலிருந்து வருகை தந்த புத்தர் கூட மத மாற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டது இல்லை சுமந்திரன் மதமாற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்.

சுமந்திரனுடைய மனைவிக்கு, இங்கிலாந்தில் இருந்து மதமாற்ற செயற்பாடுகளுக்காக டொலரில் பணம் வழங்கப்படுகிறது.

சாவித்திரி சுமந்திரன் ஒரு கருவி மட்டுமே சுமந்திரன் தான் மதமாற்ற செயற்பாடுகளை முன் நின்று செயல்படுத்துகிறார்.

நாங்கள் மதங்களுக்கு எதிரானவர்கள் அல்ல மத மாற்றிகளுக்கு எதிரானவர்கள் என பல்வேறு ஊடக சந்திப்புகளில் வலியுறுத்தி வந்துள்ளேன்.

மதமாற்றிகளுக்கு எதிராக சைவத்தை பாதுகாப்பதற்காக சுயேச்சை குழுவாக இலக்கம் 14 ஆமை சின்னத்தில் சிவ தொண்டர்கள் ஒன்பது பேர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

4 இலட்சம் சைவ வாக்காளர்கள் உள்ள நிலையில் எமது இனத்தையும் மதத்தையும் காப்பாற்றுவதற்காக ஆமை சின்னத்துக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

ஆகவே சுமந்திரன் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஏற்ற நபர் அல்ல அவரை மக்கள் புறக்கணிக்க வேண்டும் இல்லாவிட்டால் தமிழ் மக்கள் இனமாகவும் மதமாகவும் அழிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் அதிகமாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சைவ சமயத்திற்கு முன்னுரிமை பெறுவதற்காகவே தேர்தலில் போட்டி என்கிற ஈழ சிவசேனை அமைப்பு




- நடராசா லோகதயாளன்

சைவ சமயத்திற்கு அரசியலமைப்பில் முன்னுரிமை கோரி சிவ சேனை தொண்டர்கள் சுயேட்சை குழுவாக களமிறங்கியுள்ளதாக ஈழ சிவசேனை தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் 17-11-2024 அன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், வரலாற்று தொன்மையான சைவ சமயத்திற்கு முன்னுரிமை அளிக்காமல் புத்த சமயத்திற்கு எவ்வாறு முன்னுரிமை அளிக்கலாம். மதமே இந்த நாட்டை கெடுக்கிறது. புத்த மதத்துக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்காமல் சைவ சமயத்துக்கும் முன்னுரிமை அளிக்கவேண்டும் - என்றார்.

மதமாற்ற தடைச் சட்டம், பசு வதைச் சட்டம் உள்ளிட்ட விடயங்களை அமுல்படுத்தவும் சிவசேனையால் வலியுறுத்தப்பட்டது.

ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ந. புகன்ஸ்ரீந்திரனை முதன்மை வேட்பாளராக கொண்டு ஆமைச் சின்னத்தில் சிவசேனை அமைப்பு சுயேட்சையாக போட்டியிடுகின்றது.

# ரெலோ கட்சியில் குழப்பம், செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராக போர்க்கொடி?

- நடராசா லோகதயாளன்

செல்வம் அடைக்கலநாதன் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும், சுரேன் குருசாமி போன்றவர்களுக்கு வாக்களித்தால் எங்கள் மண் விற்கப்பட்டு இனமானத்தை அடகு வைத்து விடுவார்கள் என ரெலோ கட்சியின் நிர்வாகச் செயலாளரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்னம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நவம்பர் 7ம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்: "கடந்த மாதம் 2ம் திகதி திருகோணமலையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைச் செயலகத்தில் கட்சியின் தலைமை குழு கூட்டம் நடைபெற்றது. கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்பாளர்கள், பிரதிநிதிகள் என 35 பேர் கலந்துகொண்டு பாராளுமன்ற தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன் போது கடந்த பாராளுமன்ற தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ரெலோ சார்பில் போட்டியிட்டு படுதோல்வியடைந்த குற்றப் பின்னணி கொண்ட ஒருவரை நியமிக்கவேண்டாம் என வலியுறுத்தியிருந்தேன்.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தலில் எனது பெயர் முன்மொழியப்பட்டது. இறுதியாக கட்சி சார்பில் எனது பெயர் நீக்கப்பட்டு இன்னொருவருடைய பெயர் புகுத்தப்பட்டது.

கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் குருசாமி சுரேந்திரனும் இணைந்து திட்டமிட்டு எனது பெயரை நீக்கியுள்ளனர். கடந்த மாகாண சபை தேர்தலில் எனக்கு வழங்க கட்சி தீர்மானித்து வேண்டிய அமைச்சுப் பதவியை வழங்காமல் தனது மைத்துனருக்கு வழங்கினார். அவர் மாகாண சபை காலத்தில் பல மோசடிகளில் ஈடுபட்டார்.

கட்சித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் சுரேன் குருசாமியும் கட்சிக்கு தெரியாமல் வன்னி மக்களுக்கு தெரியாமல் அந்த மண்ணில் 75,000 ஏக்கர் நிலப்பரப்பை அரசோடு இணைந்து கபளீகரம் செய்து நயினாமடு சீனித் தொழிற்சாலையை நிறுவுவதற்கும் சிங்கள குடியேற்றத்தை அமைக்கவும் திட்டமிட்டனர். இதனால் எமது கட்சியின் பெயர் தொடர்ந்து விமர்சனத்துக்குள்ளானது.

தமிழீழ விடுதலை இயக்கம் இன்று மூன்றாக பிரிந்துள்ளது. வன்னியில் உதயராசா தலைமையில் ஒரு அணியும் யாழ்ப்பாணத்தில் ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தலைமையில் மற்றொரு அணியும் பிரிந்துள்ளது. ஏனெனில் செல்வம் அடைக்கலநாதனின் தலைமையை அவர்கள் விரும்பவில்லை.

சிவாஜிலிங்கத்துக்கும் ஸ்ரீகாந்தாவுக்கும் உள்ள அர்ப்பணிப்பு, தியாகம் என்பன செல்வம் அடைக்கலநாதனுக்கு கால் தூசு அளவுக்கு கூட இல்லை.

அவர் மோசடி ஊழல் பேர் வழி. பின்கதவு டீலை ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்தார். வெளிநாட்டில் எமது கட்சிக்கு ஆறு கிளைகள் ஒற்றுமையாக பலமாக இருந்தது. அதனை சின்னாபின்னமாக்கி சிதறடித்தது செல்வம் அடைக்கலநாதனும் குருசாமி சுரேந்திரனுமே.




செல்வம் அடைக்கலநாதன் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன். குருசாமி சுரேந்திரன் மக்கள் மத்தியில் இருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும். இவர்கள் பற்றிய ஆவணங்களை வெளியிட நான் தயார். இது தொடர்பில் பொலிஸில் முறையிடுங்கள். சட்ட நடவடிக்கை எடுங்கள். கட்சியை கூட்டி ஒழுக்காற்று நடவடிக்கை எடுங்கள். நான் ஆவணத்தை பொதுவெளியில் கொண்டுவந்து உங்களை சந்திக்கத் தயார்.

நீங்கள் போராட்டத்தில் இணைந்த காலத்தில் இதுவரை இராணுவத்துக்கு எதிராக ஒரு தோட்டாவையேனும் சுட்டிருப்பீர்களா என செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்கிறேன். ஒரு பங்களிப்பு இல்லை. ஒரு அர்ப்பணிப்பு இல்லை. கட்சியின் தலைவராக சொகுசாக இருந்து கட்சியின் வளங்களை சுரண்டிக்கொண்டிருக்கிறீர்கள்.

அமைச்சு பதவி போல பாராளுமன்ற குழுக்களின் தலைவராக இருந்தீர்கள். 22 அலுவலரை உங்களுக்கு தந்தார்கள். போராளியின் குடும்பத்தைச் சேர்ந்த யாரையாவது அதற்கு நியமித்தீர்களா? போராளிகளின் குடும்பங்கள் பிச்சையெடுக்கிறது.

குருசாமி சுரேந்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றார். நான் சங்கு தான். நான் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தான். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரெலோ வன்னி மாவட்டங்களில் வேலை செய்யவில்லை. அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு திரைமறைவில் ஆதரவு கொடுத்தார்கள். தமிழ் தேசிய கட்சிகள், பொதுக் கட்டமைப்பு, ஊடகங்களுக்கு இது தெரியும். இங்கு சங்குக்கு வேலை செய்தது நான் மட்டும் தான்.

இதற்கு பிரதியுபகாரமாக ரணிலிடம் இருந்து பெருந்தொகையான பணத்தை பெற்று குருசாமி சுரேந்திரன் ஊடாக மட்டும் எட்டுக் கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்.

இதன்மூலம் மீன்பிடி உபகரணங்களும் சமூக சேவைகளும் வழங்கப்படுகிறது. வாங்கிய பணத்தை கட்சியின் ஏனைய மாவட்ட பிரதிநிதிகளுக்கு வழங்கியிருக்கலாமே. தனியாக அவருக்கு மட்டும் வழங்க வேண்டிய தேவை என்ன? அவசியம் என்ன? குருசாமி எங்கிருந்து வந்தார். என்ன பங்களிப்பு செய்தார். இந்த பதிலுக்கு குருசாமி இங்கு வரவேண்டும். அடுத்த பத்திரிகையாளர் மாநாட்டில் முழு ஆவணங்களுடன் வருவேன்.

அந்த வகையில் குருசாமிக்கு ஒரு தமிழர் வாக்களிக்க கூடாது. சங்குக்கு வாக்களியுங்கள். சங்கில் நேர்மையான திறமையான பலர் இருக்கின்றார்கள். மாமனிதர் ரவிராஜின் மனைவி நல்ல ஒரு தெரிவு. குருசாமி போன்றவர்களுக்கு வாக்களித்தால் எங்கள் மண் விற்கப்படும். இனமானத்தை அடகு வைத்து விடுவார்கள்" என்றார்.

# இலங்கையில் தங்கத்தின் விலை வரலாறு காணாத உயர்வு

## மத்திய கிழக்கில் நிலவும் போர் நிலைமை காரணமாக உலகளவில் தங்கத்தின் விலை அதிகரித்து வருகின்றது

மத்திய கிழக்கில் நிலவும் போர் நிலைமை காரணமாக உலகளவில் தங்கத்தின் விலை அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில், இலங்கையிலும் தங்கத்தின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில், தங்கம் ஒரு அவுன்சின் விலையானது, 802,401.19 ரூபாயாக பதிவாகியுள்ளது.

மேலும், வரலாற்றில் முதல் தடவையாக 24 கரட் மற்றும் 22 கரட் தங்கத்தின் விலையானது கடந்த ஒரு சில நாட்களாக 200,000 ரூபாயை தாண்டியுள்ளது.

ஒக்டோபர் 31ஆம் திகதி வரை செட்டித்தெரு தங்க விலை நிலவரப்படி 24 கரட்டின் விலை 220,000 ரூபாயாக பதிவாகியுள்ளதுடன், 22 கரட் தங்கத்தின் விலையும் 200,000 ரூபாய்க்கு அதிகமாக பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், இன்றையதினம் 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலையானது, 226,900 ரூபாயாகவும், 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 208,050 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், 21 கரட் தங்கப் பவுணொன்றின் விலையானது 198,600 ரூபாயாகவும் பதிவாகியுள்ளதுடன், ஆபரணத் தங்கத்தின் விலையானது இந்த விலைகளில் இருந்து சற்று மாறுபடும் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள்
Canadian News

# Ontario's Premier was the Guest Speaker at Scarborough Event, hosted by Scarborough Agincourt's MPP Aris Babikian with the Supporters of the Progressive Party

## ஒன்றாரியோ மாகாண முதலவர் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட வைபவத்தை நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்த Scarborough Agincourt தொகுதியின் MPP Aris Babikian அவர்கள்



### மூன்று தமிழ்மொழி சார்ந்த ஊடக நிறுவனங்களுக்கு விசேட அழைப்பு

ஒன்றாரியோ மாகாண முதலவர் டக் போர்ட் அவர்கள் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட வைபவத்தை நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்த Scarborough Agincourt தொகுதியின் MPP Aris Babikian அவர்கள். மேற்படி முக்கிய வைபவத்திற்கு மூன்று தமிழ்மொழி சார்ந்த ஊடக நிறுவனங்களுக்கு விசேட அழைப்பை விடுத்திருந்தார். கனடா உதயன் பத்திரிகை நிறுவனம், யுகம் வானொலி ஊடகம் மற்றும் BEHIND ME MEDIA GROUP என்னும் ஐந்து மொழிகளின் தொலைக்காட்சி செய்திச் சேவையை நடத்திவரும் ஊடக நிறுவனம் ஆகியனவே மேற்படி தமிழ் மொழி சார்ந்த ஊடக நிறுவனங்கள் ஆகும்.

04-11-2024 அன்று திங்கட்கிழமை மாலை ஸ்காபுறோ ஆர்மேனியன் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் Scarborough Agincourt தொகுதியின் MPP Aris Babikian அவர்கள் வரவேற்புரையை நிகழ்த்தி தொடர்ந்து ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் தனது உரையில் ஒன்றாரியோ மாகாண அரசு தற்போது மாகாணத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கவும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தவும் கடுமையாக உழைத்து வருகின்றது என்றும் முக்கியமாக மக்களிற்கு சிறந்த மருத்துவ சேவையை வழங்குவதற்காக தன்னை அர்ப்பணித்து வருவதாகவும் தெரிவித்தார்.





அவர் தனது உரையில் மேலதிக வைத்தியசாலைகள் மற்றும் பல வருடங்களுக்குப் பின்னர் யோர்க் பல்கலைக் கழகம் மற்றும் ஸ்காபுறோ பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மருத்துவ கற்கை பீடங்களையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து அதற்கான கட்டடங்களை தற்போது நிறுவி வருகின்றது என்றும் தெரிவித்தார்.

இங்கே காணப்படும் படங்களில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், யுகம் வானொலி ஊடகத்தின் சார்பாக கணபதி ரவீந்திரன் மற்றும் ரூபி யோகதாசன் மற்றும் BEHIND ME MEDIA GROUP என்னும் ஐந்து மொழிகளின் தொலைக்காட்சி செய்திச் சேவையை நடத்திவரும் ஊடக நிறுவனத்தின் அதிபரும் வர்த்தகப் பிரமுகருமான கனேந்திரன் செல்வா ஆகியோர் ஒன்றாரியோ மாகாண முதலவர் மற்றும் Scarborough Agincourt தொகுதியின் MPP Aris Babikian ஆகியோரோடு காணப்படுகின்றனர்.



## கனடா – ஸ்காபுறோவில் அமைந்துள்ள விஜயா நகைமாளிகைக்கு வருகை தந்த நடிகையும் பாடகியுமான அன்றியாவிற்கு வரவேற்பளித்த நிறுவன உரிமையாளர் ரூபன் குடும்பத்தினர்

கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நடைபெற்ற மாபெரும் இசை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளவென வந்துள்ள நடிகையும் பாடகியுமான அன்றியா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள விஜயா நகைமாளிகைக்கு வருகை தந்தபொது அவருக்கு விசேட வரவேற்பளித்த நிறுவன உரிமையாளர் ரூபன் குடும்பத்தினர்.





பெறுமதி வாய்ந்த கணையாளி ஒன்றையும் பரிசாக வழங்கினர்.

மேற்படி இசைநிகழ்ச்சிக்கு முக்கிய அனுசரணை வழங்கிய விஜயா நகைமாளிகை உரிமையாளர் ரூபன் அவர்களுக்கு நன்றி தெரிவித்த நடிகையும் பாடகியுமான அன்றியா அங்கு சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.



ஸ்காபுறோ விஜயா நகைமாளிகையின் தொலைபேசி இலக்கம்: (437) 833-3197

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

## பனை அபிவிருத்தி சபையின் தலைவர் நியமனம் தொடர்பான ஜனாதிபதியின் செயற்பாடு தொழில் சார் மக்களை வேதானையடையச் செய்துள்ளது

### ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சிறிரங்கேஸ்வரன்!




யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக ஊழல் மோசடி நிறைந்த ஒருவரை நியமித்துள்ளமையானது ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின் ஊழலற்ற தேசம் என்ற நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது என ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் 5ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று (05.11.2024) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க ஊழலை ஒழிப்போம் ஊழல் வாதிகளுக்கு தமது அரசில் எந்தவொரு இடத்திலும் பதவி நிலை வழங்கப்படாது என கருத்தை முன்வைத்தே ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் தனியார் நிறுவனங்களில் பதவிநிலை வகித்து பல்வேறு வகைகளில் பல கோடிகளை ஊழல் மோசடிகளை செய்தவர் என கூறப்படுகின்றது. இவை கடந்தகாலங்களில் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

அந்தவகையில் இவ்வாறான ஒரு மோசடி மிக்க நபரை பனை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமித்தமையானது ஜனாதிபதி அனுரவின் கருத்தை அல்லது அவரது நிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் அவருக்கு வாக்களித்த மக்களையும் விசனமடைய செய்துள்ளது. குறிப்பாக பனைசார் உற்பத்தி தொழிலை முன்னெடுக்கும் மக்களை பெரும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

அத்துடன் அத்துறை சார்ந்தவர்களின் உழைப்பும் முதலீடுகளும் கேள்விக்குறியாக இருந்துவரும் நிலையில் இந்த நியமனத்தால் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளது.

அத்துடன் இவ்வாறான நியமனம் அந்த மக்களை மேலும் மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கு வகையில் அமையும் என சுட்டிக்காட்டிய அவர் இது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



# Thanujan Devadas' Miruthanga Arangetram: A Memorable Musical Milestone



On Saturday, October 26, 2024, the Chinese Cultural Centre in Scarborough was transformed into a vibrant celebration of Tamil culture, setting the stage for Thanujan Devadas' highly anticipated miruthanga arangetram. With meticulously crafted decorations that evoked the warmth and authenticity of a traditional Tamil Cultural Centre, the atmosphere was electric, drawing a crowd of 600 + attendees eager to witness this special occasion.

Thanujan, a Grade 9 Student at Upper Canada College, a dedicated disciple of Shri Vasuthevan Rajalingam, who has mentored over 100 successful students to perform arangetrams, delivered a performance that was nothing short of exceptional. His mastery of the miruthangam, especially considering it was his stage debut, left the audience in awe. The precision, passion, and skill with which he played were remarkable, showcasing the depth of his training under such a respected guru. It was hard to believe this was Thanujan's first public performance, as he played with the poise and confidence of a seasoned artist.









The performance was further elevated by the talented musical ensemble that supported Thanujan, with the rhythm section providing a dynamic foundation. Renowned Indian Playback singer Sathyapragash's soulful vocals brought an added layer of emotion to the performance, taking the show to new heights and keeping the audience mesmerized throughout.

The full house was thoroughly immersed in the evening's performance, staying engaged and enthusiastic from start to finish. The night concluded with a sumptuous buffet dinner, where guests shared in the joy of the occasion and celebrated Thanujan's accomplishments.

Thanujan's parents, Vina and Vasuki Devadas, both practicing lawyers in Scarborough, were visibly proud and delighted by the evening's success. Their gratitude was evident as they thanked everyone who contributed to making this event possible, from the musicians to the attendees. They were particularly moved by the overwhelming turnout and the outpouring of support, making this arangetram a truly memorable and meaningful celebration for their family and the Tamil community.

In a bid to encourage other like minded community members to follow suit, Devadas family donated $25,000 at the event to the upcoming Tamil Community Centre, a long felt need by the Tamil Community.

It was a night to remember, filled with music, joy, and cultural pride, marking the beginning of a bright musical journey for Thanujan.

# ஸ்காபுறோவில் இடம்பெற்ற செல்வன் தனுஜன் தேவதாஸின் மிருதங்க அரங்கேற்றம் அவரது இசைப்பயணத்தில் ஒரு மறக்கமுடியாத மைல்கல்லாக விளங்கும்

கடந்த அக்டோபர் 26, 2024 சனிக்கிழமையன்று, ஸ்கார்பாரோவில் உள்ள சீன கலாச்சார மண்டபத்தில் தமிழ் கலாச்சாரத்தின் துடிப்பான கொண்டாட்டமாக இது தனுஜன் தேவதாஸின் மிருதங்க அரங்கேற்றம் விளங்கியது. அமைத்தது. ஒரு பாரம்பரிய தமிழ் கலாச்சார மையத்தின் அரவணைப்பையும் நம்பகத்தன்மையையும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட அலங்காரங்களுடன், இந்த சிறப்பு சாட்சியாக 600ு பங்கேற்பாளர்கள் கூட்டத்தை ஈர்த்தது. இதற்கு முதற் காரணகர்த்தாவாக விளங்கியவர் தனுஜன் அவர்களது குரு ஸ்ரீ வாசுதேவன் இராஜலிங்கம் என்றால் அது மிகையாகாது.

இதுவரை 100 க்கும் மேற்பட்ட வெற்றிகரமான மிருதங்க அரங்கேற்றங்களை மேடைகளுக்கு கொண்டு வந்து தனது மாணவர்களுக்கு வழிகாட்டியாக தொடர்ந்தும் விளங்கிவருகின்ற ஸ்ரீ வாசுதேவன் இராஜாலிங்கத்தின் அர்ப்பணிப்புள்ள மாணவரான ரொறன்ரோவின் உயர் கல்லூரியாம் அப்பர் கனடா கல்லூரியின் தரம் 9 மாணவர் தானுஜன், விதிவிலக்கான மற்றும் அர்ப்பணிப்பான ஒரு செயல்திறனை வழங்கினார். மிருதங்க வாசிப்பில் அவரது தேர்ச்சி, குறிப்பாக இது அவரது மேடையில் பிரசன்னம் ஆகியன , பார்வையாளர்களை பிரமிக்கச் செய்தது. அவரது மிருதங்க வாசிப்பின் துல்லியம், ஆர்வம் மற்றும் திறமை ஆகியவை குறிப்பிடத்தக்கவை, இதுபோன்ற மரியாதைக்குரிய தனது குருவின் வழிகாட்டலில் பெற்ற அவரது பயிற்சியின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த அரங்கேற்றம் இளம் கலைஞர் தனுஜனின் முதலாவது பொது வாசிப்பு என்று நம்புவது கடினம், ஏனெனில் அவர் ஒரு அனுபவமுள்ள கலைஞரின் சமநிலையுடனும் நம்பிக்கையுடனும் தான் மிருதங்கத்தில் தான் கற்றவற்றை வாசித்து சபையோரை மகிழ்வித்தார்.

மேற்படி இளம் கலைஞரான தனுஜனை பக்க பலமாக விளங்கிய பக்கவாத்தியக் கலைஞர்களின் ஆற்றலும் அவர்களது திறமையான இசைப்பங்களிப்பால் அன்றைய அரங்கேற்றத்திதன் தரம் மேலும் உயர்த்தப்பட்டது, . புகழ்பெற்ற இந்திய பின்னணி பாடகர் சத்தியபிரகாீன் ஆத்மார்த்தமான குரல் வளம் அரங்கேற்றத்திற்கு கூடுதலான எழுச்சியைக் கொண்டு வந்தன, என்பது மிகையாகாது. கலைஞர்கள் குழுமத்தின் பங்களிப்பு அன்றைய அரங்கேற்ற நிகழ்ச்சியை உச்சத்திற்கு கொண்டு சென்று பார்வையாளர்களை முழுவதுதாக திருப்த்தியடையச் செய்தன.

அரங்கேற்றம் இடம்பெற்ற மண்டபம் அன்றைய மாலையின் அரங்கேற்றத்தில் முழுமையாக மூழ்கியது, ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை நிச்சயதார்த்தம் மற்றும் உற்சாகமாக இருந்தது. , அங்கு விருந்தினர்கள் உணவருந்தும் போது மகிழ்ச்சியில் தனுஜனின் திறமையின் மேன்மையை பகிர்ந்து கொண்டனர். அத்துடன் தனுஜனின் சாதனைகளை கொண்டாடி மகிழ்ந்தனர்.

தனுஜனின் பெற்றோர்களான வினா தேவதாஸ் மற்றும் வாசுகி தேவதாஸ்,





ஸ்கார்பாரோவில் வழக்கறிஞர்களாக பணியாற்றுகின்றவர்கள் அன்றைய மாலை தமது புதல்வரின் வெற்றியைக் கண்டு அவர்கள் பெருமிதம் அடைந்தனர். இசைக்கலைஞர்கள் முதல் பங்கேற்பாளர்கள் வரை இந்த நிகழ்வை சாத்தியமாக்குவதற்கு பங்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்த நன்றியுணர்வு தெளிவாகத் தெரிந்தது. இந்த அரங்கேற்றமானது, அவர்களின் குடும்பத்தினருக்கும் கனடிய தமிழ் சமூகத்திற்கும் உண்மையிலேயே மறக்கமுடியாத மற்றும் அர்த்தமுள்ள கொண்டாட்டமாக விளங்கியது என்று கூறினாலும் அது மிகையல்ல. மேலும்,தானுஜனுக்கான பிரகாசமான இசை பயணத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில், இசை, மகிழ்ச்சி மற்றும் கலாச்சாரத்தின் பெருமை ஆகியவற்றால் நிறைக்கப்பெற்ற ஒரு இரவாக அன்றைய அரங்கேற்றம் விளங்கியது என்றும் கூறலாம்.

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
**1119**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஆரையம்பதி ஸ்ரீ பரமநயினார் (ஐயனார்) கோயில், மட்டக்களப்பு

-------------

“ பூரணைக் கிறைவர போற்றி
புட்கலை கணவா போற்றி
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி
ஆரணச் சுருதி எல்லாம்
ஆடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி ”

அசுரர்கள் தேவர்களிடமிருந்து அமுதைப் பறித்து உண்ண முற்பட்டவேளை, தேவர்களின் வேண்டுகோளை ஏற்ற திருமால், மோகினி வடிவங்கொண்டு அசுரர்களை மயக்கி, அமுதத்தினைப் பெற்றுத் தேவர்களுக்கு வழங்கினார். மோகினி அவதாரங்கொண்ட திருமாலுக்கும், சிவனுக்கும் பிறந்த குழந்தைக்கு, தர்மசாஸ்தா எனப் பிரம்மன் பெயர் சூட்டினார். சபரிமலைக்கோவிலில் முன்பிருந்த ஸ்ரீ தர்மசாஸ்தா, பரசுராமர் பிரதிஷ்டை செய்த தர்மசாஸ்தா, மணிகண்டன், ஐயப்பன் அனைத்தும் ஹரிஹரசுதனின் அவதாரமாக விளங்குகின்றன.

இந்தியா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து கதிர்காம யாத்திரை செல்பவர்கள், மட்டக்களப்பிலுள்ள ஆரையம்பதி ஊடாகச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்துள்ளனர். ஏறக்குறைய 150 வருடங்களுக்கு முற்பட்ட காலப்பகுதியிலே, கதிர்காமம் செல்வதென்பது மிகவும் கடினமான விடயமாகக் காணப்பட்டுள்ளது. சீரற்ற பாதைகள், காட்டுவழியால் பிரயாணம், வனவிலங்குகளால் ஆபத்து, காட்டுப்பாதையால் செல்லும்போது அப்பகுதி அரசாங்க அதிபரின் அனுமதியைப் பெறவேண்டிய கட்டாயம், எனப் பலவற்றைத் தாண்டியே கதிர்காமத்தை அடைய வேண்டியிருந்தது.

இவ்வாறு செல்வோர் யாவரும் கதிர்காமத்தைச் சென்றடைவதில்லை. பலர் வழியிலுள்ள கிராமங்களிலே தங்கிப் பின்னர், அவற்றையே தமது சொந்த இடமாகக் கொள்வதும் உண்டு. கதிர்காமம் செல்லப் புறப்பட்டுச் சென்ற பலர் இவ்வாறு ஆரையம்பதியிலே தங்கி, அதனையே தமது ஊராகக் கருதி வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காம யாத்திரை புறப்பட்ட ஒருவரே, இவ்வாறு தங்கி, ஆரையம்பதியில் ஐயனார் வழிபாட்டை அறிமுகம் செய்தார் என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. பரமநயினார் என்னும் பெயருள்ள ஐயனார் கோயில்கள் காலப்போக்கில் செங்கலடி, தாழங்குடா என்னும் ஊர்களிலும் உருவாக்கப்பட்டன.

ஐயனார் வழிபாடு ஈழத்திலே அருகியே காணப்படுகின்றது. ஆயினும் சப்த தீவுகளுள் ஒன்றாகிய அனலைதீவிலே, மிகப்பெரிய தேரைக் கொண்ட ஐயனார் கோவில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் ஐயனார் வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகவும் காணப்படுகின்றது. ஈழத்திலே ஐயனாரை வழிபட்ட மக்கள், புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஐயனாரின் அவதாரமான ஐயப்பன் வழிபாட்டைத் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதன் பிரதிபலிப்பாக ஒவ்வொரு ஆண்டும் ஐயப்பபக்தர்கள் சபரிமலை சென்று தமது வேண்டுதலை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆரையம்பதியிலே அமைக்கப்பெற்ற ஐயனார் கோயில், பறங்கியர் காலத்தில் மறைந்துவிட்டது. பின்னர் பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே குறிப்பிட்ட இடத்தில், ஐயனார்வழிபாடு மீண்டும் ஆரம்பமாகியது. இக்காலப்பகுதியில் பந்தலொன்றினை அமைத்து, ஆண்டுதோறும் வழிபாடு நிகழ்த்தி வந்துள்ளார்கள். பின்னர் 1930 ஆம் ஆண்டளவில் ஆலயமொன்றினைக் கல்லினால் மடாலயமாகக் கட்டி வழிபாடு செய்து வந்துள்ளனர். இம்மடாலயம் இரு மண்டபங்களைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. இம் மண்டபங்களில் ஒன்று கருவறையாகப் பயன்படுத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட பீடமொன்றில் சூலம் அமைந்திருந்தது. நாள்தோறும் பிற்பகலில் ஊரவர் பரமநயினாருக்கு அவல், கடலை, ரொட்டி முதலியவற்றைப் படைத்து வழிபடுவது வழக்கமாகும். வெள்ளிக்கிழமைகளில் மட்டும் வழிபாடுகளும், பஜனைகளும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

1955 ஆம் ஆண்டு மடாலயமாக இருந்த பரமநயினார் ஆலயம் இடிக்கப்பட்டு, நித்திய, நைமித்திய கருமங்கள் செய்யத்தக்க முறையில், மக்கள் கொடுத்த நிதியின் உதவியுடன் ஆலயமொன்று அமைக்கப்பட்டது. கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தம்ப மண்டபம் ஆகிய அம்சங்களைக் கொண்டதாகப் பரமநயினார் கோயில் கட்டி முடிக்கப்பட்டது. 20 அடி உயரம் கொண்டதாகக் கர்ப்பக்கிருகம் அமைக்கப்பட்டது. இது சதுர வடிவில் ஒற்றைத் தளமாக அமைந்த, சிறிய விமானத்தைக் கொண்டுள்ளது. அதன் கிழக்குப் புறத்திலே வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானும், தெற்கிலே யோக தட்சிணாமூர்த்தியின் வடிவமும், அமைந்துள்ளன. மேற்கிலே கருடாரூட மூர்த்தியான மகாவிஷ்ணுவும், வடக்கிலே சிவபெருமானும், விநாயகரும் எழுந்தருளியள்ளனர். நாகதம்பிரான், வைரவர், சண்டேசுவரர், நவக்கிரகங்கள் ஆகிய பரிவார தேவர்களுக்கும், இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விநாயகர், வள்ளி தெய்வயானை சமேதரரான சுப்ரமணியர், சந்திரசேகரர், கண்ணகி ஆகியோரின் பஞ்சலோகத்தினாலான எழுந்தருளி விக்கிரகங்களும் இவ்வாலயத்திலே காணப்படுகின்றன.

கர்ப்பக்கிரகத்திலே அமைந்துள்ள பரமநயினாரின் வடிவம், ஆசனநிலையில் இடக்காலை உட்புறமாக மடித்து, வலக்காலைத் தொங்கவிட்ட கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு கரம் வரதஹஸ்தமாகவும், மறுகரம் செண்டினைத் தாங்கிய நிலையிலும் அமைந்துள்ளது. பரமநயினாரின் வலப்பக்கத்திலே பூரணையும், இடப்பக்கத்திலே புட்கலையும் குவளை மலர் ஏந்திய நிலையில் அமைந்துள்ளனர். பரமநயினாரின் எழுந்தருளி வடிவத்திலே, அவர் ஆசன நிலையிலும், தேவியர் ஸ்தானகநிலையிலும், இருப்பதைக் காணலாம். சுந்திர சேகரர், விநாயகர், முருகன் ஆகியோரின் எழுந்தருளி வடிவங்கள் ஸ்தானக நிலையிலே உள்ளன. 1982 ஆம் வருடம் சிவலிங்கம், மற்றும் உமாதேவியாரின் திருவுருவங்கள் முறையே மகாமண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. பரமநயினார், பூரணை, புட்கலை, உமாதேவியார் ஆகியோரின் பஞ்சலோக விக்கிரகங்களும் இக்காலப்பகுதியிலே உருவாக்கப்பட்டுள்ளன.

**வளரும்...**

*(20 பக்கம் தொடர்ச்சி)*

---

## *சுமந்திரனின் “அமைச்சர்” கனவு பலிக்குமா அல்லனது பகல் கனவாகுமா?*

**கே. பாலா**

*எனினும் தனது முயற்சியை சற்றும் கைவிடாத விக்கிரமாதித்தனைப் போல் பாராளுமன்றத்தேர்தலில் அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 113 ஆசனங்களைப் பெற எதிர்கொள்ளப் போகும் சவாலை பயன்படுத்தி அநுரகுமார அரசுக்கு கட்சி ரீதியாக ஆதரவளித்து அமைச்சுப்பதவியை பெறும் தனது அடுத்த நகர்வை சுமந்திரன் ஆரம்பித்துள்ளார். எனினும் இலங்கைத் தமிழரசு கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும், இதன்படி புதிய அரசாங்கத்தில் சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் வெளியான செய்திகளை தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க மறுத்துள்ளார்.*

*வடக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக தேசிய மக்கள் சக்தி எந்த கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை என்று ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் மறுத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாங்கள் அவர்களுடன் பேசவில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமிழரசுக்கட்சியின் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதாகவே கூறினர். அவர்கள் இப்போது தேர்தலில் போட்டியிடுவதால் யாருக்கு ஆதரவு என்று தெரியாது. இந்த நேரத்தில் அவர்களுடன் எந்த பேச்சுவார்த்தைக்கும் எங்களுக்கு தேவை கிடையாது. இதன்படி அவர்களுடன் எந்தத் தொடர்பும் கிடையாது. அரசாங்கத்தை அமைப்பதற்காக வேறு கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை இருக்காது என்று நினைக்கின்றோம். இம்முறை தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்களை பெற்றுக்கொள்வோம். இதனால் பாராளுமன்றத்தில் எவரின் உதவியையும் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.*

*இதேபோன்றே தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் 25 அமைச்சர்கள் பதவியை வகிப்பார்கள். அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் எம்.பி.க்களாகவே இருப்பார்கள். இதைவிட வேறு எவரையும் எமது கட்சியில் இணைத்துக் கொள்ளவோ அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கோ நாம் தயாரில்லை என பிரதமர் ஹரிணி அமர சூரியவும் கிளிநொச்சியில் வைத்து அறிவித்து விட்டார்.*

*ஆனால் பாராளுமன்றத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அறுதிபெரும்பான்மையான 113 ஆசனங்களை பெறாது விட்டால் ஏனைய கட்சிகளின் ஆதரவை கோரவேண்டி ஏற்படும். சிங்கள, முஸ்லிம் கட்சிகளின் ஆதரவை தேசிய மக்கள் சக்தி கோரும் நிலைப்பாட்டில் இல்லாததால் தமிழ் கட்சிகள் அரசுக்கு ஆதரவளிக்கும் வாய்ப்பிருந்தாலும் தமிழரசுக்கட்சியின் ஆதரவைப்பெற்று சிங்கள மக்களின் எதிர்ப்புக்களை சம்பாதிக்க தேசிய மக்கள் சக்தி விரும்பாது என்பதனால் சுமந்திரனின் அமைச்சுக் கனவு, கனவாகவே இருப்பதற்கே அதிக வாய்ப்புள்ளது.*

*அதனால்தான் சுமந்திரன் “அநுர தலைமையிலான புதிய அரசில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வந்தால் அதனைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் எனக் கூறினேனே தவிர அமைச்சுப் பதவியை பெற வேண்டுமென ஒருபோதும் கூறவில்லை. ஊடகங்கள் விளக்கமின்றி எழுதுகின்றன அல்லது வேண்டுமென்றே அப்படி எழுதுகின்றன” என பல்டி அடித்துள்ளார்.*

## நீ வருவாயென

---

*என்னுயிரே! என்னுயிரே!*
*எங்கே நீ சென்றுவிட்டாய்*
*சென்ற இடம் தெரிந்திருந்தால்*
*தேடியே வந்திருப்பேன்*
*பிரிவு என்றால் பெரும் துன்பமென்று*
*உன்னை இழந்ததும் தெரிந்துகொண்டேன்*
*இன்று இதயத்துள் உன் நினைவு வந்து*
*கண்ணீர் சொரிந்து நின்றேன்*
*உன் வாய்மொழியும் என் தாய்மொழியும்*
*இன்று எனக்கில்லையடி*
*உருவமில்லாத ஒன்று வந்து*
*என் தொண்டையை அடைக்குதடி*
*காத்திருந்தேன் எதிர்பார்த்திருந்தேன்*
*கணங்கள் யுகமானதடி*
*போகும் கண்களெலாம் எனைப் பார்ப்பதுபோல்*
*ஒரு பிரமை தோன்றுதடி*
*இது காதலா? இல்லை ஊடலா?*
*சொல்லடி உண்மையெது?*
*நான் வாழ்வதும் விடமுண்டு வீழ்வதும்*
*உன் வருகையில் உள்ளதடி*
*அஞ்சுகமே உனைக் கண்டுவிட்டால்*
*அரவணைத்தே வரவேற்பேன்*
*ஒரு குழந்தையைப் போல் உனைக் கட்டியணைத்து*
*உன் கூந்தலில் வகிடெடுப்பேன்*
*தாரகையே உனை வரவேற்க*
*வாசலில் காத்திருப்பேன்*
*காரிகையே என்தேவையை உன் காதுக்குள் ஓதிவைப்பேன்*
*ஒரு களங்கமிலாக் கவிதையைப் போலுனை*
*காப்பாற்றி வைத்திருப்பேன்.*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
*(416) 844-7453*

# இவ்வார ராசிபலன்

**08-11-2024 வெள்ளி தொடக்கம் 14-11-2024 வியாழன் வரையும்**


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாயப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றவரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். இரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோ'ம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும், கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர்ப் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப்பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும்.

***(தொடர்ச்சி 30 பக்கம்)***

# மாவீரர்களுக்கான வீரவணக்கம்

## திருக்குறளில் மாவீரன்! அதிகாரம் 78: குறள் 780

### படைச்செருக்கு அல்லது படைவீரன் பெருமிதம் "புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து"

இக் குறளுக்கான விளக்கத்தைக் கூறுவதற்கு முன் வாசகர்களை அல்லது மாவீரர் எழுச்சி நாளில் ஒன்று கூடுவோரை ஒரு போர்க்களம் நோக்கி அழைக்கிறேன் உண்மையில் இக்குறளுக்கான விளக்கத்தை மாவீரர்களுக்கு அஞ்சலி செய்து புனைந்துள்ளேன். களத்தில் போராடி விழுப்புண் தாங்கிய எனது மாவீரனுக்கு "ஆதன்" என்பது பெயராகும். கீழடி அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த பானையொன்றில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பொறிக்கப்பட்ட நாமம் இது. நமது புலம் பெயர் தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பதிய மகனுக்குச் சூட்டி மகிழக்கூடிய அழகிய பெயராகும்.

சரி வாருங்கள். அதன் களமாடும் போர்க்களம் நோக்கிச் செல்வோம். போர்க்களம் புகுமுன் தனது காதல் மனையாளிடம் சென்று "கண்ணே" கேட்டாயா முர-சொலியை.. எனது திணவெடுத்த தோள்கள் புடைக்கின்றன. வாளுக்கும், வேலுக்கும் வேலை வந்து விட்டதடி! எதிரிகளைப் பந்தாடி விட்டு விரைவில் வீடு திரும்புவேன். வேல் விழியாளே! வீரத்திலகமிடு! படை முழக்கம் கேளாய். தடையின்றி விடை கொடு! என்றான்.

விழுப்புண்படாத நாட்களெல்லாம் வீணான நாட்கள்.

விழிப்பண்பாடும் வடிவழகி! முத்து நகை சிந்துகின்ற இதழ் குவித்து முத்த தழை பொழிந்து வெற்றியோடு திரும்பிடுக அத்தான் என்றாள்.

□வேல் தருவாய்! விடை தருவாய்! இடையில்லாப் பேரழகே என மடைதிறந்த காதல் மொழி பகர்ந்து மறவன் அவன் நடக்கலுற்றான். மாவீரர் அணிவகுப்பு நோக்கி. போர்க்களத்திலே ஆதன் அவன் எதிரிகளைப்பந்தாடி எக்காளமிட்டு நகை செய்தான். செங்குருதி சகதியிலே இருதரப்பு வீரர்களும் இறுதி யாத்திரைக்குச் சித்தமானார்கள். இறுதி வெற்றி பகைவருக்கென்றோர் சேதி சொல்லி தூது வந்தான் ஒரு வீரர்1 களத்தினிலே நம் காலை சுழல்காற்றாய். சூறாவளியாய் சுழன்று, சுழன்று வாள் வீசினான். தனியொருவன், தலைவ-னவன் கண்ணெதிரே பகைப்படையின் பலமழித்தான்.

தோல்விப் புகைப் படலம் போக்கி நின்றான். வெற்றிக்கு வித்திட்டான். அய்யகோ! மறைந்து வந்த எதிரியின் அம்புக்குப் பலியானான். வெற்றிகண்ட படைத்தலைவன் "தம்பி" என்பான். ஆதன் அவன் சாய்ந்து விட்ட காட்சி தனைக்கண்டு: கலங்கி நின்றான். வழித்திரையில் நீர் கோர்த்து விம்மினான், விசும்பினான் தலைவன் "தம்பி" யைப்பார்த்து ஆதன் சொன்னான்.

தலைவா! என் சாவு கண்டு கண்ணீர் விடுவது வீரனுக்கு எவ்வளவு பெருமையாகவிருக்கின்றது . சாவு என்றும் வரும். அது சமரிலே வருமென்றால் சரித்திரம் அன்றோ1

தலைவன் "தம்பிக்கு" கண்ணீர் வரவழைத்த அந்த வீரச்சாவு என்றென்றும் பாராட்டுக்குரியது. இதுவே வள்ளுவர் கூறிய புகழாரம்1

"பரந்தார்கள் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து"

அதாவது நாட்டைக் காக்கும் அரசனுக்கு அழுது கண்ணீர் விடும்படி ஒரு வீரனுடைய உயிர்விடப்பெற்றால் அப்படிப்பட்ட மரணம் கெஞ்சிக் கேட்டாயினும் அடையத்தக்கது! இதுவே மரியாதைக்குரிய வணக்கத்துக்குரிய மாவீரர் மறைவு!

----வீணைமைந்தன்------


## IMPORTANT MESSAGE FOR ALL SRI LANKAN PENSIONERS

The Annual General Meeting of the Ontario Sri Lankan Pensioners Association will be held on November 9, 2024 from 9.30 am to 2pm at Council Chambers, Scarborough Civic Centre, 150 Borough Drive, Scarborough ON M1P 4N7.

1) The Meeting will be held at the Council Chambers of the Scarborough Civic Centre at 9.30 am
2) The Consul General of Sri Lanka in Toronto will be the Chief Guest at this Function
3) All Sri Lankan Pensioners whether members or non-members are invited
4) Methods of Withdrawal of Funds from Canada from the Pensions Account will be discussed
5) Refreshments will be served
6) Please inform your friends, contacts and other Sri Lankan Pensioners
7) No individual Invitations will be sent

**Contacts:**

| Name: | Mobile: | Email: |
|---|---|---|
| Mr. Maya Kandiah | (416) 895-8111 | mayakandiah@yahoo.ca |
| Mr. Sundar Rajalingam | (416) 454-6360 | sundar114@gmail.com |
| Mr. N. Sathananthan | (416) 908-1156 | satha41@gmail.com |
| Mr. P. Kaneshalingam | (437) 778-1904 | kanesh1946@gmail.com |



# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E




**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுய பலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z




**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த விஷயம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

# தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளில் அரசிடமிருந்து பெற்ற மருத்துவ செலவினங்கள் எவ்வளவு தெரியுமா?

- நடராசா லோகதயாளன்






மக்களை நாடாளுமன்றத்தில் பிரதிநித்துவப்படும் உறுப்பினர்களின் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே, அவர்களால் மக்கள் பணிகளை நாடாளுமன்ற அவைக்கு உள்ளேயும் வெளியேயும் சிறப்பாக முன்னெடுக்க முடியும். ஆனால் இலங்கை நாடாளுமன்றத்தில் குறைந்தது 11 தமிழ் உறுப்பினர்கள் லட்சக்கணக்கான ரூபாவை அரசிடமிருந்து மருத்துவ செலவினமாகப் பெற்றுள்ளனர் என்ற அதிர்ச்சிகரமாக தகவல் இப்போது வெளியாகியுள்ளது.


அரசிடமிருந்து இந்த செலவினத்தை கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு பல தமிழ் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெற்றுள்ளனர். இவர்களின் மூன்று உறுப்பினர்கள் மிகபெருந்தொகையான நிதியினை பெற்றுள்ளதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020 முதல் 2024 வரையான நாடாளுமன்ற ஆட்சி காலத்தில் (அதாவது கடந்த நாடாளுமன்றம் கலைக்கப்படும் அதன் ஆயுட்காலத்தில்) மருத்துவச் செலவினத்தில் உச்சபட்ச தொகையினை இலங்கை தமிழரசுக் கட்சியிலிருந்த சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜெனா) ஆகியோர் பெற்றுள்ளனர்.

2020 முதல் 2024 வரையான நாடாளுமன்ற காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்களின்கான மருத்துவக் காப்புறுதி மூலம் எவ்வளவு மருத்துவச் செலவினத்தைப் பெற்றுள்ளனர் என்பதை கோரி, 15 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரம் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டது.

இவ்வாறு விண்ணப்பிக்கப்பட்ட 15 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இராசமாணிக்கம் சாணக்கியன், சிவஞானம் சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கு.திலீபன் ஆகியோர் 5 வருட காலத்திலும் எந்தவொரு பணத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகூடிய தொகையான 9 லட்சத்து 93 ஆயிரத்து 610 ரூபாவினை சாள்ஸ் நிர்மலநாதன் பெற்றிருக்கும் அதே நேரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இரண்டாவது இடத்தில் 8 லட்சம் ரூபாவினையும் கோவிந்தன் கருணாகரன் 5 லட்சத்து 91 ஆயிரத்து 275 ரூபாவினையும் பெற்றுள்ளார்.



Annexure 01

| No | Hon. Former MP name | Insurance Year | Amount Claimed (Rs.) | Total Claims Paid (Rs.) |
|---|---|---|---|---|
| 1 | Hon. G. Ponnambalam | 2024/2025 | 917,124.00 | 800,000.00 |
| 2 | Hon. S. Kajendran | 2021/2022 | 201,675.63 | 200,000.00 |
| | | 2023/2024 | 76,500.00 | 76,500.00 |
| 3 | Hon. S.A. Adaikalanathan | 2020/2021 | 208,825.12 | 200,000.00 |
| | | 2021/2022 | 41,397.87 | 45,397.00 |
| 4 | Hon. Charles Nirmalanathan | 2019/2020 | 196,692.00 | 196,692.00 |
| | | 2020/2021 | 311,790.57 | 200,000.00 |
| | | 2021/2022 | 112,711.00 | 200,000.00 |
| | | 2022/2023 | 178,575.21 | 174,972.00 |
| | | 2023/2024 | 227,316.05 | 221,946.00 |
| 5 | Hon. D. Sidharthan | 2022/2023 | 279,100.00 | 200,000.00 |
| 6 | Hon. C.V. Wigneswaran | 2024/2025 | 232,534.88 | 232,534.88 |
| 7 | Hon. K. Thileepan | No Claim | | |
| 8 | Hon. Douglas Devananda | 2019/2020 | 201,960.00 | 200,000.00 |
| | | 2022/2023 | 1,461,467.18 | 200,000.00 |
| 9 | Hon. S. Sritharan | No Claim | | |
| 10 | Hon. Angajan Ramanathan | No Claim | | |
| 11 | Hon. M.A. Sumanthiran | 2022/2023 | 224,965.00 | 200,000.00 |
| | | 2023/2024 | 217,879.52 | 186,041.00 |
| 12 | Hon. G. Karunakaran | 2020/2021 | 156,188.00 | 156,188.00 |
| | | 2020/2021 | 56,407.00 | 56,407.00 |
| | | 2021/2022 | 303,625.00 | 200,000.00 |
| | | 2022/2023 | 178,680.94 | 178,680.94 |
| 13 | Hon. Rasamanickam Chanakiyan | No Claim | | |
| 14 | Hon. S. Chandrakanthan | 2020/2021 | 429,960.00 | 200,000.00 |
| | | 2022/2023 | 165,655.00 | 162,355.00 |
| 15 | Hon. S. Viyalendiran | 2019/2020 | 130,555.62 | 130,555.00 |
| | | 2021/2022 | 212,947.00 | 200,000.00 |

அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா 4 லட்சம் ரூபாவும், எம்.ஏ.சுமந்திரன் 3 லட்சத்து 86 ஆயிரத்து 41 ரூபா, சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) 3 லட்சத்து 62 ஆயிரத்து 355 ரூபா, எஸ்.வியாழேந்திரன் 3 லட்சத்து 30 ஆயிரத்து 555 ரூபாவும், செல்வராஜா கஜேந்திரன் 2 லட்சத்து 76 ஆயிரத்து 500 ரூபாவும் பெற்றுள்ளனர்.

செல்வம் அடைக்கலநாதன் 2 லட்சத்து 45 ஆயிரத்து 397 ரூபாவும், சி.வி.விக்னேஸ்வரன் 2 லட்சத்து 32 ஆயிரத்து 534 ரூபாவும், த.சித்தார்தன் 2 லட்சம் ரூபாவினையும் பெற்றுள்ளனர்.

இந்தளவிற்கு உடல்நலக் குறைபாடு அல்லது சுகயீனம் காரணமாக அரசிடமிருந்து மருத்துவ உதவியை பெற்றுள்ளவர்கள் எந்தளவிற்கு ஆரோக்கியத்துடன் இருந்து மக்கள் நல பணியை முன்னெடுக்க முடியும் என்று பொதுமக்கள் வினவுகின்றனர்.


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
RESIDENTIAL
COMMERCIAL
INDUSTRIAL
CONSTRUCTION
VACANT LAND
Providing the best future for your best living Without risks
Our Service
MORTGAGE
RESIDENTIAL- COMMERCIAL
• Purchase
- Builder Purchase
- MLS Purchase
- Private Purchase
• Refinance
• Renewal
• Equity line of Credit
Contact Us Today
NESAN
Subramaniam
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330
Scotiabank
TD Canada Trust
NATIONAL BANK
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
Manulife
Desjardins
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

உதயம் 1492 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 8, 2024

# நாளை சனிக்கிழமையன்று 9ம் திகதி மொன்றியாலில் கவிஞர் ஆரணியின் "நினைவிடைத் தோய்தல்" கவிதைத் தொகுதியின் அறிமுகவிழா

மொன்றியால்-கோன்வால்- ஒட்டாவா மற்றும் ரொறன்ரோ ஆகிய நகரங்களிலிருந்து கலை இலக்கிய மற்றும் வர்த்தகத்துறை நண்பர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தந்துள்ள கவிஞர் ஆரணி அவர்கள் முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு அறிவித்தலில் உள்ள இலக்கங்களையும் மற்றும் 416 732 1608 என்னும் இலக்கத்தையும் அழைக்கலாம்.




# ஸ்காபுறோவில் விஜயா நகைமாளிகைக்கு வருகை தந்த நடிகையும் பாடகியுமான அன்றியாவிற்கு வரவேற்பளித்த நிறுவன உரிமையாளர் ரூபன் குடும்பத்தினர்





கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நடைபெற்ற மாபெரும் இசைநிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளவென வந்துள்ள நடிகையும் பாடகியுமான அன்றியா கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள விஜயா நகைமாளிகைக்கு வருகை தந்தபொது அவருக்கு விசேட வரவேற்பளித்த நிறுவன உரிமையாளர் ரூபன் குடும்பத்தினர் பெறுமதி வாய்ந்த கணையாளி ஒன்றையும் பரிசாக வழங்கினர். மேற்படி இசைநிகழ்ச்சிக்கு முக்கிய அனுசரணை வழங்கிய விஜயா நகைமாளிகை உரிமையாளர் ரூபன் அவர்களுக்கு நன்றி தெரிவித்த நடிகையும் பாடகியுமான அன்றியா அங்கு சமூகமளித்திருந்த ஊடகவியலாளர்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார. ஸ்காபுறோ விஜயா நகைமாளிகையின் தொலைபேசி இலக்கம்:- 437-833-3197

# ஸ்காபுறோவில் இடம்பெற்ற செல்வன் தனுஜன் தேவதாஸின் மிருதங்க அரங்கேற்றம் அவரது இசைப்பயணத்தில் ஒரு மறக்கமுடியாத மைல்கல்லாக விளங்கும்

கடந்த அக்டோபர் 26, 2024 சனிக்கிழமையன்று, ஸ்கார்பாரோவில் உள்ள சீன கலாச்சார மண்டபத்தில் தமிழ் கலாச்சாரத்தின் துடிப்பான கொண்டாட்டமாக இது தனுஜன் தேவதாஸின் மிருதங்க அரங்கேற்றம் விளங்கியது. அமைத்தது. ஒரு பாரம்பரிய தமிழ் கலாச்சார மையத்தின் அரவணைப்பையும் நம்பகத்தன்மையையும் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட அலங்காரங்களுடன், இந்த சிறப்பு சாட்சியாக 600 + பங்கேற்பாளர்கள் கூட்டத்தை ஈர்த்தது. இதற்கு முதற் காரணகர்த்தாவாக விளங்கியவர் தனுஜன் அவர்களது குரு ஸ்ரீ வாசுதேவன் இராஜலிங்கம் என்றால் அது மிகையாகாது. (தொடர்ச்சி 26ம் பக்கம்)



# தமிழர்களின் வாக்குகளுக்கு சுமந்திரன் தகுதியானவரா?

## பொ. சிந்துயன், இறுதியாண்டு சட்டத்துறை மாணவர் இங்கிலாந்து

இலங்கையில் மற்றுமொரு நாடாளுமன்ற தேர்தல். ஆனால் ஈழத் தமிழர்களைப் பொருத்தமட்டில் ஏமாற்றம், நிராசை, காட்டிக்கொடுப்பு போன்ற பல அம்சங்களுடன் மேலுமொரு வாக்கெடுப்பு. எந்த நாடாளுமன்ற தேர்தலின் மூலமும் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்காது என்பதும், சிங்கள தேசத்திடமிருந்து நியாத்தை எதிர்ப்பார்க்க முடியாது என்பதும் உண்மை.



எனினும், ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை தமிழர்கள் இழக்கவில்லை அல்லது இழக்க விரும்பவில்லை. ஈழத்திலும் சரி, புலம் பெயர்ந்த தேசங்களிலும் சரி, தமிழர்கள் தமது ஜனநாயக கடமைகளை மதித்து நடப்பவர்களாகவே பார்க்கப்படுகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கான நீதி ஓரளவேனும் கிடைக்க வேண்டுமென்றால், ஜனநாயக பாதையை தவிர்க்க இயலாது என்பது யதார்த்தம். எனவே நம்பிக்கையற்ற நம்பிக்கை என்ற அடிப்படையில் தான், ஈழத்தமிழர்கள், போர் மௌனிக்கப்பட்ட பிறகு தேர்தலில் வாக்களித்து வந்துள்ளனர்.

தந்தை செல்வா, அமிர்தலிங்கம், பின்னர் சம்பந்தர் ஆகியோரின் தலைமைகளில் தேர்தல்களை சந்தித்தாலும் இறுதியில் கிடைத்தது என்னவோ பூஜ்ஜியமே.

ஆனால், இப்போது நடைபெறவுள்ள தேர்தல் முன்னைய தேர்தல்களைவிட சற்று வித்தியாசமானதாகவே தோன்றுகிறது. மூத்த அரசியல் தலவர்கள் யாரும் களத்தில் இல்லை. சம்பந்தர் காலமாகிவிட்டார், அடுத்த இடத்திலிருக்கும் மாவை சேனாதிராசா தேர்தல் அரசியலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)



# மாவீரர்களுக்கான வீரவணக்கம்

## திருக்குறளில் மாவீரன்! அதிகாரம் 78: குறள் 780

### படைச்செருக்கு அல்லது படைவீரன் பெருமிதம் "புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து"

இக் குறளுக்கான விளக்கத்தைக் கூறுவதற்கு முன் வாசகர்களை அல்லது மாவீரர் எழுச்சி நாளில் ஒன்று கூடுவோரை ஒரு போர்க்களம் நோக்கி அழைக்கிறேன்.

உண்மையில் இக்குறளுக்கான விளக்கத்தை மாவீரர்களுக்கு அஞ்சலி செய்து புனைந்துள்ளேன். களத்தில் போராடி விழுப்புண் தாங்கிய எனது மாவீரனுக்கு "ஆதன்" என்பது பெயராகும். கீழடி அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த பானையொன்றில் பல நூறு ஆண்டுகளுக்கு முன் பொறிக்கப்பட்ட நாமம் இது. நமது புலம் பெயர் தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் பதிய மகனுக்குச் சூட்டி மகிழக்கூடிய அழகிய பெயராகும். மாவீரர்களுக்கான வீரவணக்கம்

(தொடர்ச்சி 29ம் பக்கம்)